தொகுதி 6, இதழ் 21

மே 1–15, 2026

இலவச விநியோகத்திற்கு

நியூ இந்தியா சமாச்சார்



மக்கள்தொகையில் சரிபாதி உள்ளவர்களுக்கு முழுமையான உரிமைகள்

இட ஒதுக்கீடு வழங்க அரசு உறுதிபூண்டுள்ளது

நாடாளுமன்றக் கணக்கீடுகள் மகளிருக்கு அதிகாரமளிக்கத் தடையாக இருந்தாலும், 33% இடஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது. மக்கள் தொகையில் சரிபாதியாக உள்ள மகளிர் உரிமைகளுக்கான போராட்டம் இப்போது ஒரு உறுதியான திருப்பு முனையை எட்டியுள்ளது.

மின்–நகலுக்கு

சர்வதேசக் குடும்பங்கள் தினம் | மே 15


குடும்ப விழுமியங்களைப் போற்றுதல்

ஒரு வலுவான தேசத்தைக் கட்டமைப்பதில் குடும்பம் என்பது ஈடு இணையற்ற ஒரு நிறுவனமாகும். இது தனிமனித மேம்பாட்டிற்கு மட்டுமின்றி, சமூக முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்கிறது. இந்தியாவில், உறவுகளுக்கும் குடும்ப அமைப்பிற்கும் மிக உயர்ந்த மரியாதை அளிக்கப்படுகிறது. சர்வதேசக் குடும்பங்கள் தினத்தில், இந்தியா ஒட்டுமொத்த உலகையுமே ஒரு குடும்பமாகக் கருதுகிறது என்பதை வலியுறுத்துவது அவசியமாகும். பிரதமர் மோடி பலமுறை இதைக் குறிப்பிட்டுள்ளார்: "நாம் 'உலகம் ஒரு குடும்பம்' என்ற ஒரு வழிகாட்டும் கொள்கையைக் கொண்டுள்ளோம்."

2026–ஆம் ஆண்டிற்கான சர்வதேசக் குடும்பங்கள் தினத்தின் கருப்பொருள்:
“குடும்பங்கள், ஏற்றத்தாழ்வுகள் இல்லாமை மற்றும் குழந்தைகளின் நல்வாழ்வு.”

மே 15 அன்று கடைப்பிடிக்கப்படும் சர்வதேசக் குடும்பங்கள் தினம், உலகம் முழுவதும் உள்ள குடும்பங்கள், தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் கலாச்சாரங்களின் முக்கியத்துவத்தைக் கொண்டாடுவதற்கான ஒரு வாய்ப்பாக அமைகிறது.

குடும்பங்களுக்கு இடையேயான ஒற்றுமையை வளர்க்கவும், குடும்பங்கள் தொடர்பான சிக்கல்கள் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஐநா பொதுச்சபை நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.



“நாட்டின் 140 கோடி மக்களே எனது குடும்பம். இன்று, இந்த நாட்டின் கோடிக்கணக்கான மகள்கள், தாய்மார்கள் மற்றும் சகோதரிகள் ‘மோடியின் குடும்பமாக’ உள்ளனர். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு ஏழையும் எனது குடும்பமே. “யாரும் அற்றவர்களுக்கு, மோடியே துணையாக இருக்கிறார்.” அவர்கள் மோடிக்குச் சொந்தமானவர்கள். ‘எனது இந்தியா, எனது குடும்பம்’ என்ற உணர்வை முன்னெடுத்துச் சென்று, கனவுகளை நனவாக்கும் உறுதியுடன், உங்களுக்காகவே நான் வாழ்கிறேன், உங்களுக்காகவே உழைக்கிறேன், தொடர்ந்து உங்களுக்காகவே உழைப்பேன்.”

பிரதமர் நரேந்திர மோடி

140 கோடி நாட்டு மக்கள்: பிரதமர் மோடியின் குடும்பம்

- 2023, ஆகஸ்ட் 15 அன்று, செங்கோட்டை கொத்தளத்திலிருந்து உரையாற்றியபோது, வழக்கமாகப் பயன்படுத்தப்படும் "சகோதர சகோதரிகளே" அல்லது "நாட்டு மக்களே" என்ற சொற்களுக்கு பதிலாக, முதல்முறையாக அவர் "140 கோடி குடும்ப உறுப்பினர்களே" என்று நாட்டு மக்களை குறிப்பிட்டார்.
- 2024, மார்ச் மாதத்தில் பிரதமர் மோடி இந்த 140 கோடி குடும்ப உறுப்பினர்களுக்கும் ஒரு கடிதம் எழுதினார்.
- அவர் ராணுவத்தினரையும் குடும்பமாகவே கருதுகிறார். ஒவ்வொரு ஆண்டும் தீபாவளியைக் கொண்டாட அவர்களைச் சந்திக்கிறார்.
- தனக்கென குடும்பம் இல்லாத நிலையில் அவர் ஏன் இவ்வளவு அயராது உழைக்கிறார் என்று ஒரு நிகழ்ச்சியில் கேட்கப்பட்டபோது, பிரதமர் மோடி இவ்வாறு பதிலளித்தார்: எனது குடும்பம் 140 கோடி மக்களைக் கொண்டது, இதனால்தான் நான் இன்னும் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது.

NEW INDIA SAMACHAR

VOLUME 6, ISSUE 21 | MAY 1-15, 2026

EDITOR IN CHIEF
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

CHIEF CONSULTING EDITOR
SANTOSH KUMAR

SENIOR ASST. CONSULTING EDITOR
PAWAN KUMAR

ASST. CONSULTING EDITORS
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

LANGUAGE EDITORS
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

SENIOR DESIGNER
PHOOL CHAND TIWARI

DESIGNERS
ABHAY GUPTA
SATYAM SINGH



CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES
https://newindiasamachar.pib.gov.in/news.aspx
TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'

உள் பக்கங்களில்...

33% மகளிர் இட ஒதுக்கீடு
ஜனநாயக உறுதிப்பாட்டின்
பிரகடனம்...



புதிய இந்தியாவும் பெண்கள் தலைமையிலான தலைமைத்துவமும்
அட்டைப்படக் கட்டுரை

"ஏப்ரல் 16 முதல் 18 வரை ஜனநாயகத்தின் கோயிலான நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சிறப்பு அமர்வின் வாயிலாக, மத்திய அரசு 'மகளிர் சக்தி' தலைமையிலான வளர்ச்சிப் பயணத்தில் தனக்கிருக்கும் அசைக்க முடியாத உறுதியை மீண்டும் ஒருமுறை பறைசாற்றியுள்ளது. இந்தப் 'புதிய இந்தியா' இப்போது ஒரு புதிய விடியலை நோக்கி நடைபோடத் தொடங்கியுள்ளது. இது ஒவ்வொரு பெண்ணும் வெறும் கனவு காண்பதோடு நின்றுவிடாமல், தனது துணிவு, உறுதிப்பாடு, படைப்பாற்றல் ஆகியவற்றால் அந்தக் கனவுகளை நனவாக்கி, நாட்டின் எதிர்காலத்தை ஒளிரச் செய்யும் ஒரு புதிய யுகமாகும்."
| 12–34

நாட்டு மக்களுக்குப் பிரதமரின் உரை
| 35–36

மகாத்மா ஜோதிராவ் ஃபுலே
இந்தியாவின் தெய்வீகமான வழிகாட்டும் ஒளிவிளக்கு



ஒரு மாபெரும் சமூக சீர்திருத்தவாதியின் 200–வது பிறந்தநாளில், பிரதமர் நரேந்திர மோடியின் சிறப்பு கட்டுரை | 6–7

ஆபரேஷன் சிந்தூரின் ஓராண்டு
தற்சார்பு பாதுகாப்பு அமைப்புகளின் புதிய சகாப்தத்தின் விடியல்



இது ஒரு ராணுவ நடவடிக்கையின் ஆண்டுக் கொண்டாட்டம் மட்டுமல்ல, இந்தியாவின் உறுதியான பாதுகாப்புக் கொள்கை மற்றும் ஆயுதப் படைகளின் தளராத வீரத்தின் கொண்டாட்டமாகும்
| 8–11

செய்திச் சுருக்கங்கள | 4–5

2026 கரீ:ப் பருவத்திற்கான உர மானியம்
ஜெய்பூர் மெட்ரோ நீட்டிப்பிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் | 37–39

பாதுகாப்பான குடும்பங்கள், உறுதியான எதிர்காலம்
முக்கியத் திட்டங்களின் 11 ஆண்டுகள்: பிளம்எஸ்பிஒய், பிளம்ஜேஜேபிஒய் மற்றும் ஏபிஒய் | 40–43

வளர்ச்சி மற்றும் இயற்கையின் வழித்தடம்: தில்லி-டேராடூன் விரைவுச்சாலை
தில்லி–டேராடூன் வழித்தடத்தைப் பிரதமர் மோடி தொடங்கிவைத்தார் | 44–45

மாநிலங்களவை செயல்பாடு 110% மற்றும் மக்களவை செயல்பாடு 93% எட்டியுள்ளது
நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் காலவரையின்றி ஒத்திவைப்பு | 50–52

கர்நாடகா: தத்துவம், தொழில்நுட்பம் ஆகிய இரண்டிலும் வளமானது
ஸ்ரீ குரு பைரவைக்யா கோயிலைப் பிரதமர் மோடி திறந்து வைத்தார் | 53

ஆளுமை: மேஜர் ஹோஷியார் சிங்
பாகிஸ்தான் ராணுவத்தை அச்சத்தால் ஓடச் செய்தவர் | 54

மே 1 சிறப்பு அம்சம்: தொழிலாளர் தினம்
உழைப்பே வெல்லும்

சர்வதேச உழைப்பாளர் தினத்தில், தொழிலாளர் வர்க்கத்தை வலுப்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்த சிறப்பு அறிக்கை...
| 46–49



Published: Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau of Communication
Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003.
E-Mail : response-nis@pib.gov.in, RNI No. : DELENG/2020/78811

ஆசிரியரின் மேசையிலிருந்து...

பெண்களுக்கான 33% இட ஒதுக்கீட்டை செயல்படுத்துவதற்கான முயற்சிகள்

வணக்கம்,

यत्र नार्यस्तु पूज्यन्ते रमन्ते तत्र देवताः।
यत्रैतास्तु न पूज्यन्ते सर्वास्तत्राफलाः क्रियाः ॥

இதன் பொருள்: "எந்த இடத்தில் பெண்கள் போற்றப்படுகிறார்களோ, அந்த இடத்தில் தெய்வங்கள் வாழ்கின்றன; எந்த இடத்தில் அவர்கள் கௌரவிக்கப்படவில்லையோ, அந்த இடத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் பயனற்றவை."

இந்திய மரபில், பெண்கள் என்பவர்கள் சக்தி, படைப்பு மற்றும் தலைமைத்துவத்தின் அடிப்படையாகக் கருதப்படுகின்றனர். இப்போது, இந்தத் தத்துவம் உறுதியான கொள்கை வடிவம் பெற்றுள்ளது. இதில் மகளிர் வெறும் பயனாளிகளாக மட்டும் பார்க்கப்படாமல், வளர்ச்சியின் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர். கடந்த சில ஆண்டுகளில், மகளிருக்கு வாய்ப்புகள், வளங்கள் மற்றும் முடிவெடுக்கும் அதிகாரத்தில் பங்கேற்பு வழங்கப்பட்டபோது, அவர்கள் ஒவ்வொரு துறையிலும் புதிய உயரங்களைத் தொடுகிறார்கள் என்பது தெளிவாகியுள்ளது.

ஆயுதப் படைகள் முதல் ஸ்டார்ட்அப்கள் வரை, விளையாட்டுகள் முதல் அறிவியல் மற்றும் ஆராய்ச்சி வரை, நமது நாட்டின் புதல்விகள் தங்கள் திறமையாலும் விடாமுயற்சியாலும் புதிய பரிமாணங்களை உருவாக்கி வருகின்றனர். இந்த மாற்றம் வெறும் அடையாளபூர்வமானது மட்டுமல்ல; இது மகளிர் பங்கேற்பையும் தலைமைத்துவத்தையும் அதன் மையத்தில் வைத்திருக்கும் கொள்கை முன்னுரிமைகளின் நேரடி விளைவாகும்.

மகளிருக்கான இட ஒதுக்கீட்டைச் சாத்தியமாக்கும் முயற்சி, இந்த விரிவான தொலைநோக்குப் பார்வையின் ஓர் அங்கமாகும். நாடாளுமன்றத்தில் தேவையான ஆதரவு கிடைக்கவில்லை என்றாலும், மகளிருக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவதில் அரசு தனது உறுதியைக் கடைப்பிடிக்கிறது. 'மகளிர் சக்தி'க்கு முழுமையான அதிகாரமளித்தலையும் மறுமலர்ச்சியையும் உறுதி செய்தால்தான் அமிர்த காலத்தில் 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற லட்சியம் நிறைவேறும். இது அரசின் பொறுப்பு மட்டுமல்ல, மகளிரின் கண்ணியம், சம வாய்ப்புகள் மற்றும் தலைமைத்துவத்தை ஊக்குவிப்பது சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரின் கடமையாகும். இதுவே அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான பாதையாகவும், தேசத்தின் உண்மையான முன்னேற்றத்திற்கு அடிப்படையாகவும் அமைகிறது. இந்த பின்னணியில், மகளிர் தலைமையிலான வளர்ச்சியின் 12 ஆண்டு காலப் பயணம், இந்த இதழின் அட்டைப்பக்கக் கட்டுரையாக இடம்பெற்றுள்ளது.

மேலும், பல்வேறு தகவல்கள் இந்த இதழில் அடங்கியுள்ளன: பரம் வீர் சக்ரா விருது பெற்ற மேஜர் ஹோஷியார் சிங்கின் வாழ்க்கை வரலாறு; மத்திய அமைச்சரவை முடிவுகள் குறித்த புதிய தகவல்கள்; பிரதமரின் சுரக்ஷ பீமா ஆயுள் காப்பீட்டுத் திட்டம், பிரதமரின் ஜீவன் ஜோதி விபத்துக் காப்பீட்டுத் திட்டம், அடல் ஓய்வூதியத் திட்டம் போன்ற முக்கியத் திட்டங்களின் 11–வது ஆண்டு நிறைவு குறித்த சிறப்பு அம்சங்கள்; உழைப்பாளர் தினம் (மே 1) மற்றும் 'ஆபரேஷன் சிந்தூர்' ஓராண்டு நிறைவு குறித்த சிறப்புச் செய்திகள்; மகாத்மா ஜோதிராவ் ஃபுலே பற்றிய சிறப்புக் கட்டுரை; கடந்த இரு வாரங்களில் பிரதமர் நரேந்திர மோடியின் பணிகள் குறித்த விரிவான கண்ணோட்டம் ஆகியவை இதில் உள்ளன.

கூடுதலாக, இந்த இதழின் உள்பக்கங்களில் சர்வதேசக் குடும்பங்கள் தினம் (மே 15) குறித்த சிறப்பு உள்ளடக்கங்களும், பின் அட்டையில் மே 7–ம் தேதி கடைப்பிடிக்கப்படும் எல்லைப்புற சாலைகள் அமைப்பின் (BRO) நிறுவன தினம் குறித்த தகவல்களும் இடம்பெற்றுள்ளன.


உங்களின் மதிப்புமிக்க ஆலோசனைகளைத் தொடர்ந்து எங்களுக்கு அனுப்ப நாங்கள் ஊக்குவிக்கிறோம்.



(தீரேந்திர ஓஜா)

இந்த இதழை இந்தி, ஆங்கிலம் மற்றும் 11 மொழிகளில் படிக்க அல்லது பதிவிறக்கம் செய்யலாம். *https://newindiasamachar.pib.gov.in/*

மின்னஞ்சல் பெட்டி





பரம் வீர் சக்ரா விருது பெற்றவரின் கதையால் ஊக்கம் பெற்றேன்

நான் 'நியூ இந்தியா சமாச்சார்' இதழின் வழக்கமான வாசகன். 2026 மார்ச் 1–15 தேதியிட்ட வங்காள மொழிப் பதிப்பில், பரம் வீர் சக்ரா விருது பெற்ற ஆயுதப்படைவீரர் சஞ்சய் குமாரின் வீரம் பற்றி வந்துள்ள கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. அந்தக் கட்டுரை தொடர்பாக, எனது வாழ்க்கையில் நடந்த மிகவும் பெருமைக்குரிய, மறக்க முடியாத ஒரு தருணத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். 2000, டிசம்பர் 8 அன்று, ஜம்மு கன்டோன்மென்ட்டில், ரைஃபிள்மேன் சஞ்சய் குமாரை நேரில் சந்திக்கும் பேறு பெற்றேன். இந்தியாவின் வீர நாயகர்களின் கதைகளைப் பகிர்ந்து எங்களைத் தொடர்ந்து ஊக்கப்படுத்துவதற்கு நன்றி.

debu.mohorrier@gmail.com

இந்தியாவின் வளர்ச்சி பற்றிய உண்மையான கருத்துகள்

அண்மைக்காலமாக 'நியூ இந்தியா சமாச்சார்' இதழைத் தொடர்ந்து பெறும் நபராக நான் இருக்கிறேன். இந்த இதழின் மூலம், இந்தியாவின் முன்னேற்றம் குறித்த நம்பகமான மற்றும் துல்லியமான தகவல்களை நாங்கள் பெறுகிறோம். பிரதமர் மோடி தலைமையின் கீழ் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்த தகவல்களை இது வழங்குகிறது. இது நாட்டின் குடிமக்களுக்கு மிகுந்த ஊக்கமளிக்கிறது. இது நமது நாட்டின் பெருமை, கௌவுரவம் மற்றும் புகழை மேலும் அதிகரிக்க உதவுகிறது. இந்த இதழின் மூலம் இத்தகைய மதிப்புமிகு தகவல்களை எங்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக உங்களுக்கும் உங்கள் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

விஜய் மோரியர் | vastutejomay58@gmail.com

சிக்கலான விஷயங்களுக்கு எளிமையான மொழியில் விளக்கம்

'நியூ இந்தியா சமாச்சார்' இதழின் 2026 மார்ச் 1 முதல் 15 வரையிலான இருவார இதழைப் படித்த பின் எனது அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இந்த இதழ் மிகவும் பயனுள்ளதாகவும், எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாகவும், ஈடுபாட்டைத் தூண்டுவதாகவும் இருந்தது. நாட்டின் முன்னேற்றம், அரசின் புதிய திட்டங்கள் மற்றும் சமகாலப் பிரச்சனைகளை மிக எளிமையாகவும் எளிதில் புரியும் மொழியிலும் இந்த இதழ் வழங்குகிறது. உள்கட்டமைப்பு மேம்பாடு, இணையப் பாதுகாப்பு, சுகாதார சேவைகள், 6ஜி தொழில்நுட்பம், ரயில்வே, விண்வெளித் துறை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பற்றிப் படிப்பது, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் தெளிவான தோற்றத்தை வழங்குகிறது. சிக்கலான விஷயங்கள் கூட எளிமையாக்கப்பட்டு, ஒரு சாதாரண வாசகருக்கும் புரியும் வகையில் விளக்கப்பட்டிருப்பதை நான் குறிப்பாகப் பாராட்டுகிறேன். மேலும், வழங்கப்பட்ட தகவல்கள் நம்பகமானவை; மிகவும் பயனுள்ளவை. நடப்பு நிகழ்வுகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வழங்குவதால், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு இந்த இதழ் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஒரு வாசகராக, இந்த இதழ் தகவல் நிறைந்ததாகவும், ஊக்கமளிப்பதாகவும் இருப்பதைக் காண முடிகிறது. வருங்காலத்திலும் இது போன்ற பயனுள்ள இதழ்கள் தொடர்ந்து வெளியாக வேண்டும் என்பது எனது விருப்பம்.

அபிஜித் யாஷ் பாரதி | abhijeetyashbharti@gmail.com

'என்ஐஎஸ்' இதழை நேபாள மொழியிலும் வெளியிடக் கோரிக்கை

இந்தி உட்பட 13 இந்திய மொழிகளில் வெளியாகும் 'நியூ இந்தியா சமாச்சார்', நாட்டின் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அரசின் பொது நலத் திட்டங்கள் குறித்த தகவல்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைந்தேன். முடிந்தால், இந்த இதழை நேபாள மொழியிலும் வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள். எனது கோரிக்கையை நீங்கள் பரிசீலிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

பிர்க் கட்கா துவார்செலி | birkhakd@gmail.com

Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003

E-Mail: response-nis@pib.gov.in

இந்தியாவின் அணுசக்திப் பயணத்தில் ஒரு புதிய அத்தியாயம்

இந்தியாவின் அணுசக்தித் துறையில் குறிப்பிடத்தக்க ஒரு மைல்கல் எட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட முன்மாதிரி அதிவேக ஈனுலை தனது முதலாவது செயல்பாட்டை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. இதன் மூலம், தானாகவே தொடர்ச்சியாகச் செயல்படும் நிலையை இந்த ஈனுலை எட்டியுள்ளது. இந்த வெற்றியின் மூலம், இந்திய அணுசக்தித் திட்டத்தின் தந்தை டாக்டர் ஹோமி ஜஹாங்கீர் பாபா தொலைநோக்கோடு உருவாக்கிய மூன்றடுக்கு அணுசக்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்குள் இந்தியா அதிகாரபூர்வமாக நுழைந்துள்ளது. இந்தச் சாதனை உலக அளவில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த அணு உலை முழுமையாகச் செயல்படத் தொடங்கும்போது, ரஷ்யாவிற்கு அடுத்தபடியாக வணிக ரீதியிலான அதிவேக ஈனுலையை இயக்கும் உலகின் இரண்டாவது நாடு என்ற பெருமையை இந்தியா பெறும். 500 மெகாவாட் திறன் கொண்ட இந்த அணு உலையானது, மிகக் குறைந்த எரிபொருளைக் கொண்டு அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஆற்றல் கொண்டது. இது யுரேனிய வளங்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்த உதவுவதோடு, இந்தியாவிடம் உள்ள ஏராளமான தோரியம் கையிருப்பைப் பயன்படுத்தி வருங்காலத்தில் மின்சாரம் தயாரிப்பதற்கும் புதிய பாதையை அமைத்துத் தந்துள்ளது.



காற்றாலை மின்சக்தி துறையில்
இதுவரை இல்லாத அதிக வளர்ச்சி பதிவாகியுள்ளது

இந்தியாவின் காற்றாலை மின்னுற்பத்தித் துறையில் ஏற்பட்டுள்ள அபரிமிதமான வளர்ச்சியைப் பறைசாற்றும் வகையில், 2025–26-ம் நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவாக 6.05 ஜிகாவாட் கூடுதலாக உற்பத்தித்திறன் எட்டப்பட்டுள்ளது. இது, இதற்கு முன்னர் 2016–17 நிதியாண்டில் எட்டப்பட்ட 5.5 ஜிகாவாட் சாதனையை முறியடித்துள்ளது. மேலும், கடந்த 2024–25 நிதியாண்டின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது சுமார் 46% உயர்வாகும். இச்சாதனை இந்தியாவின் கடற்கரை காற்றாலை மின்னுற்பத்தி துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் குறிக்கிறது. குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் காற்றாலை மின் உற்பத்தியிலும், புதிய திறன் சேர்ப்பிலும் முன்னிலை வகிக்கின்றன. இத்தகைய வளர்ச்சி, 2030-க்குள் 500 ஜிகாவாட் புதைபடிவமற்ற எரிசக்தி திறனை எட்ட வேண்டும் என்ற இந்தியாவின் இலக்கை அடைவதில் முக்கியப் பங்காற்றுகிறது. அரசின் முற்போக்கான கொள்கைகளால், காற்றாலை மின்சக்தியில் உலகின் முன்னணிச் சந்தைகளில் ஒன்றாக இந்தியா இப்போது உருவெடுத்துள்ளது. இதற்கிடையே, 'புதுப்பிக்கத்தக்க எரிசக்தி புள்ளிவிவரம் 2026'-ன் படி, நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனில் பிரேசிலைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா உலக அளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. 2025–26 நிதியாண்டில் மட்டும் இந்தியா 55.3 ஜிகாவாட் புதைபடிவமற்ற எரிசக்தி திறனைச் சேர்த்துள்ளது. இதன் விளைவாக, 2026, மார்ச் 31 நிலவரப்படி, நாட்டில் புதைபடிவமற்ற எரிசக்தி ஆதாரங்களில் இருந்து மொத்தம் 283.46 ஜிகாவாட் மின் உற்பத்தித் திறன் நிறுவப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



இந்தியக் கடற்படையில் 'ஐஎன்எஸ் தாராகிரி' போர்க்கப்பல் இணைப்பு

ஆந்திரப் பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில் ஏப்ரல் முதல் வாரத்தில், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில், 'புராஜெக்ட் 17–ஏ' ரகத்தின் நான்காவது சக்திவாய்ந்த போர்க்கப்பலான 'ஐஎன்எஸ் தாராகிரி' இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது. போர்க்கப்பல் வடிவமைப்புப் பிரிவால் வடிவமைக்கப்பட்ட இந்தக் கப்பல், நவீன கப்பல் கட்டுமானத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். மிகக் குறுகிய காலத்தில் கட்டப்பட்ட இந்தக் கப்பலில் 75 சதவீதத்திற்கும் அதிகமான உள்நாட்டுத் தயாரிப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது இந்தியாவின் கப்பல் கட்டுமானத் திறன் மற்றும் அரசு – தனியார் துறை இடையிலான வலுவான கூட்டாண்மைக்குச் சான்றாகும். வேகமாகச் செல்லும் திறன் கொண்ட இந்தக் கப்பல், நீண்ட காலத்திற்கு கடலில் நிலைநிறுத்தக்கூடியது. எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்தல், தனது பாதுகாப்பை உறுதி செய்தல், தேவைப்பட்டால் உடனடியாக பதிலடி கொடுத்தல் ஆகியவற்றுக்கான சிறப்பு அமைப்புகளை இது கொண்டுள்ளது. மேலும், நவீன ரேடார், சோனார், பிரம்மோஸ் ஏவுகணைகள் போன்ற மேற்பரப்பில் இருந்து வான் இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகளைக் கொண்டுள்ளதால், இதன் செயல்பாட்டுத் திறன் மிகவும் வலுவாக உள்ளது.



ரூ. 18.4 லட்சம் கோடி மொத்த வணிக மதிப்பை ஜெம் தளம் எட்டியுள்ளது

அரசு இ-சந்தை தளம், இதுவரை திரட்டப்பட்ட மொத்த வணிக மதிப்பில் ரூ. 18.4 லட்சம் கோடியை எட்டியுள்ளது. 2025-26 நிதியாண்டில், இத்தளத்தில் வைக்கப்பட்ட மொத்த ஆர்டர்களில் 68 சதவீதத்தை குறு, சிறு நிறுவனங்கள் பெற்றுள்ளன. இது மொத்தப் பரிவர்த்தனை மதிப்பில் 47.1 சதவீதமாகும். தற்போது இத்தளத்தில் 11 லட்சத்திற்கும் அதிகமான சிறு நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன. 2025-26 நிதியாண்டில், இந்த நிறுவனங்கள் ரூ. 2.36 லட்சம் கோடி மதிப்பில் 51 லட்சத்திற்கும் அதிகமான ஆர்டர்களைப் பெற்றுள்ளன. இது முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியாகும். மேலும், 2.1 லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் தலைமையிலான சிறு நிறுவனங்கள் இந்தப் போர்ட்டலில் பதிவு செய்யப்பட்டுள்ளன; இந்த நிறுவனங்கள் 28,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான ஆர்டர்களைப் பெற்றுள்ளன.


உலகின் முதலாவது விக்ரமாதித்ய வேதகாலக் கடிகாரம் காசியில் நிறுவப்பட்டுள்ளது



இந்தியக் காலக்கணிப்பு முறையின் பெருமை, காசியின் புனித மண்ணில் வெளிப்பட்டுள்ளது. உலகின் முதலாவது "விக்ரமாதித்ய வேதகாலக் கடிகாரம்" வாரணாசியில் உள்ள ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோவிலில் நிறுவப்பட்டுள்ளது. 700 கிலோ எடையுள்ள, தொழில்நுட்பம் சார்ந்த இந்த சாதனம், பண்டைய இந்தியப் பஞ்சாங்கத்தின் அடிப்படையில் நேரத்தைக் காட்டுகிறது. இதில் ஒரு நாள் என்பது சூரிய உதயத்தில் தொடங்கி 30 முகூர்த்தங்களாகப் பிரிக்கப்படுகிறது. இந்தக் கடிகாரம் தித்தி, நட்சத்திரம் மற்றும் கிரக நிலைகளைக் காட்டுகிறது. சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரை 30 முகூர்த்தங்களாக நேரத்தைப் பிரிக்கும் இந்த முறை, நமது பண்டைய முனிவர்களின் ஆழ்ந்த அறிவியல் பார்வையை எடுத்துரைக்கிறது. இது நேரத்தைக் கணக்கிடும் கருவியாக மட்டுமின்றி, நமது கலாச்சாரத்தின் ஒரு வெளிப்பாடாகவும் திகழ்கிறது.


டிஎல்சி இயக்கம் 4.0:

ஓய்வூதியதாரர்களின் நலனுக்கான மாபெரும் இயக்கம்



ஓய்வூதியதாரர்களுக்கு ஆயுள் சான்றிதழ் சமர்ப்பிப்பதில் டிஜிட்டல்மயமாக்கலின் நன்மைகளைக் கொண்டு சேர்ப்பதற்காக, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலத்துறை 2022 நவம்பர் மாதம் முதல் டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் இயக்கங்களை நடத்தி வருகிறது. இந்த இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1 முதல் நவம்பர் 30 வரை நாடு முழுவதும் உள்ள குறிப்பிட்ட நகரங்களில் முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் 2,000 நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் 75,000 முகாம்கள் நடத்தப்பட்டன. இந்தக் காலகட்டத்தில், 1.91 கோடிக்கும் அதிகமான டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ்கள் உருவாக்கப்பட்டன. இதில் 1.16 கோடிக்கும் அதிகமானவை (60%) முக அங்கீகார தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டன. டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் என்பது ஓய்வூதியதாரர்களுக்கான ஒரு டிஜிட்டல் சேவையாகும். இது ஓய்வூதியதாரர்கள் தங்கள் வீட்டில் இருந்தபடியே, ஸ்மார்ட்போன் மற்றும் முக அங்கீகார தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி,ஆதார் அடையாள எண் அடிப்படையில் தங்கள் ஆயுள் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க உதவுகிறது.

மகாத்மா ஜோதிராவ் ஃபுலே
இந்தியாவின் தெய்வீகமான வழிகாட்டும் ஒளிவிளக்கு



நரேந்திர மோடி,
பிரதமர்

இந்த ஆண்டு ஏப்ரல் 11 அன்று, சிறந்த சமூக சீர்திருத்தவாதியான மகாத்மா ஜோதிராவ் ஃபுலேயின் 200–வது பிறந்தநாள் கொண்டாட்டங்கள் தொடங்கின. இந்தச் சிறப்புமிக்க தருணத்தை முன்னிட்டு, பிரதமர் நரேந்திர மோடி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில், மகாத்மா ஃபுலே இன்றும் எண்ணற்ற மக்களுக்கு எவ்வாறு ஊக்கமளிக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார் என்பதையும், கல்வி, அறிவு, பொதுநலன் ஆகியவற்றின் மீது அவர் கொண்டிருந்த அழுத்தம், நமது சமகாலத்தில் எந்த அளவிற்குப் பொருத்தமாக உள்ளது என்பதையும் அவர் பகிர்ந்துள்ளார்.

மகாத்மா ஃபுலே ஒரு சிறந்த சீர்திருத்தவாதி. அதுமட்டுமின்றி, அவரது வாழ்க்கை அறநெறி சார்ந்த துணிச்சல், ஓயாத தேடல், சமூக நலனுக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடையாளமாக இருந்தது. மகாத்மா ஃபுலே உருவாக்கிய கல்வி நிறுவனங்கள் மற்றும் அவர் முன்னெடுத்த இயக்கங்களுக்காக நினைவுகூரப்படுகிறார். அதே நேரத்தில், நமது நாகரிகப் பயணத்தில் அவரது பங்களிப்பு என்பது, அவர் விதைத்த நம்பிக்கை, அவர் ஏற்படுத்திய தன்னம்பிக்கை, இன்று நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு அவரது சிந்தனைகள் அளித்து வரும் வலிமை ஆகியவற்றில் அடங்கியுள்ளது.

1827ம் ஆண்டு மகாராஷ்டிராவின் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்த மகாத்மா ஜோதிராவ் ஃபுலே, வறுமையையும் சவால்களையும் கண்டு அஞ்சாமல், தனது அறிவுத்திறத்தாலும், துணிச்சலாலும், சமூகத்தின் மீதான அர்ப்பணிப்பாலும் உயர்ந்து நின்றார். "சவால்களைக் கண்டு ஒதுங்கி இருக்காமல், கடினமாக உழைத்து, அறிவை வளர்த்து, அந்தச் சவால்களை முறியடிக்க வேண்டும்" என்பதே அவரது வாழ்க்கையின் தாரக மந்திரமாக இருந்தது. பள்ளிப் பருவத்திலிருந்தே மிகுந்த தேடல் குணம் கொண்டவராக இருந்த அவர், தனது வயதை ஒத்த மற்ற குழந்தைகளை விடக் கூடுதலான புத்தகங்களை ஆர்வமுடன் வாசித்தார். "நாம் எழுப்பும் கேள்விகள்தான் புதிய அறிவை உருவாக்கும்" என்று அவர் அடிக்கடி குறிப்பிடுவார். கல்வியே மகாத்மா ஃபுலேயின் வாழ்நாள் பணியின் மையப்புள்ளியாக இருந்தது. அறிவு என்பது சிலருக்கான சலுகை அல்ல, அது அனைவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டிய ஒரு சக்தி என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். கல்வியின் பயன் பலருக்கும் மறுக்கப்பட்ட அக்காலகட்டத்தில், அவர் பெண்களுக்கும், முறையான கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்ட மக்களுக்கும் முன்னோடிப் பள்ளிகளைத் திறந்து வைத்தார். "தாய்மார்கள் மூலம் குழந்தைகளுக்குக் கிடைக்கும் முன்னேற்றமே மிகவும் மதிப்புமிக்கது. எனவே, பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என்றால், அவை முதலில் பெண்களுக்காகவே திறக்கப்பட வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார். வகுப்பறையை நீதிக்கான மற்றும் சமத்துவத்திற்கான ஒரு கருவியாக மாற்ற அவர் பாடுபட்டார்.

அவரது கல்வி குறித்த தொலைநோக்குப் பார்வை இன்றும் நம்மை ஊக்கப்படுத்துகிறது. கடந்த பத்து ஆண்டுகளில், இந்தியாவின் இளைஞர்களுக்காக ஆராய்ச்சியும் புத்தாக்கமும் அடித்தளங்களாக மாற்றப்பட்டுள்ளன. இளம் மனங்கள் கேள்விகளைக் கேட்கவும், புதியவற்றைக் கண்டறியவும், புத்தாக்கங்களைச் செய்யவும் ஊக்குவிக்கும் ஒரு சூழலை உருவாக்க மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

அறிவு, திறன் மற்றும் வாய்ப்புகளில் முதலீடு செய்வதன் மூலம், இந்தியாவின் இளைஞர்களைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பவர்களாகவும், தேசிய முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்பவர்களாகவும் இந்தியா வலுப்படுத்தி வருகிறது.

மகாத்மா ஃபுலே தனது சிறுவயது முதலே ஆழ்ந்த தேடல் குணம் கொண்டவராக இருந்தார். தனது வயதை ஒத்த மற்ற குழந்தைகளை விட அவர் அதிக புத்தகங்களைப் படித்தார். “நாம் எவ்வளவு அதிக கேள்விகளை எழுப்புகிறோமோ, அவ்வளவு அதிகமான அறிவு அதிலிருந்து வெளிப்படும்” என்று அவர் அடிக்கடி கூறுவார்.

பிரதமரின் கட்டுரையை வாசிக்க இந்த QR–யை ஸ்கேன் செய்யவும்.

மகாத்மா ஃபுலே தனது அறிவாலும் ஞானத்தாலும், விவசாயம், சுகாதாரம், கிராமப்புற மேம்பாடு போன்ற துறைகளில் ஆழ்ந்த புரிதலைப் பெற்றிருந்தார். "நமது விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் மீதான அநீதி சமூகத்தை பலவீனப்படுத்துகிறது" என்று அவர் அடிக்கடி கூறுவார். வயல்வெளிகளாக இருந்தாலும் சரி, கிராமங்களாக இருந்தாலும் சரி, அன்றாட வாழ்க்கையில் சமூக ஏற்றத்தாழ்வுகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை அவர் நேரில் கண்டார். எனவே, ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் விளிம்புநிலை மக்களின் கண்ணியத்தை உறுதி செய்வதற்காக அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். அதே சமயம், சமூக நல்லிணக்கத்தைப் பேணவும் அவர் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.

மகாத்மா புலே, "जोपर्यंत समाजातील सर्वांना समान अधिकार मिळत नाहीत, तोपर्यंत खरे स्वातंत्र्य मिळत नाही" என்று குறிப்பிட்டார். இதன் பொருள்: "சமூகத்தில் உள்ள அனைவருக்கும் சம உரிமைகள் கிடைக்கும் வரை, உண்மையான சுதந்திரத்தை அடைய முடியாது" என்பதாகும். இந்த நோக்கத்தை நனவாக்க, அவர் தனது தொலைநோக்குப் பார்வையைச் செயலில் காட்டும் அமைப்புகளை உருவாக்கினார். இது ஒரு நியாயமான சமூகத்திற்குப் பங்களிப்பு செய்தது. அவர் நிறுவிய 'சத்யசோதக் சமாஜ்' நவீன இந்தியாவின் மிக முக்கியமான சமூக சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகும். இது சமூக சீர்திருத்தம், சமூக சேவை மற்றும் மனித கண்ணியத்தை மேம்படுத்துவதில் முன்னணியில் இருந்தது. இந்த இயக்கம் பெண்கள், இளைஞர்கள் மற்றும் கிராமப்புறங்களில் வாழும் மக்களின் குரலாகத் திகழ்ந்தது. நீதி, ஒவ்வொரு நபருக்கும் மரியாதை, கூட்டு முன்னேற்ற உணர்வு ஆகியவற்றை மையமாகக் கொண்டிருப்பதன் மூலம் சமூகத்தை வலுப்படுத்த முடியும் என்ற மகாத்மா ஃபுலேயின் உள்ளார்ந்த நம்பிக்கையை இந்த இயக்கம் பிரதிபலித்தது.

அவரது தனிப்பட்ட வாழ்க்கையும் துணிச்சலுக்கான பாடங்களைக் கொண்டிருந்தது. தொடர்ந்து மக்களுக்காகப் பணியாற்றியதும், மக்களிடையே இருந்ததும் அவரது உடல் நலனை பாதித்தது. ஆனால், மிகவும் கடுமையான உடல்நல சவால்களும் அவரது உறுதியைக் குறைக்கவில்லை. முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட பின்னரும், அவர் தொடர்ந்து பணியாற்றி தனது தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றினார். அவரது உடல்நிலை தளர்ந்த போதும் சமூகத்திற்கான அவரது அர்ப்பணிப்பு ஒருபோதும் தளர்வடையவில்லை. இன்றும் கோடிக்கணக்கான மக்களுக்கு, குறிப்பாகப் போராட்டத்திலிருந்து தைரியத்தைப் பெறுபவர்களுக்கு, அவரது வாழ்க்கையின் மிக சக்திவாய்ந்த பரிமாணங்களில் ஒன்றாக இது திகழ்கிறது.

நமது நாட்டின் மிகச்சிறந்த சீர்திருத்தவாதிகளில் ஒருவரான சாவித்ரிபாய் ஃபுலேயைக் குறிப்பிடாமல் மகாத்மா ஃபுலே பற்றிய நினைவுகூரல் முழுமையடையாது. இந்தியாவின் முன்னோடி பெண் ஆசிரியர்களில் ஒருவராக, அவர் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதில் முக்கியப் பங்கு வகித்தார், இதன் மூலம் அவர்களுக்குத் தங்கள் கனவுகளைத் தொடரும் வாய்ப்பை வழங்கினார். மகாத்மா ஃபுலே மறைவுக்குப் பின், அந்தத் தீபத்தைச் சுமந்து சென்ற சாவித்திரிபாய், 1897-ல் பிளேக் நோய் பரவியபோது, பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவை செய்தார். அந்தச் சேவையின் போது அவருக்கும் அந்த நோய்த்தொற்று ஏற்பட்டு, அவர் தனது இன்னுயிரைத் தியாகம் செய்தார். சிந்தனை, தியாகம், செயல் ஆகியவற்றின் மூலம் சமூகத்தை வலுப்படுத்திய சிறந்த ஆளுமைகளால் நமது பூமி பலமுறை ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மாற்றம் வரும் வரை காத்திருக்கவில்லை. மாற்றத்தின் ஊற்றாக அவர்களே மாறினார்கள். பல நூற்றாண்டுகளாக நமது மண்ணில், சமூக முன்னேற்றத்திற்கான குரல் சமூகத்திற்குள்ளிருந்தே எழுந்துள்ளது; துன்பத்தை தெளிவாகக் காண முடிந்தவர்களாலும், அதை விதியாக ஏற்க மறுத்தவர்களாலும் இந்தக் குரல்கள் ஒலிக்கப்பட்டன. அத்தகைய குரல்களில் மகாத்மா ஜோதிராவ் ஃபுலேயும் ஒருவர்.

2022-ம் ஆண்டு புனேயில் மகாத்மா ஃபுலேயின் பிரம்மாண்டமான சிலைக்கு நான் மரியாதை செலுத்திய நிகழ்வு இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. அவரது இருநூறாவது பிறந்தநாள் கொண்டாட்டங்களைத் தொடங்கும் இந்த வேளையில், அவருக்கு செலுத்தும் மிகச் சிறந்த மரியாதை என்பது 'புத்துயிர்' அளிப்பதே ஆகும். கல்வி போன்ற அவருக்கு நெருக்கமான விஷயங்களில் நமது அர்ப்பணிப்பைப் புதுப்பித்தல், அநீதிக்கெதிரான நமது உணர்வுகளைப் புதுப்பித்தல், சமூகம் தனக்குள்ளேயே தன்னை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையைப் புதுப்பித்தல் போன்றவை அவசியமானவை. சமூகத்தின் வலிமை என்பது அறநெறி சார்ந்த தெளிவுடனும் பொது நோக்கத்துடனும் இணையும் போது, இந்தியாவில் அற்புதங்களைச் செய்ய முடியும் என்பதை அவரது வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது. அதனால்தான், அவர் இன்றும் கோடிக்கணக்கான மக்களுக்கு வலுசேர்க்கிறார்; அவரது வார்த்தைகளும் செயல்களும் நம்பிக்கையை விதைக்கின்றன. அவர் பிறந்து ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் கடந்த பிறகும், மகாத்மா ஜோதிராவ் ஃபுலே கடந்த காலத்தின் அடையாளமாக மட்டுமின்றி, இந்தியாவின் எதிர்காலத்திற்கான வழிகாட்டியாகவும் திகழ்கிறார். ●



ஆபரேஷன் சிந்தூர்...

தற்சார்பு பாதுகாப்பு அமைப்புகளின் புதிய சகாப்தத்தின் விடியல்

ஆபரேஷன் சிந்தூரின் ஓராண்டு நிறைவு என்பது ஒரு ராணுவ நடவடிக்கையின் ஆண்டுக் கொண்டாட்டம் மட்டுமல்ல; இது இந்தியாவின் உறுதியான பாதுகாப்புக் கொள்கை, ஆயுதப்படைகளின் அஞ்சாநெஞ்சம், பயங்கரவாதத்திற்கு எதிரான 'சகிப்பின்மை' கொள்கையின் தெளிவான குறியீடாகும். கடந்த ஓராண்டில், இந்த நடவடிக்கை நாட்டின் வியூகத் திறன்களையும், மின்னல் வேகத்தில் பதிலடி கொடுக்கும் வல்லமையையும் பறைசாற்றியுள்ளது. அதே நேரத்தில், தற்சார்பு பாதுகாப்பு அமைப்பு, மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் அசைக்க முடியாத தேசிய உறுதிப்பாட்டின் மூலம் ஒரு புதிய சகாப்தத்தின் விடியலை இது உறுதிசெய்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர், இந்தியாவின் பாதுகாப்பு வரலாற்றில் ஒரு முக்கியமான அத்தியாயமாக உருவெடுத்துள்ளது. இந்த நடவடிக்கை, ராணுவத் துல்லியம், முப்படைகளுக்கு இடையிலான சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் வலுவான தேசியத் தீர்மானத்தின் அடையாளமாக மாறியுள்ளது. இமயமலையின் கடினமான சூழலில் சவால்களை எதிர்கொள்வது, கடல் எல்லைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது அல்லது வான்வழி ஊடுருவல் முயற்சிகளை முறியடிப்பது என ஒவ்வொரு முனையிலும் இந்தியா தனது தயார்நிலை உறுதியையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்தியுள்ளது. இந்தத் திசையில் பயணத்தைத் தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், 'ஆபரேஷன் சிந்தூர்' – என்பதைத் தொடர்ந்து தற்போது 'மிஷன் சுதர்ஷன் சக்ரா' திட்டத்தில் வேகமான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. எதிரிகளிடமிருந்து இந்தியா மீது தொடுக்கப்படும் எந்தவொரு தாக்குதலையும் அல்லது தாக்குதல் முயற்சியையும் அதன் தொடக்கத்திலேயே முறியடிக்கும் திறன் கொண்ட, வலுவான மற்றும் நவீன தற்காப்பு ஆயுத அமைப்புகளை உருவாக்குவதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

இந்திய இராணுவம் பயங்கரவாத உள்கட்டமைப்புகளைத் தாக்கியது, அதன் மூலம் ஏராளமான அச்சுறுத்தல்களை நீக்கியது. இச்சூழலில், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதிநவீன தொழில்நுட்ப அமைப்புகள் தேசியப்

> “கடந்த காலங்களில் இந்தியாவில் பயங்கரவாதச் சம்பவங்கள் நடந்துள்ளன. அதற்குப் பின்னால் இருந்த சூத்திரதாரிகள் எவ்வித அச்சமும் இன்றி, அடுத்தடுத்த தாக்குதல்களைத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், நிலைமை இப்போது முற்றிலும் மாறிவிட்டது. இன்று, ஒவ்வொரு தாக்குதலுக்குப் பிறகும், அந்தத் தாக்குதலின் பின்னணியில் இருப்பவர்கள் நிம்மதியை இழந்துள்ளனர். ஏனெனில், இந்தியா இப்போது தகுந்த, கடுமையான பதிலடியைக் கொடுக்கும் என்பதும், துல்லியமான மற்றும் இலக்கு வைக்கப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் அச்சுறுத்தல்களை முறியடிக்கும் என்பதும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தியா இப்போது ஒரு “புதிய இயல்பு நிலையை” உருவாக்கியுள்ளது.
>
> — பிரதமர் திரு. நரேந்திர மோடி





ட்ரோன் சக்தி: வளர்ந்து வரும் உள்நாட்டுத் தொழில்துறை

முக்கியத் தொழில்துறை அமைப்பாக செயல்படும் இந்திய ட்ரோன் கூட்டமைப்பு, சுமார் 550 ட்ரோன் நிறுவனங்களையும், 5,500 ட்ரோன் விமானங்களையும் பிரதிநிதித்துவம் செய்கிறது. 2030-க்குள் இந்தியாவை சர்வதேச ட்ரோன் மையமாக மாற்றுவதே, இதன் தொலைநோக்குப் பார்வையாகும். இது, இந்திய ட்ரோன் மற்றும் ட்ரோன் எதிர்ப்புத் தொழில்நுட்பங்களின் வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி, பயன்பாடு ஏற்றுமதியை சர்வதேச அளவில் ஊக்குவிக்கிறது.

இந்திய ட்ரோன் சந்தை

$11 பில்லியன் டாலர் இலக்கை 2030-க்குள் எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

12.2% சர்வதேச ட்ரோன் சந்தையில், இந்தியாவின் பங்களிப்பு.



> “ஆகாஷ் ஏவுகணை, பிரமோஸ், ஆகாஷ் தீர் வான் பாதுகாப்பு கட்டுப்பாட்டு அமைப்புமுறை மற்றும் இதர உள்நாட்டு போர் உபகரணங்களின் ஆற்றலை, ‘ஆபரேஷன் சிந்துரின்’போது உலக நாடுகள் பார்த்தன. வீரம் செறிந்த நமது ஆயுதப்படையினரும், புத்தாக்கம், வடிவமைப்பு, உற்பத்தி ஆகியவற்றில் முன்னணியில் இருந்து பணியாற்றிய ‘தொழில்துறை போராளிகளும்’ இந்த ஆபரேஷனின் வெற்றிக்குக் காரணிகளாக விளங்கினர்.
>
> –ராஜ்நாத் சிங், பாதுகாப்பு அமைச்சர்

பாதுகாப்பில் முக்கியப் பங்கு வகித்தன. ட்ரோன் போர்முறை (DRONE WARFARE), பல அடுக்கு வான் பாதுகாப்பு அல்லது மின்னணுப் போர்முறை என எதுவாக இருந்தாலும், இராணுவ நடவடிக்கைகளில் தொழில்நுட்ப ரீதியான சுயசார்பை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் 'ஆபரேஷன் சிந்தூர்' (OPERATION SINDOOR) ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்தது. இந்திய விமானப்படை, பாகிஸ்தானின் சீனத் தயாரிப்பு வான் பாதுகாப்பு அமைப்புகளை முடக்கி, வெறும் 23 நிமிடங்களில் பணியை முடித்து, இந்தியாவின் தொழில்நுட்ப மேன்மையை நிலைநாட்டியது.

ஆபரேஷன் சிந்தூரின் போது இந்திய இராணுவத்தின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து, நிலைதடுமாறிய பாகிஸ்தான், வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவில் உள்ள பல இராணுவ இலக்குகளைத் தாக்க முயற்சித்தது...

உள்ளூர்மயமாக்கல் மூலம் தன்னிறைவு பெறும் ஒரு பாதுகாப்பு சூழல் அமைப்பு

₹38,424 கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதிகள் 2025–26–ம் ஆண்டில் பதிவாகின.


₹50,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதிகளை 2029–ம் ஆண்டுகளுக்குள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு முன், ஏற்றுமதிகளின் மதிப்பு **1,000** கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்தது.

₹3 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான உற்பத்திக்கு 2029–ம் ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

₹1.54 லட்சம் கோடி ரூபாயாக நிதியாண்டு 2023–24–ல் உள்நாட்டுப் பாதுகாப்புத் தொழில்துறை உற்பத்தியின் மதிப்பு இருந்தது.

25% ஆக உள்ள உள்நாட்டு பாதுகாப்புத் தொழில்துறை உற்பத்தியை தனியார் துறையில் அடுத்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் 50% ஆக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



எனினும், ஒருங்கிணைந்த ஆளில்லா வான்வழி அமைப்புமுறை எதிர்ப்புக் கட்டமைப்பாலும், பாதுகாப்பு அமைப்புமுறைகளாலும் இவை செயலிழக்கச் செய்யப்பட்டன. அதே நேரத்தில், மே 8 அன்று காலை நடைபெற்ற எதிர் தாக்குதல் நடவடிக்கைகளின் போது, பாகிஸ்தானின் பல்வேறு இடங்களில் உள்ள வான் பாதுகாப்பு ரேடார்கள், அமைப்புமுறைகளை இந்திய ஆயுதப்படை குறி வைத்தது. லாகூரில் ஒரு வான் பாதுகாப்பு அமைப்புமுறை செயலிழக்கச் செய்யப்பட்டது. தாக்குதல்களின் போது, பாகிஸ்தானின் முக்கிய விமானப்படைத் தளங்களான நூர் கான், ரஹீம் யார் கான் ஆகியவை இந்தியாவால் துல்லியமாகக் குறிவைக்கப்பட்டன. பேரழிவை ஏற்படுத்தும் வகையில் தற்கொலை ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன; ஒவ்வொரு பிரிவும் எதிரி ரேடார் அமைப்புமுறைகள், ஏவுகணை அமைப்புமுறைகள் உள்ளிட்ட முக்கிய இலக்குகளைத் ஒவ்வொன்றாகத் தேடி அழித்தது.

பஹல்காம் தாக்குதல் முதல் ஆபரேஷன் சிந்தூர் வரையிலான நிகழ்வுகள்...

ஏப்ரல் 22 அன்று பஹல்காமில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டது. பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தீவிரவாதிகள், கிராமத்தில் அத்துமீறி நுழைந்து, அங்கிருந்த மக்களிடம் அவர்களின் மதம் குறித்து கேள்வி எழுப்பி, அவர்களைக் கொன்றதன் விளைவாக 26 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 25 இந்தியர்களும் ஒரு நேபாள குடிமகனும் அடங்குவர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஸ்ரீநகருக்கு விரைந்து, தாக்குதலுக்கு உள்ளான இடத்தைப் பார்வையிட்டதுடன், அன்று இரவே உளவுத்துறை நிறுவனங்களுடனும், பாதுகாப்புப் படையினருடனும் அவசர ஆலோசனை நடத்தினார். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தீவிரவாதிகள் நாட்டிலிருந்து தப்பிச் செல்லாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தார். பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், ஏப்ரல் 23, 30 ஆகிய தேதிகளில் பாதுகாப்பு குறித்த மத்திய அமைச்சரவைக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றன. சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கவும், பாகிஸ்தான் குடிமக்களுக்கு சார்க் விசாக்களை ரத்து செய்யவும், ஏப்ரல் 23 அன்று நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பாகிஸ்தான் ஹைகமிஷனர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த பாதுகாப்பு, ராணுவ மற்றும் கடற்படை ஆலோசகர்கள் வேண்டப்படாத நபர்களாக அறிவிக்கப்பட்டனர். மே 6–7 தேதிகளின் இடைப்பட்ட இரவில் 9 தீவிரவாத பதுங்கு குழிகளையும் பயங்கரவாதிகளையும் இந்திய ராணுவம் தாக்கியது. ஆபரேஷன் சிந்தூரின்போது, 125–க்கும் அதிகமான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மே 7 அன்று இரவு 1:22 மணிக்கு, இந்தியாவின் ராணுவ செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குநர், பயங்கரவாதிகளின் மறைவிடங்கள், தலைமையகங்களின் மீது இந்தியா தாக்குதல் நடத்தியதாகவும் இதன் மூலம் தற்காப்புக்கான இந்தியாவின் உள்ளார்ந்த உரிமையை நிலைநாட்டியதாகவும் பாகிஸ்தான் தலைமை இயக்குநரிடம்



‘ஆபரேஷன் சிந்தூர்’ மூலம், பயங்கரவாதிகளுக்குப் பின்புலமாக செயல்பட்டவர்களின் திட்டங்களைப் பிரதமர் நரேந்திர மோடி தவிடுபொடியாக்கினார். பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை ‘ஆபரேஷன் மகாதேவ்’ மூலம் அவர் அழித்தார்.

– அமித் ஷா, மத்திய உள்துறை அமைச்சர்

தெரிவித்தார்.

இந்தியக் குடியிருப்புகளையும், ராணுவ நிலைகளையும் குறிவைத்து, மே 8 அன்று பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல் காரணமாக, ஒரு குருத்வாரா சேதமடைந்ததுடன், ஆலயம் ஒன்று தகர்க்கப்பட்டு, ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்தனர். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, அடுத்த நாளே, பாகிஸ்தானில் உள்ள 11 விமானத் தளங்களை இந்திய விமானப்படை தகர்த்தது. பாகிஸ்தானின் விமானப்படைத் தளங்களையும் வான் பாதுகாப்பு அமைப்புமுறைகளையும் இந்தியா குறிவைத்துத் தாக்கி, அவற்றின் தாக்குதல் திறன்களைத் திறம்பட முடக்கியது. இதற்குப் பின் வேறு வழியின்றி அடைக்கலம் கோர வேண்டிய கட்டாயத்திற்குப் பாகிஸ்தான் தள்ளப்பட்டது. மே 10 அன்று பாகிஸ்தானின் ராணுவ செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குனர், இந்திய தலைமை இயக்குனரைத் தொடர்பு கொண்டதை அடுத்து, மாலை 5 மணிக்கு இந்தியா தாக்குதலை நிறுத்தியது.

ஆபரேஷன் மகாதேவ்

2025 மே 22 அன்று ஆபரேஷன் மகாதேவ் தொடங்கியது. டச்சிகாம் பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் தென்படுவதாக உளவுத்துறையிடமிருந்து அன்று தகவல் கிடைத்தது. கடுங்குளிரையும், உயரமான மலைச் சிகரங்களையும் பொருட்படுத்தாமல் பயங்கரவாதிகளின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் உளவுத்துறை, ராணுவம், மத்திய ரிசர்வ் காவல் படையைச் சேர்ந்த அதிகாரிகளும், வீரர்களும் அப்பகுதியில் நடந்தே ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். ஜூலை 22 அன்று தொலை உணர் கருவிகள் மூலம் தீவிரவாதிகளின் இருப்பு உறுதி செய்யப்பட்டு, ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. மத்திய ரிசர்வ் காவல் படை, ஜம்மு காஷ்மீர் காவல் துறையைச் சேர்ந்த வீரர்கள் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்தனர்; அதைத்தொடர்ந்து நடந்த நடவடிக்கையின்போது, பஹல்காம் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்ற மூன்று பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

ஆபரேஷன் சிந்தூரில் இஸ்ரோவின் பங்களிப்பு

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, குறைந்தபட்சம் 10 செயற்கைக்கோள்கள் நாள் முழுவதும் தொடர்ந்து சீராகப் பணியாற்றியதாக மே 11 அன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இஸ்ரோ தலைவர் வி நாராயணன் குறிப்பிட்டார். செயற்கைக்கோள், ட்ரோன் தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைந்த பயன்பாட்டின் மூலம் 7000 கிலோமீட்டர் தூர கடற்கரைப் பகுதியை இந்தியா கண்காணிக்கிறது.

சுதர்சன் சக்ரா இயக்கம்

இந்தியாவின் தாக்குதல் மற்றும் தடுப்புத் திறன்களை வலுப்படுத்தும் நோக்கத்துடன் சுதர்சன் சக்ரா இயக்கத்தைப் பிரதமர் மோடி அறிமுகம் செய்துள்ளார். இந்தியாவின் வளமான கலாச்சார, தொண்மையான பாரம்பரியத்தில் இருந்து எழுச்சி பெற்று, இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. எதிரிகள் இந்தியாவைத் தாக்க மேற்கொள்ளும் எந்த ஒரு முயற்சியையும் முறியடிக்கும் திறன் கொண்ட ஓர் ஆற்றல் வாய்ந்த ஆயுத அமைப்புமுறையை உருவாக்கும் நோக்கத்தில், சுதர்சன் சக்ரா இயக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. விரைவான, துல்லியமான, ஆற்றல்மிக்க தற்காப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தி, அதன் மூலம் இந்தியாவின் உத்திசார்ந்த சுய உரிமையை வலுப்படுத்தும் வகையில் இந்த முன்முயற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. 2035-க்குள் ஒரு விரிவாக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு கவசத்துடன், அனைத்துப் பொது இடங்களும் முழுமையான பாதுகாப்பு அரணுக்குள் கொண்டு வரப்படும். ●

புதிய இந்தியாவும்,
பெண்களின்
தலைமைத்துவமும்

அட்டைப்பக்கக் கட்டுரை

பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு

ஜனநாயக உறுதிப்பாட்டின்

பிரகடனம் ...



ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்குள் கட்டுண்டு கிடப்பதற்காக அவள் படைக்கப்படவில்லை... மாறாக, புதிய பாதைகளை உருவாக்குவதற்காகவே அவள் விதிக்கப்பட்டிருந்தாள்...

இந்த உறுதி, புதிய இந்தியாவின் சிறப்பான பயணத்தை வழி நடத்துகிறது. மக்கள் தொகையில் சரிபாதிப் பிரிவினரின் உரிமைகளுக்கு அதிகாரம் அளிக்கும் முயற்சிகள், பல தசாப்தங்களாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 21–ம் நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தத்தின் முதல் பாதியைக் கடந்துள்ள நிலையில், பெண்களின் பங்களிப்பை மேலும் வலுப்படுத்தும் உறுதி இன்னும் எழுச்சி பெற்றுள்ளது. கடந்த 12 ஆண்டுகளாக நாட்டின் கொள்கையை வழிநடத்தும் தொலைநோக்குப் பார்வை, வெறும் பெண்களின் முன்னேற்றம் என்ற நிலையிலிருந்து, பெண்களால் வழிநடத்தப்படும் வளர்ச்சி என்ற நிலைக்கு மாறியுள்ளது. கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், வளம், தலைமைத்துவ வாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க எண்ணற்ற முன்முயற்சிகள், இந்தப் பயணத்தில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளாக நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதையில் முன்னேறும் வகையில், மகளிர் சக்தியால் வழிநடத்தப்படும் வளர்ச்சி பயணத்திற்கான தனது உறுதிப்பாட்டில் தேசம் நிலையாக உள்ளது என்பதை, ஏப்ரல் 16 முதல் 18 வரை மத்திய அரசால் கூட்டப்பட்ட ஒரு சிறப்பு நாடாளுமன்ற அமர்வில், ஜனநாயகத்தின் இந்தப் புனித ஆலயத்தில் இருந்து மீண்டும் எடுத்துரைக்கப்படுகிறது. ஒரு புதிய விடியலை நோக்கி புதிய இந்தியா முன்னேறுகிறது– ஒவ்வொரு பெண்ணும் வெறும் கனவு காண்பவர்களாக மட்டும் இல்லாமல், தனது தைரியம், உறுதி மற்றும் படைப்பாற்றல் மூலம் தேசத்தின் எதிர்காலத்தை ஒளிரச் செய்து, அந்தக் கனவுகளை நனவாக்கவும் வேண்டும்...

பெண்ணே, நீ தெய்வீகமானவள்; உன்னிடம் தான் அனைத்து ஆற்றலும் குடிகொண்டிருக்கின்றன; நீ தான் தேசத்தின் பேராற்றல். இந்த வரிகளின் உணர்வுடன், புதிய வரலாறு படைப்பதற்கு புதிய இந்தியா உறுதியாக உள்ளது. 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்கான தாரக மந்திரம், தற்போது பெண்கள் தலைமையின் கீழ் வெற்றி கீதமாக ஒலிக்கத் தயாராக உள்ளது. இது வெறும் கோட்பாடு அல்ல; இது முக்கிய முன்னுதாரண மாற்றத்தை சந்திக்கும் ஒரு தருணம் – பெண்கள் பங்கேற்பாளர்களாக மட்டுமின்றி மாற்றத்தின் முக்கிய அங்கமாக உருவெடுத்து, தேசத்தின் பாதையையும், எதிகாலத்தையும் வடிவமைக்கத் தயாராக இருக்கும் ஒரு சகாப்தம். 2026 ஏப்ரல் 16 முதல் 18 வரை நடைபெற்ற நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரின் போது, துரதிருஷ்டவசமாக, கட்சி சார்ந்த அரசியல், உன்னதமான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முடிவை மழுங்கச்செய்துவிட்டது. மத்திய அரசின் உறுதிப்பாட்டை விட புள்ளிவிவரக் கணக்குகளுக்கும், அரசியல் சூழ்ச்சிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. சுமார் மூன்று தசாப்தங்களாக நீண்டு வந்த உரிமைகளுக்கான போராட்டம், அதன் உச்சகட்ட நோக்கத்தை அடையத் தவறிவிட்டது. கொள்கை திருத்தம் அல்லது மக்கள் தொகையின் சரி பாதி பிரிவினரின் உரிமைகளை வழங்குவது மட்டுமே இந்த முடிவின் நோக்கமல்ல; மாறாக, சமூக உணர்வின் மறுமலர்ச்சியைக் குறிக்கும் ஒரு திருப்புமுனை தருணமாக இது அமையவிருந்தது. எனினும், சரித்திரம் படைக்கும் தருவாயில் இருந்த இந்த முடிவின் பின்னணியில் உள்ள அரசியல் நோக்கம், அரசியல் சந்தர்ப்பவாதத்தால் தோற்கடிக்கப்பட்டது. 2029 பொதுத் தேர்தல்களில் இருந்து மக்களவை, மாநில சட்டமன்றங்களில் 33 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்தும் மத்திய அரசின் உறுதியான தீர்மானம் அரசியல் சட்டப்படி கட்டாயமாக்கப்பட்ட மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையை, அதாவது நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து தேவையான ஆதரவைப் பெறத் தவறிவிட்டது. போதுமான எண்ணிக்கை எட்டப்படாத போதும், பெண்களின் இட ஒதுக்கீட்டு முடிவு புதிய இந்தியாவின் கலாச்சார உறுதிப்பாடாக தொடர்ந்து நீடிக்கிறது என்று ஜனநாயகத்தின் உயர் கோபுரத்திலிருந்து மீண்டும் ஒருமுறை மத்திய அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இந்த உறுதிப்பாட்டிற்கு அரசு உறுதியாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்றும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மக்களவையிலும், மாநில சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறி இருந்தால், 2029 பொதுத் தேர்தல்களில் இருந்து அமலுக்கு வந்திருக்கக்கூடிய இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முன்முயற்சி, 'வளர்ச்சியடைந்த இந்தியாவை' நோக்கிய பயணத்திற்கு வழிவகை செய்திருக்கும். இதற்காக, நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்து, மகளிர் இட ஒதுக்கீடுச் சட்டம் 2023–ல் திருத்தம் செய்வதற்கான முன்மொழிவை மக்களவையில் தாக்கல் செய்தது. பல தசாப்தங்களாகக் காத்திருக்கும் நாட்டின் பெண்கள், வீட்டின் எல்லைகளுக்குள் மட்டுமின்றி, தேசிய கொள்கைகளை வடிவமைக்கும் செயல்முறைகளிலும் ஒரு உறுதியான பங்கை வகிக்க இந்த முன்முயற்சி வழிவகை செய்கிறது.

2023 செப்டம்பர் 20, 21 ஆகிய தேதிகளில், இந்த மசோதாவைத் தாக்கல் செய்து, 'புதிய இந்தியாவின்' புதிய நாடாளுமன்றம் வரலாற்றில் இடம் பிடித்தது. பல தசாப்தங்களாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த அல்லது அரசியல், அதிகாரத்திற்கு முக்கியத்துவம் அளித்து விவாத பொருளாகவே இருந்து வந்த இந்த மசோதா இறுதியாக பிரதமர் நரேந்திர மோடியால் யதார்த்தமாக மாறியது. இதை அடைவதற்காக, இந்த நிகழ்வே சிறப்பானதாக அமைவதை அவர் உறுதி செய்தார்; புதிய நாடாளுமன்ற வளாகத்தைத் திறந்து வைக்கும் குறிப்பிட்ட நோக்கத்துடன் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது. எனினும் 2023–ல் இயற்றப்பட்ட இந்தச் சட்டத்தை, கள அளவில், 2029 மக்களவைத் தேர்தல்களில் இருந்து தொடங்குவதற்கு இதில் திருத்தம் மேற்கொள்வது அவசியமானது. 2026–க்குப் பின் திட்டமிடப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, அதைத் தொடர்ந்த தொகுதி மறுசீரமைப்பிற்காக அரசு காத்திருக்க வேண்டியிருந்தால், சட்டம் ஏற்கனவே இயற்றப்பட்டிருந்த போதிலும், 2029 தேர்தல்களில் பெண்களால் இந்த உரிமையைப் பெற முடியாமல் போயிருக்கும்.

கடந்த காலங்களைப் போல் அல்லாமல், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் இனி அடையாளபூர்வமானதாக மட்டுமே



'மகளிர் சக்தியின் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவைக் கட்டமைத்தல்

இந்தியப் பெண்கள் இன்று ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்குவதுடன், தங்களுக்கென ஒரு தனி முத்திரையைப் பதிக்கிறார்கள். இந்த மாற்றம், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை; இது சமூகத்தின் மனநிலையையும், திறனையும் புதிதாக வடிவமைக்கிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நடவடிக்கைகளில், இந்தியா ஒரு புரட்சிகரமான மாற்றத்தை சந்தித்துள்ளது. வளர்ச்சியடைந்த இந்தியாவைக் கட்டமைப்பதில் 'மகளிர் சக்தி'யின் தீவிரமான பங்கேற்பை உறுதி செய்யும் முக்கிய முன்முயற்சிகள் பின்வருமாறு.

உரிமைகளும், சட்டப் பாதுகாப்பும்

பெண்களுக்கு உரிமைகளையும், பாதுகாப்பையும், வாய்ப்புகளையும் வழங்க, ஏராளமான வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மகளிர் இட ஒதுக்கீடுச் சட்டம் மக்களவையிலும், சட்டமன்றங்களிலும் உரிமைகளை உறுதிப்படுத்தும் வேளையில், பஞ்சாயத்துகளையும் மகளிர் சக்தி வலுப்படுத்தி வருகிறது.

- 2029 பொதுத் தேர்தல்களில் இருந்து பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடை அமல்படுத்துவதற்கு மூன்று மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டன:
- அரசியல் சட்ட மசோதா (131–வது திருத்தம்), 2026
- யூனியன் பிரதேச சட்டங்கள் மசோதா (திருத்தம்), 2026
- தொகுதி மறுவரையறை மசோதா, 2026



1971–72 முதல், தொகுதிகளின் எண்ணிக்கை மாற்றமின்றி தொடர்கிறது; இப்போது 127 தொகுதிகளில் ஒவ்வொன்றிலும் சுமார் 2 மில்லியன் வாக்காளர்கள் உள்ளனர். இந்தத் தொகுதிகளில், "ஒரு வாக்கு, ஒரு வாக்காளர், ஒரு மதிப்பு" என்ற கொள்கை முற்றிலும் மீறப்படுகிறது.

இருக்காது, மாறாக, மக்கள் தொகையின் சரி பாதிப் பிரிவினருக்கு உரிய பிரதிநிதித்துவத்தை வலிமை வாய்ந்த எதார்த்தமாக மாற்றுவதில் அரசு தொடர்ந்து தீவிரமாக உள்ளது என்ற தனது நிலைப்பாட்டை மத்திய அரசு மீண்டும் முன்வைத்துள்ளது. சட்ட இயற்றும் அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் பல ஆண்டுகாலக் கனவை, பிரதமர் நரேந்திர மோடியின் உறுதி, எதார்த்தமாக மாற்றியது. பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட, அரசியல் ரீதியான ஒப்புதலுக்காக காத்திருப்பதாக கூறப்பட்டு நிலுவையில் வைக்கப்பட்டிருந்த, ஒரு மசோதா 2023 செப்டம்பரில் நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தின் போது சட்டமாக இயற்றப்பட்டது. மத்திய அரசின் துணிச்சலான முடிவும், நிலையான அர்ப்பணிப்பும், நேர்மையான முன்முயற்சியும் இதற்குக் காரணிகளாக அமைந்தன. மக்களவையிலும், மாநில சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33% இடங்களை ஒதுக்க இது வழி வகுத்தது.

எனினும், தொழில்நுட்பத் தடைகள் காரணமாக, இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டன. இதையடுத்து, சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள மத்திய அரசு முடிவு செய்தது; 2023 செப்டம்பரில் நிறைவேறிய சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகளை அறிமுகப்படுத்துவதற்காக ஏப்ரல் 16 முதல் 18 வரை சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தை மத்திய அரசு கூட்டியது.

தீர்மானத்திற்கான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் ஒரு சிறப்பு அமர்வு

இந்த சிறப்பு நாடாளுமன்ற கூட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை வெற்றிபெறச் செய்வதில் தோல்வியைத் தழுவி

‘மகளிர் இட ஒதுக்கீடு சட்டம்’

33%

இடங்கள் பெண்களுக்கு மக்களவையிலும் மாநில சட்டமன்றங்களிலும் 2029 தேர்தல்கள் முதல் ஒதுக்கப்படும்.



விதிகளின்படி மக்களவையில் மொத்தம்

850

இடங்கள் இருக்க வேண்டும். இவற்றில் 815 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநிலங்களையும்,

35

உறுப்பினர்கள் யூனியன் பிரதேசங்களையும் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்.

- ஒதுக்கீடு செய்யப்படாத மீதமுள்ள இடங்களுக்கு, ஒரு ஆண் அல்லது பெண், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படலாம்.
- ஷெட்யூல்டு வகுப்பு, ஷெட்யூல்டு பழங்குடி பிரிவினருக்கான இட ஒதுக்கீடும், உயர்த்தப்பட்ட இடங்களின் விகிதாச்சாரப்படி திருத்தப்பட்டு, முந்தைய 131 என்ற எண்ணிக்கையில் இருந்து 205 இடங்களாக உயர்த்தப்பட்டிருந்தது.
- 50% உயர்வின் அடிப்படையில், அனைத்து மாநிலங்களிலும் சீராக இடங்களை ஒதுக்கும் மாதிரி ஒன்று பின்பற்றப்பட்டது.
- மக்கள் தொகையின் அடிப்படையில் எந்த ஒரு மாநிலமும் இட ஒதுக்கீட்டில் பாதிக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்வதற்காக, மாநிலங்கள் வாரியாக கூடுதல் இடங்களை ஒதுக்கும் அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டன.
- அமலுக்கு வந்த நாளிலிருந்து 15 ஆண்டு காலத்திற்கு இந்த இட ஒதுக்கீடு தொடரும். தேவை ஏற்பட்டால், இந்தக் கால அளவை நாடாளுமன்றம் நீட்டிக்கக்கூடும். மக்களவையிலும், சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா, 2023 செப்டம்பர் 21–22 தேதிகளில் நிறைவேறியது. குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்குப் பின், செப்டம்பர் 29 அன்று, அது சட்டமாக மாறியது.
- 2023 செப்டம்பரில் இயற்றப்பட்ட சட்டம், 2026 ஏப்ரல் 16–ல் மத்திய அரசால் முறையாக அறிவிக்கப்பட்டது.

முடிவுகளை எடுப்பதில் அதிகாரம் அளிக்கப்பட்ட பங்கேற்பு பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளில்

1.45 மில்லியன் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள்.

- மொத்தப் பிரதிநிதிகளில் சுமார் 46% ஆக உள்ள இந்த எண்ணிக்கை, உலக நாடுகளுக்கு ஒரு தனித்துவம் வாய்ந்த முன்னுதாரணமாகும்.
- முடிவுகளை எடுப்பதிலும் அதிகாரம் அளிக்கப்பட்ட ஜனநாயகத்திலும் பெண்களின் வலிமையான பங்கேற்பிற்கு இது சிறந்த உதாரணமாக விளங்குகிறது. இந்தியாவில் இன்று பெண்கள் வெறும் பயனாளிகள் அல்ல; கொள்கை வடிவமைப்பில் அவர்கள் தீவிர பங்கேற்பாளர்களாகச் செயல்படுகின்றனர்.



அரசியலில் பெண்களின் பங்கேற்புக்குப் பெருகிவரும் உற்சாகம்

- 1–வது மக்களவை: 22 பெண் உறுப்பினர்கள்
- 6–வது மக்களவை: 19 பெண் உறுப்பினர்கள்
- 8–வது மக்களவை: 44 பெண் உறுப்பினர்கள்
- 14–வது மக்களவை: 51 பெண் உறுப்பினர்கள்
- 17–வது மக்களவை: 78 பெண் உறுப்பினர்கள்
- 18–வது மக்களவை: 75 பெண் உறுப்பினர்கள்

> “தொகுதி மறுவரையறை ஆணையச் சட்டத்தில் நாங்கள் எந்த மாற்றமும் கொண்டு வரவில்லை; ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டத்தை இம்மியளவும் மாற்றம் இல்லாமல் மீண்டும் இயற்றி இருக்கிறோம். கடந்த காலத்தில், இந்தச் சட்டம் ஏதேனும் முறைகேடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதா, என்பது குறித்து என்னால் கருத்துக் கூற இயலாது. இருப்பினும், தற்போதைய அரசு அதுபோன்ற எந்த முயற்சியையும் செய்யவில்லை.”
>
> –அமித் ஷா, மத்திய உள்துறை அமைச்சர்

இருந்தாலும், பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் உறுதிப்பாட்டிற்கும், தீர்மானத்திற்கும் இது ஒரு சக்தி வாய்ந்த எடுத்துக்காட்டாக விளங்கியது. 2029 பொதுத் தேர்தல்களில் இருந்து கள அளவில் மகளிர் இட ஒடுக்கீட்டுச் சட்டத்தை திறம்பட அமல்படுத்துவதற்கு, மகளிர் இட ஒதுக்கீடுச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது இன்றியமையாததாக இருந்தது. இந்த உறுதிப்பாட்டால் எழுச்சி பெற்று சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்திருந்ததுடன், சம்பந்தப்பட்ட சட்டமன்ற மசோதாவையும் அறிமுகம் செய்தது. மேலும், ஓர் அரசியல் உத்தியாக அல்லாமல், தேசிய நலன் கருதி எடுக்கப்பட்ட ஒரு முடிவாகவும், மகளிர் சக்திக்கு உரிய உரிமையாகவும், இந்தியாவின் ஆழமாக வேரூன்றிய கலாச்சார நெறிகளின் பிரதிபலிப்பாகவும் பிரதமர் நரேந்திர மோடி இந்த முன்முயற்சியை மேற்கொண்டார்.

30 ஆண்டுகால பயணம்

சீரான அமலாக்கத்திற்கான ஓர் உறுதிப்பாடு



- இந்தியாவில் பெண்களின் நிலையை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழு ஒன்று, நாட்டில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்து வருவதாக 1975–ல் கருத்து தெரிவித்தது.
- அனைத்து நிர்வாக அமைப்புகளிலும் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு வழங்க தேசிய கண்ணோட்டத் திட்டம் 1981 பரிந்துரை செய்தது.
- அரசியலமைப்பின் 73, 74–வது திருத்தங்கள் இயற்றப்பட்டாலும், மக்களவையிலும் சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் முன்முயற்சி அடுத்தக் கட்டத்தை எட்டுவதில் தோல்வியடைந்தது.
- 81–வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவாக, 1996 செப்டம்பர் 12 அன்று ஹெச்.டி. தேவே கவுடா ஆட்சிக் காலத்தில், மகளிர் இட ஒதுக்கீட்டுக்கான முதல் மசோதா அறிமுகம் செய்யப்பட்டது. நாடாளுமன்றக் கூட்டுக் குழுவிற்கு இது பரிந்துரைக்கப்பட்டது; எனினும், குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போது 11–வது மக்களவை கலைக்கப்பட்டதால் மசோதா காலாவதியானது.
- இரண்டாவது முறையாக, 1998 டிசம்பர் 14 அன்று அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான ஆட்சியின் போது, 84–வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவாக, இந்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டது; எனினும் 12–வது மக்களவை கலைக்கப்பட்டதன் எதிரொலியாக, இந்த முயற்சியும் முடிவுக்கு வந்தது.
- மூன்றாவது முறையாக, 1999 டிசம்பர் 23 அன்று அடல் பிகாரி வாஜ்பாய் அரசு 85–வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவை முன் வைத்தது; எனினும் அரசியல் கட்சிகள் இடையே போதுமான ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால், மசோதா அடுத்த நிலையை எட்டவில்லை.
- நான்காவது முறையாக, பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசின் கீழ், 2008 மே 6 அன்று மாநிலங்களவையில் 108–வது அரசியல் சட்டத் திருத்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டு, நிலைக்குழுவிற்குப் பரிந்துரை செய்யப்பட்டது. குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின், கடும் அமளிக்கு இடையே, 2010 மார்ச் 9 அன்று மாநிலங்களவையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து மக்களவைக்கு மசோதா அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் 2014 மே 18 அன்று மக்களவை கலைக்கப்பட்டதும், மசோதாவும் காலாவதியானது.
- தற்போதைய அரசில், 2023 செப்டம்பர் 18 அன்று 'மகளிர் இட ஒதுக்கீடு மசோதா 2023'–க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- 2023 செப்டம்பர் 19 அன்று ஒரு சிறப்புக் கூட்டத்தின்போது, 'மகளிர் இட ஒதுக்கீடு மசோதா 2023' (128 வது அரசியல் சட்டத் திருத்த மசோதா), மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவுக்கு ஆதரவாக 454 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் பதிவாகின.
- 2023 செப்டம்பர் 20 அன்று மகளிர் இட ஒதுக்கீடு மசோதா 2023, மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, 214 வாக்குகளுடன் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் நிறைவேறியது.
- 2023 செப்டம்பர் 28 அன்று, மகளிர் இட ஒதுக்கீடு மசோதா 2023–ல், குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு கையொப்பமிட்டதை அடுத்து, அது சட்டமாக மாறியது.
- 2026 ஏப்ரல் 16 முதல் 18 வரை நடைபெற்ற சிறப்பு நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில், 131–வது அரசியல் சட்டத் திருத்த மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026 ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டன. அரசு தனது நிலையான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினாலும், அரசியல் சட்டத் திருத்த மசோதா நிறைவேறுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு ஆதரவான வாக்குகள் செலுத்தப்படாததால் மசோதா தோல்வியடைந்தது. இதையடுத்து, பெண்களுக்கான 33% இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தும் பணிகளை விரைவுபடுத்த முடியவில்லை.

மகளிர் இட ஒதுக்கீடு சட்ட உணர்வை பிரதிபலிக்கும் கண்கவர் மணல் சிற்பத்தை, பூரி கடற்கரையில் பிரபல மணல் சிற்பக்கலைஞர் சுதர்சன் பட்நாயக் உருவாக்கியிருந்தார்.

இருந்தும், 2029–க்குள் மகளிர் இட ஒதுக்கீட்டை செயல்படுத்தும் பாதைகளில் பல தசாப்தங்களாக தொடர்ந்து நீடிக்கும் தடைகள் மீண்டும் ஏற்பட்டுள்ளன. மகளிர் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் ஒரு நாள் கூட வீணாக்கப்படக்கூடாது என்பதை சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது முதலே பிரதமர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.

2023 செப்டம்பரைப் போலவே, பெண்கள் இட ஒதுக்கீடு சம்பந்தமான உறுதிப்பாட்டில் 'ஜனநாயகத்தின் ஆலயத்தில்' ஆதரவான குரல்கள் மீண்டும் ஒலிக்கும் என்று மத்திய அரசு நம்பிக்கையுடன் இருந்தது. எனினும் ஒருமித்த கருத்து எழவில்லை; எதிர்க்கட்சிகளின் போதிய ஆதரவின்மையால், அரசியல் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் தேவையான எண்ணிக்கையை அரசால் அடைய முடியவில்லை.

நாடாளுமன்றத்தில் திருத்த மசோதாவை அறிமுகம் செய்ததுடன் பிரதமர் மோடியின் உறுதிப்பாடு நின்றுவிடவில்லை; இந்தத் திருத்தத்திற்கு எதிர்க்கட்சிகள் அளிக்கும் ஆதரவிற்கு ஈடாக, முழு பெருமையையும் அவர்களுக்கு வழங்க தான் தயாராக இருப்பதாக, சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகையில், பிரதமர், தன்னிச்சையாக அறிவித்தார். மக்களவையில்



விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நேரமும் நீட்டிக்கப்பட்டது. முதல் நாளன்று, அதிகாலை ஒரு மணி வரை விவாதம் தொடர்ந்தது. திருத்தம் தொடர்பாக பரப்பப்பட்ட தவறான கருத்துக்களை மறுத்து, தகுந்த பதில்களை வழங்கி, விஷயத்தை சுமூகப்படுத்தும் முயற்சியையும் மத்திய அரசு திறம்பட மேற்கொண்டது. மாறுபட்ட குரல்களுக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, அவற்றைத் தீர்க்கத் தேவையான அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டன. பெண்களுக்கான இட ஒதுக்கீடு விவகாரம் ஏறத்தாழ நான்கு தசாப்தங்களாக அரசியல் விவாதப் பொருளாக இருந்து வருகிறது என்றும், நாட்டின் மக்கள் தொகையில் பாதியாக உள்ள பெண்கள், தங்களுக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கான நேரம் இப்போது வந்துவிட்டது என்றும் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

மேலும், அனைத்து அரசியல் கட்சிகளும் ஆழமாக சிந்தித்து, மிகுந்த கவனத்துடன் மகளிர் இட ஒதுக்கீடுத் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு பிரதமரே வலியுறுத்தினார். மகளிர் சக்தியின் உணர்வுகளுக்குக் களங்கம் ஏற்படுத்தாத வகையில் செயல்படுமாறு இந்தியப் பெண்களின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அவர் கேட்டுக்கொண்டார். நாடு முழுவதும் கோடிக்கணக்கான பெண்கள் நாடாளுமன்றத்தையும், அதன் நோக்கங்களையும், முடிவுகளையும் கூர்ந்து கவனிப்பதாக அவர் குறிப்பிட்டார். தங்கள் சொந்த வீடுகளில் வசிக்கும் தாய், சகோதரிகள், மகள்கள், மனைவியின் நலனைக் கருத்தில் கொண்டு மனசாட்சிக்கு உட்பட்டு செயல்படுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார். நாட்டில் உள்ள பெண்களுக்கு சேவை செய்யவும், அவர்களுக்கு மரியாதை செலுத்தவும் இந்தத் திருத்தம் ஒரு சிறப்பான தருணம் என்று குறிப்பிட்ட பிரதமர், உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் ஒன்றை முன் வைத்தார்:

"நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவதாவது...

உங்கள் சொந்த வீடுகளில் உள்ள தாய், சகோதரிகள், மகள்கள், மனைவியின் நலனைக் கருத்தில் கொண்டு மனசாட்சிக்கு உட்பட்டு செயல்படுங்கள்...

நாட்டின் மகளிர் சக்திக்கு சேவை செய்யவும், அவர்களுக்கு மதிப்பளிக்கவும் இது ஒரு பொன்னான வாய்ப்பு.
அவர்களிடமிருந்து புதிய வாய்ப்புகளைப் பறித்து விடாதீர்கள்."

"இந்தத் திருத்தம் ஒருமனதாக நிறைவேறினால், நாட்டின் மகளிர் சக்தி மேலும் அதிகாரம் பெறுவதுடன், நாட்டின் ஜனநாயகமும் இன்னும் வலுவடையும்.
வாருங்கள்... அனைவரும் இணைந்து இன்று புதிய வரலாறு படைப்போம். நாட்டின் மக்கள் தொகையில் பாதி அளவாக இருக்கும் இந்தியப் பெண்களுக்கு, அவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவோம்."

பெண்களுக்கு உரிய பங்கு அவர்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவதுடன், அரசியல் கண்ணோட்டத்துடன் அல்லாமல் தேசிய நலன் கருதி இந்த விஷயத்தை அணுகுமாறு பிரதமர் வேண்டுகோள் விடுத்தார். "மக்கள் தொகையின் பாதி அளவிலான பிரிவினரை தேசக் கட்டமைப்பில் தீவிர உறுப்பினர்களாக மாற்றும் நல்வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். நாட்டின் கொள்கை வளர்ச்சி நடைமுறையில் நம் பெண்கள் ஒருங்கிணைந்த அங்கம் வகிக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்... கடந்த 25-30 ஆண்டுகளில் கோடிக்கணக்கான பெண்கள் அடித்தள நிலையில் தலைவர்களாகவும், கருத்து உருவாக்குவோராகவும் எழுச்சி பெற்றுள்ளனர். அதே வேளையில் அவர்களுக்கு எதிராக இன்று செயல்படுபவர்கள், வரும் காலத்தில் அதற்கான தண்டனையைப் பெற நேரிடும்..

நாட்டின் நலன் கருதி பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது தாய்மார்கள், சகோதரிகள், மகள்கள் ஆகியோர் நம் நோக்கங்களின் உண்மைத்தன்மையை உணர்ந்துக் கொள்வார்கள். எனவே இந்த விஷயத்தை அரசியல் ரீதியாக அணுக வேண்டாம்... நாட்டின் பெண்களுக்கு நாம் ஏதோ ஒன்றை 'வழங்குகிறோம்' என்ற பிம்பத்தை உருவாக்க வேண்டாம்; மாறாக, இது அவர்களுக்கான உரிமை. பெண்களுக்கு மேலும் அதிகாரம் அளிப்பதுதான் நமது நோக்கமே தவிர, பெருமிதம் கொள்வது அல்ல", என்று பிரதமர் குறிப்பிட்டார். 2029 பொதுத் தேர்தல்களுக்குப் பின் மக்களவை அமையும் போது, அதில் குறைந்தபட்சம் 33 சதவீதத்தினர் பெண்களாக இருக்க வேண்டும் என்பது மத்திய அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். "இது, என் வாழ்வின் மிகச் சிறப்பான தருணங்களில் ஒன்று. 2029 மக்களவைத் தேர்தல்களும், அதைத் தொடர்ந்து எதிர்காலத்தில் நடைபெறும் சட்டமன்றத்

பிறப்பு முதல் ஒவ்வொரு காலகட்டம் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திற்குமான அரசின் திட்டம்



பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்:
பெண் குழந்தைகள் கருவிலேயே கொல்லப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது

மாத்ரு வந்தனா திட்டம்:
...எனவே, ஒவ்வொரு தாயும் போதிய ஊட்டச்சத்தைப் பெறுகிறார்

செல்வமகள் சேமிப்புத் திட்டம்:
பெண் குழந்தைகள் அவர்களது கல்வியில் எந்தவித இடையூறுகளையும் எதிர்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்கிறது

இந்திர தனுஷ் இயக்கம்:
தீவிர நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு, உரிய காலத்தில் தடுப்பூசிகளை உறுதி செய்கிறது.

தூய்மை இந்தியா இயக்கம்:
பெண் குழந்தைகள் பள்ளிகளில் கழிப்பறை சார்ந்த பிரச்சனைகளிலிருந்து விடுதலை பெற உதவுகிறது.

சானிட்டரி பேட் இயக்கம்:
மாதவிடாயின் போது அசௌகரியங்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

கேலோ இந்தியா:
ஆண்டுக்கு 1 லட்சம் ரூபாய் வரையிலான நிதி உதவியுடன், விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

இலவச சமையல் எரிவாயு திட்டம்:
புகையிலிருந்து விடுதலை; வீடு தோறும் இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

ஜல் ஜீவன் இயக்கம்:
இனி பல மைல் தூரம் தலையில் தண்ணீர் சுமக்காத சூழலை உறுதி செய்கிறது.

இலவச ரேஷன் திட்டம்:
ரேஷன் உணவு வகைகள் குறித்த கவலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.

ஆயுஷ்மான் திட்டம்:
குடும்பத்தின் சுகாதாரம் தொடர்பான நிதி பிரச்சனையைப் போக்குவதற்கு 5 லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை வழங்கப்படுகிறது.

மக்கள் மருந்தக மையங்கள்:
80% தள்ளுபடி விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன.

பேறுகால விடுமுறை: 26 வாரங்கள்:
பெண்களின் தொழில்சார்ந்த வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது. பணக்கார நாடுகளில் கூட இத்தகைய பலன்கள் கிடைப்பதில்லை.

சைனிக் பள்ளிகள் & தேசியப் பாதுகாப்பு அகாடமி:
ஆயுதப்படைகளில் சேர விரும்பும் பெண்களுக்கும் இப்போது வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

திறன் இந்தியா:
திறன் வளர்ச்சியை, ஊக்குவிப்பதன் மூலம், தொழிற்கல்வி பயிற்சி, 'டிரோன் சகோதரிகளை' 'லட்சாதிபதி சகோதரிகளாக' மாற்றுகிறது.



தேர்தல்களும், மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்படுவதை உறுதி செய்வது அவசியமாகிறது', என்றும் பிரதமர் நரேந்திர மோடி கூறினார். இந்த மசோதா இன்னும் நிறைவேறவில்லை என்றாலும், இது குறித்த மத்திய அரசின் உறுதிப்பாடு மிகத் தெளிவாக உள்ளது: 'அமிர்த காலத்தை' நோக்கி இந்தியா முன்னேறும்போது, அதன் பெண்களே, நாட்டின் உருவகமாக எழுச்சிப் பெற்றுள்ளனர்.

'வளர்ச்சியடைந்த இந்தியா' கட்டமைப்பில், பெண்கள் அதிகாரம் பெற்றவர்களாக, முன்னணியில் இருப்பார்கள் என்றும், திறமையானவர்களாக, நாட்டை அதன் இலக்கை நோக்கி வழிநடத்துவார்கள் என்றும் மத்திய அரசு கருதுகிறது.

பெண்களுக்கான இடஒதுக்கீடு... பயணம் தொடர்கிறது

"எந்தவொரு நாட்டிலும் பெண்கள் முன்னேறி வருகிறார்கள் என்றால், அந்தச் சமூகம்–அந்த நாடு –உண்மையிலேயே முன்னேறி வருகிறது என்று நான் நம்புகிறேன்" என பாபாசாகேப் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர் ஒருமுறை கூறினார். இந்தக் கனவை நனவாக்கும் வகையில், மத்திய அரசு 2023–ன் தொடக்கத்திலேயே, ஓர் அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம், 33% இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்கான விதிகளை இயற்றியது. தேசியத் தலைநகர்ப் பிரதேசமான தில்லி, மக்களவை மற்றும் மாநிலச் சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதற்கான விதிகளை ஓர் அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் இயற்றியது. ஷெட்யூல்டு வகுப்பினர் (எஸ்சி) மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியினருக்கான (எஸ்டி) இட ஒதுக்கீடு ஏற்கெனவே இருந்தாலும், பெண்களுக்கான 33 சதவீத ஒதுக்கீடு தற்போதைய கட்டமைப்பிற்குள் உறுதி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2023–ல் இயற்றப்பட்ட சட்டம், 2026 ஏப்ரல் 16 அன்று முறையாக அறிவிக்கையாக வெளியிடப்பட்டது. இதன் பொருள் என்னவென்றால், பெண்களுக்கான 33 சதவீத ஒதுக்கீடு நிச்சயமாகச் செயல்படுத்தப்படும் என்றாலும், அதைச் செயல்படுத்துவதில் செயல்முறைத் தாமதம் ஏற்படும் என்பதை இது குறிக்கிறது.
உண்மையில், பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா முதன்முதலில் 1996–ல்–முன்னாள் பிரதமர் எச்.டி. தேவேகவுடா

முன்னேறிச் செல்லுதல்

- நாட்டின் மகள்கள் போர் விமானிகளாகி வானத்தின் உச்சியைத் தொடுகின்றனர்.
- உலகில் உள்ள வேறு எந்த நாட்டையும் விட அதிக சதவீதத்தில் பெண் விமானிகளைக் கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது.
- 2014–ன் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடும்போது, முனைவர் பட்டத்துக்குப் பதிவு செய்த பெண்களின் எண்ணிக்கை ஏறத்தாழ இருமடங்காகியுள்ளது.
- கணிதம் மற்றும் அறிவியலில், குறிப்பாக, ஸ்டெம் கல்வியில், பெண்களின் பங்கேற்பு 43 சதவீதத்தை எட்டியுள்ளது.
- 21 மாநிலங்களின் ஊராட்சிகளில் பெண்களின் பங்கேற்பு ஏறத்தாழ 50 சதவீதத்தை எட்டியுள்ளது.



பதவிக்காலத்தில், 11–வது மக்களவையில் முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்டது. அதன்பின்னர், 1998 டிசம்பரில், அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான அரசு, 12வது மக்களவையில் இதற்கான மசோதாவை அறிமுகம் செய்தது. பின்னர், மன்மோகன் சிங் அரசு பதவிக்காலத்தில், இதுபோன்ற மசோதா மக்களவையில் அறிமுகம் செய்யப்படவில்லை; அதற்கு பதிலாக, 2008 மே மாதத்தில் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அது ஒரு நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது; குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த மசோதா 2010 மார்ச் 9 அன்று மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டு, மக்களவைக்கு அனுப்பப்பட்டது. இருப்பினும், 15–வது மக்களவை கலைக்கப்பட்டதால், மசோதா காலாவதியானது. இப்போது, 17–வது மக்களவையின் போது, பிரதமர் நரேந்திர மோடி அரசு நாரி சக்தி வந்தன் அதினியம் என்ற பெயரில் புதிய மசோதாவை அறிமுகம் செய்தது, 2023 செப்டம்பரில் இந்த மசோதா இரு அவைகளிலும் ஏறத்தாழ ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டதன் மூலம், பெண்களுக்கு 33 சதவீத பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

> “நமது நாட்டின் பெண்கள், நமது மகளிர் சக்தி, தங்களின் கடின உழைப்பு, தைரியம் மற்றும் தன்னம்பிக்கை மூலம் புதிய உயரங்களை எட்டியுள்ளனர். இப்போது, நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்தச் சக்திக்குப் புத்துயிர் அளித்து, அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை விரிவுபடுத்த வேண்டும். நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு தாயின், சகோதரியின், மகளின், விருப்பங்களைப் புரிந்துகொண்டு, அவர்களின் கனவுகளை நனவாக்க ஒவ்வொரு தேவையான நடவடிக்கையையும் நாடு மேற்கொள்கிறது என்று அவர்களுக்கு நான் உறுதியளிக்க விரும்புகிறேன்.”
>
> **நரேந்திர மோடி, பிரதமர்**

மேலும், தற்போது பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளில் 14.5 லட்சம் பெண் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்–இது மொத்த பிரதிநிதிகளில் சுமார் 46 சதவீதமாகும்–இது பெண்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துகிறது. முடிவெடுக்கும் நடைமுறையிலும், உண்மையிலேயே அதிகாரம் பெற்ற ஜனநாயகத்திலும் பெண்களின் வலுவான பங்கேற்புக்கு இது ஓர் ஒளிரும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

அரசுத் திட்டங்கள் மூலம் பெண்களுக்கான வாழ்க்கையை எளிதாக்குதல்

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது இனி வெறுமனே சமூக நீதிக்கான ஒரு விஷயமாக மட்டுமிருக்காது; மாறாக, இது ஓர் உணர்வுபூர்வமான சமூகக் கண்ணோட்டத்தை வளர்ப்பதற்கும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் மிகவும் தலையாய முக்கியத்துவம் கொண்டது என்ற கருத்தை பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு கொண்டுள்ளது. இதன் பயனாக, இன்று பெண்கள் கல்வி, நிர்வாகம், நீதித்துறை, ஆயுதப்படைகள், மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், கலை, தொழில்முனைவு உட்பட அனைத்துத் துறைகளிலும் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் பொருளாதார ரீதியாகச் தற்சார்புடையவர்களாக மாறி வருகின்றனர். அவர்கள் ஊராட்சிகளுக்குள் ஊரக வளர்ச்சி முன்னெடுப்புகளில் தீவிரமாகப் பங்கேற்று வருகின்றனர். ஏராளமான பெண்கள், தங்கள் போட்டித் திறமை மற்றும் திறன்களால் உந்தப்பட்டு, தொழில்துறைகள், புத்தொழில்கள் ஆகியவற்றில் மிகச்சிறப்பான தலைமைத்துவத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். விளையாட்டுத் துறையில், பெண்கள் சிறந்த செயல்திறனை வழங்கி வருகின்றனர். சரியான வாய்ப்புகளும் ஆதரவும் கிடைத்தால், பெண்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க முடியும் என்ற நம்பிக்கையை இத்தகைய எடுத்துக்காட்டுகள் ஏற்படுத்துகின்றன.

இந்தக் கொள்கை வழிகாட்டுதல்படி, கடந்த 12 ஆண்டுகளாக, நமது தாய்மார்களையும் சகோதரிகளையும் கட்டுப்படுத்தும் ஒவ்வொரு தடையையும் அகற்றுவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீதி மற்றும் பாதுகாப்பு

சமூகத் தீமைகளுக்கு எதிராகப் போராடுவது முதல் பணியிடத்தில் பாதுகாப்பான சூழலை உறுதி செய்வது வரை, 'புதிய இந்தியா' தனது பெண்களுக்கு நீதியும் பாதுகாப்பும் நிறைந்த ஓர் அரணை வழங்குகிறது.



மகப்பேறு விடுப்பு 12 வாரங்களிலிருந்து 26 வாரங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது

முத்தலாக் சட்டம்

- இஸ்லாமிய பெண்களுக்கு சமத்துவம் மற்றும் சட்டப் பாதுகாப்பு
- முத்தலாக் என்ற பிற்போக்கான நடைமுறைக்கு இது பேரடி.



நிர்பயா நிதி

₹5,846.08

- கோடி நிர்பயா நிதியிலிருந்து பெண்களின் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்துக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.



விரைவு நீதிமன்றங்கள்



774

விரைவு நீதிமன்றங்கள் (398 சிறப்பு போக்சோ நீதிமன்றங்கள் உள்பட) செயல்பட்டு வருகின்றன.

- பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் விரைவான நீதி.
- ஒரிடத் தீர்வு மையங்கள் மற்றும் உதவி எண்கள்.
- நெருக்கடியில் உள்ள பெண்களுக்கு உதவி.

இந்திய நீதிச் சட்டம் – 2023

- பாலியல் குற்றங்களுக்கு தண்டனைகளுக்கான விதிகள்.
- கிராமப்புற அளவில் குடும்பத் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் மகளிர் நீதிமன்றங்கள்

மிஷன் சக்தி

சம்பல்: பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்தில் கவனம் செலுத்துதல்

₹15,761

கோடி, 2025–26 நிதியாண்டு வரையிலான காலகட்டத்திற்கு பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

13.37 லட்சம் பெண்கள் 926 ஒரிடத் தீர்வு மையங்களில் உதவி பெற்றுள்ளனர்

99.09

லட்சம் பேர், பெண்கள் உதவி எண் மூலம் உதவி பெற்றுள்ளனர்

வலிமை: பொருளாதார மற்றும் சமூக அதிகாரமளித்தலை முன்னெடுத்தல்

பிரதமரின் தாய்மையைப் போற்றுவோம் திட்டத்தின் கீழ்

4.26

கோடி பயனாளிகள்

2,92,681

பேர் சக்தி சதன் உதவி பெற்றுள்ளனர்

5,29,483

பேர் சக்தி நிவாஸ் உதவியைப் பெற்றுள்ளனர்

1,64,730

பேருக்கு பால்வாடி மையங்களிலிருந்து உதவி கிடைத்துள்ளது

4,15,174

பேருக்கு சங்கல்ப் (நாரி சக்தி மையங்கள்) உதவி கிடைத்துள்ளது

பெண்களுக்கான திருமண வயது → 18 வயதிலிருந்து 21 வயதாக உயர்த்துவதற்கான முன்மொழிவு



2001-ம் ஆண்டில், 84-வது அரசியல் சட்டத் திருத்தம் செய்யப்பட்டு, 2026 வரை இடங்களின் எண்ணிக்கை முடக்கப்பட்டது. 1976 முதல் 2026 வரையிலான 50 ஆண்டு காலத்திற்கு, இந்த நாட்டு மக்கள் தங்கள் மக்கள்தொகைக்கு ஏற்ப விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தைப் பெறவில்லை.

பெண்கள் கண்ணியம், வசதி, பாதுகாப்பு மற்றும் செழிப்பான வாழ்க்கையை வாழ்வதை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு பல திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. அவர்களின் வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் அவர்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சவாலுக்கும் தீர்வு காண்பதில் தீவிரமான மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசால் அறிமுகம் செய்யப்பட்ட ஒவ்வொரு நலத்திட்டத்தின் மையத்திலும், பெண்களின் வாழ்க்கையை எளிமையாக்குதல், வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழிலுக்கான புதிய வழிகளை உருவாக்குதல், பெண்கள் அதிகாரமளித்தலை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்கள் உள்ளன. 'பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்' இயக்கம் பெண் குழந்தைகளின் பிறப்பு, கல்வி மற்றும் பாதுகாப்பைத் தீவிரமாக ஊக்குவிக்கிறது. 'செல்வமகள் சேமிப்புத் திட்டம்', பெண் குழந்தைகளுக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்காகப், பாதுகாப்பான சேமிப்பு வழியை வழங்குகிறது. 'பிரதமரின் உஜ்வாலா திட்டம்' பெண்களின் சமையலறைகளைப் புகையின் அபாயங்களிலிருந்து விடுவிப்பதன் மூலம் அவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது. 'பிரதமரின் முத்ரா திட்டம்' பெண்களைப் பொருளாதாரத் தற்சார்பு அடைய அதிகாரம் அளிக்கிறது. 'மிஷன் சக்தி' திட்டத்தின் கீழ், பெண்களின் பாதுகாப்பும் அதிகாரமளித்தலும் புதிய பரிமாணங்களை எட்டி வருகின்றன. மேலும், 'வளர்ச்சியடைந்த பாரதம் – ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இயக்கம்' என்பது, பெண்களுக்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஏராளமான விதிகளை உள்ளடக்கியுள்ளது. மேலும், வரலாற்று ரீதியாக, சொத்துக்களைப்


பணியிடப் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து


- சுரங்கம் உட்பட அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு இரவுப் பணிகளில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- பெண்கள் இப்போது சுரங்கம், உலோகங்கள் மற்றும் எந்திரங்கள் போன்ற முக்கியத் தொழில் துறைகளில் பணியாற்றுகின்றனர்.
- கனரகத் தொழில் மற்றும் சுரங்க நிறுவனங்கள் 2030-க்குள் 30 சதவீத பாலினப் பன்முகத்தன்மையை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- கூடுதலாக, பெண்களிடையே வேலையின்மை விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது, இது பெண்களுக்குப் புதிய வாய்ப்புகள் உருவாகி வருவதையும், உள்ளடக்கம் அதிகரித்து வருவதையும் குறிக்கிறது.

26.9

லட்சம் பெண்கள் 2024-25-ல் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனத்தில் இணைந்துள்ளனர்

இந்தியாவில் பெண் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் அதிகரிப்பு







2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, பிராந்தியத் தொகுதிகளை மறுசீரமைக்கவும் அல்லது பிரிக்கவும், எஸ்சி /எஸ்டி இடங்களை ஒதுக்கவும் பயன்படுத்தப்பட இருந்தது. திருத்த மசோதாவின் நோக்கக் காரணியில் அரசு இதைக் குறிப்பிட்டிருந்தது.

பெண்களின் பெயரில் பதிவு செய்வதற்கு நிறுவப்பட்ட பாரம்பரியம் இருந்ததில்லை. இருப்பினும், 'பிரதமரின் வீட்டுவசதித் திட்டம்' தொடங்கப்பட்டதன் மூலம், இந்த வீட்டு அலகுகளின் உரிமையானது பெண்களுக்கே வழங்கப்படும் என்பதை உறுதிசெய்யும் ஒரு குறிப்பிட்ட ஆணை அறிமுகம் செய்யப்பட்டது. 'ஆயுஷ்மான் பாரத் திட்டம்' மூலம் பெண்களின் உடல்நலம் குறித்த கவலைகளுக்கும் திறம்படத் தீர்வு காணப்பட்டுள்ளது. தற்போது லட்சக்கணக்கான பெண்கள் 5 லட்சம் ரூபாய் வரையிலான இலவச மருத்துவ சிகிச்சையைப் பெறுகின்றனர்.

"நமது அரசியல் சட்டம் அவ்வப்போது தொகுதி மறுவரையறையை வழங்குகிறது, மேலும் மறுவரையறை நிர்ணய விதிகள் மூலம்தான் ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. தொகுதி மறுவரையறையை எதிர்ப்பவர்கள், உண்மையில், ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியினருக்கான இடங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை எதிர்க்கின்றனர்."

அமித் ஷா, மத்திய உள்துறை அமைச்சர்

கருவுற்றப் பெண்களுக்காக 'தாய்மையைப் போற்றுவோம் திட்டம்' தற்போது செயல்பாட்டில் உள்ளது. இதன் கீழ், நிதி நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படுகிறது; இது ஒன்பது மாத கர்ப்ப காலத்தில் அவர்கள் முறையான ஊட்டச்சத்தைப் பெறுவதை உறுதிசெய்கிறது. கருவுற்ற தாயும், தாயின் வயிற்றிலிருக்கும் குழந்தையும் ஆரோக்கியமாக இருக்க இது உதவுகிறது.

இன்று, பெண்களின் தலைமைத்துவத்தின் கீழ், இந்தியா வளர்ச்சியை நோக்கி வேகமாக முன்னேறி வருகிறது. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, பெண்கள் எதிர்கொள்ளும் தடைகளைக் களைவதற்கான ஒரு வலுவான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வியில் இந்தியா பாலின சமத்துவத்தை எட்டியுள்ளது; உயர்கல்வியிலும் கூட, விகிதாச்சார அடிப்படையில் மாணவர்களை விட மாணவிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (ஸ்டெம்) சார்ந்த கல்வியில் பெண்களின் பங்கேற்பு வெகு வேகமாக அதிகரித்து வருகிறது. 2026-27-ம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பெண்கள் விடுதியை அமைப்பதற்கான ஒதுக்கீட்டை உள்ளடக்கியுள்ளது. அறிவுசார் பொருளாதாரத்திற்குள் தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்பதற்குப் பெண்கள் தங்களைத் தயார்படுத்தி வருகின்றனர். பணியிடங்களில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வருகிறது. இன்று, கிராமப்புறத்தைச் சேர்ந்த ஒரு பெண் வயல்வெளிகளின் மீது ட்ரோனை இயக்கிப் பறக்கவிடும்போது, அவர் பயிர்களின் மீது மருந்தைத் தெளிப்பது மட்டுமின்றி, தொழில்நுட்பத்தின் வாயிலாக கிராமப்புறப் பொருளாதாரத்தின் திசையை மாற்றியமைத்து வருகிறார். தனது தொழில்முனைவு உணர்வின் வலிமையால் ஒரு பெண் 'லட்சாதிபதி சகோதரி' யாக உயரும்போது, அவர் தனது சமூகத்தைச் சேர்ந்த எண்ணற்ற பிற பெண்களுக்கு உத்வேகத்தின் ஊற்றாகத் திகழ்கிறார். கல்வி, திறன் மேம்பாடு, தொழில்முனைவு, கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் ஆகியவை இத்தகைய நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியுள்ளன. 'திறன் இந்தியா இயக்கம்', மரபுசாராத் துறைகளைச் சார்ந்த திறன்களைப் பெண்களுக்கு அளிப்பதன் மூலம்

தற்சார்பும் அதிகாரமளித்தலும்

அதிகாரமளிக்கப்பட்ட பெண்கள் தற்சார்பு பெற்று, முன்னேற்றத்தை முன்னெடுத்துச் சென்று, கொள்கைகளை வடிவமைத்து, தலைமுறைகளுக்கு உத்வேகம் அளிக்கும் ஓர் எதிர்காலத்தை நாட்டிற்கு உருவாக்க, சாத்தியமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதமரின் முத்ரா திட்டம்

₹40.07 லட்சம் கோடி மதிப்பிலான கடன்கள் 57.79 கோடிக்கும் அதிகமான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
2026 மார்ச் 31 நிலவரப்படி

₹16.33 லட்சம் கோடி மதிப்பிலான கடன்கள் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

67%+ கடன்கள் பெண் தொழில்முனைவோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்த முன்னெடுப்பின் கீழ் சுமார் **75%** கடன்கள் பெண் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஸ்டாண்ட்-அப் இந்தியா

- 2025 டிசம்பருக்குள் 2.05 லட்சம் கடன் கணக்குகள் மூலம் பெண் பயனாளிகள் 48,000 கோடி ரூபாய்க்கும் அதிகமாகப் பெற்றுள்ளனர்; ஒட்டுமொத்தமாக, இந்தத் திட்டத்தின் கீழ் 2.75 லட்சம் கணக்குகள் மூலம் 62,790 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ. 10 லட்சம் முதல் 1 கோடி ரூபாய் வரையிலான கடன்கள் பெண் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்



19,500+ கிராமங்கள் 'சம்பூர்ண சுகன்யா கிராமம்' என அறிவிக்கப்பட்டுள்ளன.

- பெண்களின் கல்வி மற்றும் சுகாதாரத் தரங்களில் முன்னேற்றத்துடன், அவர்களின் பிறப்பு விகிதத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்,
- பெண் குழந்தையைப் பாதுகாப்போம், பெண் குழந்தைக்குக் கற்பிப்போம்; 10 வயதுக்கு மேற்பட்ட பெண்களிடையே கல்வியில் 15% அதிகரிப்பு; சுமார் 95% மகப்பேறு மருத்துவமனைகளில் நடைப்பெற்றுள்ளது.
- செல்வமகள் சேமிப்பு திட்டம்: 4.61 கோடி கணக்குகளில், 8.2% ஆண்டு வட்டியுடன், 3.40 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் சேமிக்கப்பட்டுள்ளது. (2026 பிப் 28 நிலவரப்படி).

புத்தொழில் நிறுவனங்கள்



₹3100+ கோடி கடந்த 6 ஆண்டுகளில் புத்தொழில் நிறுவனங்களில் மகளிர் சக்தி வழிகாட்டுதலில் அரசால் முதலீடு

- மொத்தமுள்ள 1.02 லட்சம் புத்தொழில் நிறுவனங்களில், சுமார் 48% நிறுவனங்களில் குறைந்தது ஒரு பெண் இயக்குநர் அல்லது பங்குதாரர் உள்ளார்.

2.12 லட்சம் புத்தொழில் நிறுவனங்கள் 2026 ஜனவரி 31 நிலவரப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தொழில்முனைவோர் பங்களிப்பை அதிகரித்தல்

7.83 கோடி எம்எஸ்எம்இ-க்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில், 3.07 கோடி எம்எஸ்எம்இ-க்கள் பெண்கள் தலைமையிலானவை.
2026 பிப்ரவரி 28 நிலவரப்படி

- 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தலைமையிலான சிறு, குறு நிறுவனங்கள் (எம்எஸ்இ-க்கள்), ஜிஇஎம் மூலம் 80,000 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள ஆர்டர்களைப் பெற்றுள்ளன.
- சுய உதவிக் குழுக்கள், பெண்களின் வருவாயை அதிகரிக்கும் அதே வேளையில், அவர்கள் தொழில்முனைவோராக மாறவும் வலுசேர்க்கின்றன.





லட்சாதிபதி சகோதரித் திட்டம்

51,852 'வங்கித் தோழிகள்' சுய உதவிக் குழுக்களுக்கு கடன் அனுகல் வசதியை ஏற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- 2027 மார்ச் மாதம் என்ற காலக்கெடுவிற்கு ஓராண்டு முன்னதாகவே 3 கோடி லட்சாதிபதி சகோதரிகள் என்ற வரலாற்றுச் சாதனையை அரசு விஞ்சியுள்ளது.
- பெண்கள் இப்போது பொருளாதார வளர்ச்சியில் வலுவான பங்காளிகளாக உள்ளனர். இந்தத் திட்டம் பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பை ஊக்குவிக்கும் புதிய சக்தியை பிரதிநிதித்துவம் செய்கிறது.
- சுய உதவிக் குழுக்கள் மூலம், பெண்களின் வருமானம் தற்சார்பை எட்டும் வகையில் அதிகரிக்கப்பட்டு வருகிறது.
- இந்தியாவில் சுமார் 1.2 கோடி சுய உதவிக் குழுக்கள் உள்ளன. அவற்றில் 88% பெண்கள் மட்டுமே உள்ள குழுக்களாகும்.
- 2025 டிசம்பர் நிலவரப்படி, தீன்தயாள் அந்த்யோதயா திட்டம் – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 90.91 லட்சம் சுய உதவிக் குழுக்களில் 10.05 கோடிக்கும் அதிகமான பெண்கள் இணைந்துள்ளனர்
- இந்த சுய உதவிக் குழுக்களுக்கு மொத்தம் 11.86 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கிடைக்கும் பிணையமில்லா கடன்களுக்கான வரம்பு 10 லட்சம் ரூபாயிலிருந்து 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- 2029 மார்ச் மாதத்துக்குள் 6 கோடி லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்குவதற்கான புதிய லட்சிய இலக்கு இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த முன்முயற்சியின் அளவு, லட்சியம் ஆகிய இரண்டும் இரட்டிப்பாகும்.

பிரதமரின் உஜ்வாலா திட்டம்

சுமார் **11** கோடி

உஜ்வாலா சமையல் இலவச எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், புகை மண்டிய சமையலறைகளின் கடினமான தினசரி சிரமங்களிலிருந்து நிவாரணம் கிடைத்துள்ளது.



- இந்த முன்முயற்சி ஒவ்வொரு நாளும் சுமார் 3 மணிநேரம் கூடுதல் நேரத்தை வழங்குவதன் மூலம் பெண்களின் வாழ்க்கையை எளிதாக்கியுள்ளது, புகை நிறைந்த சமையலறைகள் இப்போது கடந்த காலத்தின் நினைவுகளாக மட்டுமே உள்ளன.

பிரதமரின் வீட்டு வசதி திட்டம்



3 கோடி வீடுகள், பிரதமரின் கிராம வீட்டு வசதி திட்டத்தின் கீழ், ஏப்ரல் 9, 2026 நிலவரப்படி வெற்றிகரமாகக் கட்டப்பட்டுள்ளன.

- பிரதமரின் ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 72% வீடுகள் பெண்களின் தனிப்பட்ட அல்லது கூட்டு உரிமையில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், பாதுகாப்பான வீட்டு வசதியுடன் பொருளாதார மற்றும் சமூக அதிகாரமளித்தலுக்கு வலுவான அடித்தளத்தை அவர்களுக்கு வழங்குகிறது.
- வீட்டு உரிமையில் பெண்களின் பங்கேற்பு வலுவாக உள்ளது.
- பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 2026 மார்ச் 2-க்குள் வழங்கப்பட்ட 97.3 லட்சம் வீடுகளில், 96 லட்சம் வீடுகள் பெண்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன அல்லது குடும்பத்தில் உள்ள ஆண் உறுப்பினருடன் கூட்டு உரிமையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜன் தன்; பொருளாதாரத் தற்சார்பு

57.99 கோடி ஜன் தன் கணக்குகள் 2026 ஏப்ரல் 1 நிலவரப்படி

32.33+ கோடி ஜன் தன் கணக்குகள் பெண்களை முறைப்படியான வங்கித் துறையில் இணைத்து வருகின்றன.



56% வங்கிக் கணக்குகள் பெண்களின் பெயரில் உள்ளன. அவர்கள் தற்போது வங்கிகளின் நாயகர்களாக உருவெடுத்துள்ளனர்.

- வங்கிச் சேவைகளின் அதிகாரம் இப்போது நேரடியாகப் பெண்களின் கைகளில் உள்ளது.
- இந்த இந்திய மாதிரி உலகிற்கு ஓர் உத்வேகமாக அமைகிறது என்பதை ஐ.நா சபையும் அங்கீகரித்துள்ளது; இது பெண்கள் மற்றும் சிறுமிகளின் அதிகாரமளித்தலுக்கு ஒரு புதிய பாதையை அமைக்கிறது.

தூய்மை இந்தியா இயக்கம்

12 கோடிக்கும் அதிகமான கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இது பெண்களின் பாதுகாப்பு, சுகாதாரம், கண்ணியம் ஆகியவற்றை உறுதி செய்துள்ளது.

- இது கண்ணியம் மற்றும் மரியாதைக்கான ஒரு புதிய தொடக்கத்தைக் குறிக்கிறது. திறந்தவெளி கழிப்பிடம் என்பது இப்போது கடந்த காலத்தின் ஒரு பகுதியாகிவிட்டது.



ஆரோக்கியமான பெண்: பாதுகாப்பின் அடித்தளம்



எந்தவொரு சமூகத்தின் ஒட்டுமொத்த நல்வாழ்விற்கும், ஒரு நாட்டின் வளமைக்கும் தாய்மை ஆரோக்கியம் மிகவும் இன்றியமையாததாகும். பெண்கள் ஆரோக்கியமாக இருக்கும்போது, அது அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் உடல், மன, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி மீது நேரடியான மற்றும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த நோக்கத்தை முன்னிறுத்தி, ஆரோக்கியமான தாய்மையை அதிகரிப்பதன் மூலம், 'புதிய இந்தியா' ஓர் ஆரோக்கியமான நாட்டைத் தீவிரமாகக் கட்டமைத்து வருகிறது.

ஊட்டச்சத்து

- ஊட்டச்சத்து இருவார விழாவின் 8-வது நிகழ்வு 2026 ஏப்ரல் 9 முதல் 23 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ஊட்டச்சத்து இருவார விழா 2026-க்கான கருப்பொருள்: "வாழ்வின் முதல் ஆறு ஆண்டுகளில் மூளை வளர்ச்சியை அதிகப்படுத்துதல்" என்பதாகும்.
- மேம்பட்ட ஊட்டச்சத்து விளைவுகளை அடைவதற்காக 'ஊட்டச்சத்து 2.0 இயக்கம்' தொடங்கப்பட்டுள்ளது.
- கடந்த 4 ஆண்டுகளில் இந்தத் திட்டத்திற்காக 11,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஊட்டச்சத்து இயக்கம்; இந்தத் திட்டத்தின் கீழ் தற்போது 10.09 கோடி பயனாளிகள் உள்ளனர். இத்திட்டத்தின் செயல்பாடுகளை நிகழ்நேரத்தில் கண்காணிப்பதை உறுதி செய்வதற்காக 'போஷன் டிராக்கர்' தொடங்கப்பட்டுள்ளது. 100% ஊட்டச்சத்து செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகப் பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

பிரதமரின் தாய்மையைப் போற்றுவோம் திட்டம்

4.78 கோடி பயனாளிகள் பதிவு

4.26 கோடி பேர் பயனடைந்துள்ளனர்.

₹20,073 கோடி இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- முதல் குழந்தை பிறந்து நலமுடன் இருந்தால், பயனாளிக்கு 5,000 ரூபாய் இரண்டு தவணைகளாக வழங்கப்படும்.
- இரண்டாவது குழந்தை பெண் குழந்தையாக இருந்தால் பயனாளிக்கு 6,000 ரூபாய் மொத்தமாக வழங்கப்படும்.

சானிடரி நாப்கின்

15 ஆயிரத்துக்கும் அதிகமான பிஎம்பிஜேபி மையங்கள் சானிடரி நாப்கின்களை ஒரு ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்கின்றன.



- 2025 ஜனவரி 31 வரை, 72 கோடி ரூபாய் மதிப்பிலான சானிடரி நாப்கின்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கருக்கலைப்பு கால வரம்பு

பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கத்துடன், கருக்கலைப்புக்கான கால வரம்பை 20 வாரங்களிலிருந்து 24 வாரங்களாக நீட்டிக்கும் 'கர்ப்பத்தை மருத்துவ ரீதியாக முடித்துக்கொள்ளும் சட்டம்' ஒன்றுக்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.

1976-ல், நாட்டின் மக்கள் தொகை 54.79 கோடியாக இருந்தது; இன்று, இது 140 கோடியாக உள்ளது. அவையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, அவையின் வேலை நாட்களின் எண்ணிக்கையும் அதற்கேற்ப அதிகரிக்கப்படுவதை உறுதிசெய்வது அரசின் கடமையாகும்.

அவர்களை வலுவூட்டி வருகிறது. பெண்கள் தற்போது வேலைவாய்ப்புகளை உருவாக்குபவர்களாகவும் அதிக அளவில் உருவாகி வருகின்றனர். நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களில் பாதிக்கும் மேற்பட்டவற்றில், குறைந்தது ஒரு பெண் இயக்குநராவது இடம்பெற்றுள்ளார். தற்போது, ஜிஇஎம் எனப்படும் அரசு மின்னணுச் சந்தை இணையதளத்தில், பெண்களை உரிமையாளர்களாகக் கொண்ட 2,00,000-க்கும் அதிகமான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (எம்எஸ்எம்இ-க்கள்) தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராமப்புறப் பெண்களின் தயாரிப்புகளுக்குச் சிறந்த சந்தை அணுகலை வழங்கும் நோக்கத்துடன், 2026-27 மத்திய பட்ஜெட்டில் 'ஷீ-மார்ட்' (SHE-Mart) திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் சமூகத்தால் நடத்தப்படும் சில்லறை விற்பனைக் கடைகள் நிறுவப்படும். கடந்த ஆண்டு செயல்படுத்தப்பட்ட தொழிலாளர் சட்டங்கள், பெண் தொழிலாளர்களுக்கு மிகவும் உள்ளடக்கிய, பாதுகாப்பான மற்றும் அதிகாரமளிக்கும் பணிச்சூழலை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட விதிகளைக் கொண்டுள்ளது.

சமூக நீதி மற்றும் பாதுகாப்பான சூழல்

பெண்கள் பாதுகாப்பாகவும் செழிப்பாகவும் இருக்கும்போது, உலகமும் செழிப்படைகிறது. அவர்களின் பொருளாதார மேம்பாடு வளர்ச்சியைத் தூண்டுகிறது. கல்விக்கான அவர்களின் அணுகல் அனைவருக்குமான முன்னேற்றத்திற்கு உத்வேகம் அளிக்கிறது. அவர்களின் தலைமைத்துவம் அனைவரையும் உள்ளடக்கிய தன்மையை வளர்க்கிறது. அவர்களின்

மகப்பேறுக்கு முந்தைய பராமரிப்பு– பாதுகாப்பான தாய்மையை நோக்கிய முதல் படி

- கருவுற்ற பெண்களுக்கு இலவசமான, நம்பகமான, விரிவான மற்றும் தரமான மகப்பேறுக்கு முந்தைய பராமரிப்பை வழங்குவதற்காக, மத்திய அரசு 2016–ல் 'பிரதமரின் பாதுகாப்பான மகப்பேறு இயக்கத்தைத் தொடங்கியது.
- 2025 ஜூன் நிலவரப்படி, இத்திட்டத்தின் மூலம் 7 கோடிக்கும் அதிகமான பெண்கள் பயனடைந்துள்ளனர்.
- பிரதமரின் பாதுகாப்பான மகப்பேறு இயக்கத்தின் சேவைகள், தற்போது 22,000–க்கும் அதிகமான சுகாதார மையங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

ஜல் ஜீவன் இயக்கம்

15.84 கோடி (81.71%) வீடுகள் தற்போது குழாய் மூலம் குடிநீர் விநியோகத்தைப் பெறுகின்றன (2026 மார்ச் 3 நிலவரப்படி).



- உலக சுகாதார நிறுவனம் நடத்திய ஓர் ஆய்வு, ஒவ்வொரு கிராமப்புறக் குடும்பத்திற்கும் குழாய் நீர் வசதியை வழங்குவதன் மூலம், முன்பு நீர் சேகரிப்பதில் செலவிடப்பட்ட நேரத்தில் குறிப்பிடத்தக்க அளவு சேமிப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாகப் பெண்களுக்கு இது பெரும் பயனளிக்கும்; ஏனெனில், நீர் சேகரிக்கும் பணியில் நான்கில் மூன்று பங்குப் பணிகளை அவர்களே மேற்கொள்கின்றனர். (இதன் மூலம் நாளொன்றுக்கு 5.5 கோடி மணிநேரம் சேமிக்கப்படுகிறது).
- வெளியிலிருந்து நீர் எடுத்துவரும் குடும்பங்களின் எண்ணிக்கை 8.3 சதவீதம் குறைந்துள்ளதாக எஸ்பிஜ நடத்திய ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. ஏறத்தாழ 9 கோடிப் பெண்கள் இனி நீர் எடுத்துவரும் தேவை இன்றி உள்ளனர். இதனால், விவசாயம் மற்றும் அது சார்ந்த துணைச் செயல்பாடுகளில் பெண்களின் பங்கேற்பு 7.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

பிறப்பில் பாலின விகிதம்

(1,000 பெண் குழந்தைகளுக்கு)



918 2014–15

929 2024–25

தடுப்பூசி செலுத்துதல்; தாயாரையும், பச்சிளம் குழந்தைகளையும் பாதுகாத்தல்

- இந்திர தனுஷ் இயக்கம் 2014–ல் தொடங்கப்பட்டது.
- கருவுற்ற பெண்கள் உட்பட அனைவருக்கும் நோய்த்தடுப்புப் பாதுகாப்பை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.

1.15 கோடி, 14 வயதுடைய பெண் குழந்தைகளை இலவச எச்பிவி தடுப்பூசி இயக்கம் இலக்காகக் கொண்டுள்ளது. நாடு தழுவிய இந்த இயக்கம் 2026 பிப்ரவரி 28 அன்று ராஜஸ்தானின் அஜ்மீரில் தொடங்கப்பட்டது.

- இதன் நோக்கம் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதாகும். இது நாட்டில் பெண்களுக்கு ஏற்படும் இரண்டாவது பொதுவான புற்றுநோயாகும்.



யோசனைகள் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான மிகவும் பயனுள்ள அணுகுமுறை, பெண்கள் தலைமையிலான வளர்ச்சி மாதிரியாகும். இந்தியா இந்த திசையில் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, ஓர் உத்வேகம் தரும் உதாரணமாகத் திகழ்கிறார். அவர் எளிய பழங்குடிப் பின்னணியைக் கொண்டவர். ஆனாலும் இப்போது உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தை வழிநடத்துகிறார். அவர் உலகின் இரண்டாவது பெரிய பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதியாக உள்ளார். பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை வழங்குவது, நாட்டின் வளர்ச்சியில் அவர்களின் சம பங்களிப்பை உறுதி செய்வது என்ற குறிப்பிட்ட நோக்கத்துடன், பெண்களின் பாதுகாப்பு தொடர்பான பல முயற்சிகள் தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று, பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும், இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் அவர்களின் முழுமையான பங்களிப்பை உறுதி செய்வதிலும் நாட்டின் முன்னுரிமை உள்ளது.

மகன்களையும் மகள்களையும் சமமாகக் கருதும் வகையில், மகள்களுக்கான சட்டபூர்வ திருமண வயதை 21 ஆக உயர்த்த மத்திய அரசு தற்போது பரிசீலித்து வருகிறது. தற்போது, பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் நாடு கடுமையான சட்டங்களை இயற்றியுள்ளது; பாலியல் வன்கொடுமை போன்ற கொடூரமான குற்றங்களுக்கு, மரண தண்டனை விதிப்பதற்கான பிரிவுகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சட்டங்கள் கடுமையாக அமல்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் வகையில், நாடு முழுவதும் பெருமளவிலான விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன; மேலும், நிர்வாகக் கட்டமைப்புகளும் சீரமைக்கப்பட்டு வருகின்றன. காவல் நிலையங்களில் பெண்களுக்கான உதவி மையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது முதல், 24 மணி நேர உதவி எண்களை நிறுவுவது மற்றும் இணையக் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான இணையதளங்களை அறிமுகம் செய்வது வரை–பல்வேறு முன்னெடுப்புகள் பெண்களுக்குப் பாதுகாப்பு அரண்களாகத் திகழ்கின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் விஷயத்தில், "சகிப்புத்தன்மையற்ற அணுகுமுறை"

தலைமைத்துவமும் மரியாதையும்


கர்னல் சோபியா குரேஷி, விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகிய இரண்டு பெண் அதிகாரிகள், 'ஆபரேஷன் சிந்தூர்' பற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோது, அது வெறும் பணி குறித்த ஒரு புதுப்பிப்பாக மட்டும் இருக்கவில்லை; அது மாறிவரும் இந்தியாவின் உணர்வைப் பிரதிபலித்த ஒரு தருணமாகும். இந்தத் தருணம் நாடு முழுவதற்கும் உத்வேகம் அளித்ததுடன், 'மகளிர் சக்தி'யின் வளர்ந்து வரும் செல்வாக்கையும் தெளிவாக வெளிப்படுத்தியது.

ஆயுதப்படைகள்–சைனிக் பள்ளிகளில் இப்போது பெண்களும் சேர்ந்து படிக்கலாம்

- தேசியப் பாதுகாப்பு அகாதமியில் பெண் பயிற்சி அதிகாரிகளைச் சேர்க்கும் பணி 2022–ல் தொடங்கியது.
- பெண்கள் இப்போது இந்திய ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையில் நிரந்தரப் பதவிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.
- கடந்த 10 ஆண்டுகளில், இந்திய ராணுவத்தில் பெண் அதிகாரிகளின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.
- பெண் அதிகாரிகள் இப்போது லெப்டினன்ட் ஜெனரல், போர் விமானி, படைப்பிரிவுத் தளபதி போன்ற முக்கிய தலைமைப் பதவிகளில் பணியாற்றி வருகின்றனர்.
- 12 துறைகள் மற்றும் சேவைகளில் பெண்களுக்கு நிரந்தரப் பதவிகள் வழங்கப்படுகின்றன.
- தேசியப் பாதுகாப்பு அகாதமியில் பெண்களைச் சேர்ப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது; மே 2025–ல் 17 பெண் பயிற்சி மாணவர்களும், நவம்பர் 2025–ல் 15 பெண் பயிற்சி மாணவர்களும் பட்டம் பெற்றனர்.
- முதல்முறையாக, 75–வது குடியரசு தினத்தை முன்னிட்டு, மூன்று சேவைகளையும் சேர்ந்த வீராங்கனைகளைக் கொண்ட ஒரு பெண்கள் குழு கடமைப் பாதையில் அணிவகுத்துச் சென்றது. மேலும், 2007 முதல் 2016 வரை, அமைதி காக்கும் பணிக்காக – குறிப்பாக லைபீரியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணிக்கு – முழுவதும் பெண்களைக் கொண்ட காவல் பிரிவை அனுப்பிய உலகின் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா கொண்டுள்ளது.
- ஐ.நா.வின் பாலின சமத்துவ உத்திக்கு இணக்கமாக, 2028–க்குள் ராணுவப் பிரிவுகளில் 15% பெண் பிரதிநிதித்துவத்தையும், பணியாளர் அதிகாரி அல்லது பார்வையாளர் பதவிகளில் 25% பிரதிநிதித்துவத்தையும் எட்டுவதை நோக்கமாகக் கொண்டு, இந்தியா ஏற்கனவே பணியாளர் அதிகாரி மற்றும் பார்வையாளர் பிரிவுகளில் 22% பிரதிநிதித்துவத்தை அடைந்துள்ளது.



இந்திய ராணுவத்தில் பெண்கள்



இந்திய ராணுவம் 'மகளிர் சக்தி'யால் வலுவடைந்து வருகிறது


154+ இந்தியப் பெண்கள் 2025 மத்தி வரை ஆறு ஐநா அமைதிப் படைகளில் பணியமர்த்தப்பட்டனர்.






2026, ஜனவரி 26 அன்று, குடியரசு தின அணிவகுப்பில் உதவி கமாண்டன்ட் சிம்ரன் பாலா, ஆண் சிஆர்பிஎஃப்ப் குழுவை வழிநடத்தி வரலாறு படைத்தார். முதல் முறையாக, ஒரு பெண் அதிகாரி சிஆர்பிஎப்பின் ஆண் படைப்பிரிவுக்கு தலைமை தாங்கினார்.

பெண் விமானிகள்



இந்த துறையில், அயர்லாந்து (9.9%), அமெரிக்கா (5.5%) ஆகிய நாடுகளை விட இந்தியா முன்னணியில் உள்ளது.



அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்



12.5 லட்சம் பெண்கள் ஒவ்வொரு ஆண்டும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை பணியாளர்களாக சேர்ந்து வருகின்றனர்.

- ஆதித்யா–எல்1 மற்றும் சந்திரயான்–3 போன்ற முக்கிய இஸ்ரோ திட்டங்களில் பெண்கள் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கின்றனர்.
- இந்தியாவில், ஸ்டெம் (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) துறையில் பட்டம் பெற்றவர்களில் 43 சதவீதம் பேர் பெண்கள் – இது உலக அளவில் மிக உயர்ந்த சதவீதங்களில் ஒன்றாகும்.
- இன்று, அரசு – தனியார் ஆகிய இரு துறைகளிலும் ஸ்டெம் தொடர்பான துறைகளில் பணிபுரியும் மொத்தப் பணியாளர்களில் சுமார் 18.6 சதவீதம் பேர் பெண்கள்; ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் உயர் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் அதிக எண்ணிக்கையிலான பெண்கள் முன்னேறி வருவதால், இந்தப் பங்கு சீராக உயர்ந்து வருகிறது.
- 'உயர்கல்வி குறித்த அகில இந்திய ஆய்வு' அறிக்கை 2021–22–ன் படி, அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் மேற்கொள்ளப்படும் மொத்த முனைவர் பட்டச் சேர்க்கைகளில் பெண்கள் தற்போது 41 சதவீதத்தைப் பெற்றுள்ளனர்; இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பெண்களின் ஆர்வமும் ஈடுபாடும் அதிகரித்து வருவதைப் பிரதிபலிக்கிறது.
- 'உயர்கல்வி குறித்த அகில இந்திய ஆய்வு' 2021–22 தரவுகளின்படி, நாட்டின் உயர்கல்வி நிலையில் உள்ள அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (ஸ்டெம்) ஆகிய துறைகளின் மொத்தச் சேர்க்கையில் பெண்கள் 43 சதவீதத்தைப் பெற்றுள்ளனர்.
- 'ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் புள்ளிவிவர அறிக்கை–2023'–ன் படி, நாடு முழுவதும் நடைபெறும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஸ்டெம் வல்லுநர்களாகப் பணிபுரியும் மொத்தப் பணியாளர்களில் 18.6 சதவீதம் பேர் பெண்கள் ஆவர்.
- இந்தியாவின் ஆதித்யா–எல்1 திட்டத்திற்கு ஒரு பெண் தலைமை தாங்குகிறார்; 'அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மையம்' மற்றும் அதன் ஆறு ஆய்வகங்களுக்குப் பெண்கள் தலைமை தாங்குகின்றனர்; மேலும் சந்திரயான்–3 திட்டத்திலும் ஒரு பெண் முக்கியத் தலைமைப் பொறுப்பை வகித்தார்.
- ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் சார்ந்த துறையில், பெண் ஆராய்ச்சியாளர்கள் ஆண்டுதோறும் 5,000–க்கும் அதிகமான காப்புரிமைகளைப் பதிவு செய்து வருகின்றனர் – சில காலத்திற்கு முன்பு வரை இந்த எண்ணிக்கை 100–க்கும் குறைவாகவே இருந்தது.



25% பெண்கள் இந்தியாவின் செமிகண்டக்டர் பணிகளில் பங்கேற்பு

"முடிவெடுக்கும் நடைமுறைகளில் பெண்களின் பங்கேற்பு அதிகரிக்கும்போது, அது அமைப்பில் அதிக உணர்திறனை ஏற்படுத்துகிறது என்பதை பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இது ஒரு மகத்தான பலமாகும்; இதன் பயனாக, தண்ணீர், கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து போன்ற பல்வேறு துறைகளில் அதிக அர்ப்பணிப்புடனும் உணர்வுபூர்வமாகவும் செயல்படுத்தப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன."

நரேந்திர மோடி, பிரதமர்

என்ற கொள்கையின் அடிப்படையில் தற்போதைய மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

சட்டபூர்வமான பாதுகாப்பை வழங்குவது மட்டுமின்றி, பெண்களின் கண்ணியத்தையும் சுயமரியாதையையும் நிலைநிறுத்தும் நோக்கிலான இயக்கங்களையும் மத்திய அரசு முன்னெடுத்துள்ளது. மத்திய அரசின் பெரும்பாலான திட்டங்களின் கீழ், அதிகாரபூர்வ ஆவணங்களும் சலுகைகளும் வழங்கும் போது–பயனாளிகள் கட்டமைப்பின் மையப்புள்ளியில்–அக்குடும்பத்தைச் சேர்ந்த பெண்களே முதன்மையாகக் கருதப்பட்டு முன்னிறுத்தப்படுகின்றனர். மேலும் சமீபத்திய சீர்திருத்தங்களுக்கு முன்–ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த பெண்கள், காஷ்மீர் அல்லாத பிற பகுதிகளைச் சேர்ந்த ஆண்களைத் திருமணம் செய்துகொண்டால், அவர்களும் அவர்களது குழந்தைகளும் தங்கள் மூதாதையர் சொத்துரிமைகளை இழக்கும் நிலை இருந்தது. இருப்பினும், அரசியலமைப்புச் சட்டத்தின் 370 மற்றும் 35ஏ ஆகிய பிரிவுகள் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் தற்போது தங்களுக்குரிய நியாயமான உரிமைகளைப் பெற்றுள்ளனர். வெளிநாடு வாழ் இந்தியர்கள், பெண்களைத் திருமணம் செய்துகொண்டு பின்னர் அவர்களைக் கைவிடும் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளைக் கையாளுவதற்காகவும் சட்டங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

சமூக அளவில், பெண்களை வரலாற்று ரீதியாகத் துன்புறுத்துவதற்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கி வந்த முத்தலாக் போன்ற சமூகத் தீமைகளைக் கட்டுப்படுத்த சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்போது, லட்சக்கணக்கான இஸ்லாமிய பெண்கள், முத்தலாக் எனும் மனிதாபிமானமற்ற நடைமுறைக்கு எதிராகப் பாதுகாப்பைப் பெற்றுள்ளனர். இந்தச் சட்டம் இயற்றப்பட்ட சில ஆண்டுகளிலேயே, முத்தலாக் சம்பவங்களின் எண்ணிக்கை 80 முதல் 82 சதவீதம் வரை குறைந்துள்ளது. இன்று, இந்தியாவின் பெண்கள் சுதந்திரமானவர்களாகவும், பொருளாதார ரீதியாக வலுவடைந்தவர்களாகவும், உறுதியால் நிறைந்தவர்களாகவும், வலுவான பாதுகாப்பு உணர்வைக் கொண்டவர்களாகவும் திகழ்கின்றனர்; அவர்கள் வெறும் கனவு காண்பவர்களாக மட்டுமின்றி, அந்தக் கனவுகளைச் செயலில் இறங்கி நனவாக்குபவர்களாகவும் உள்ளனர்.

உயர் கல்விக்கான அணுகல்

பெண்களுக்கு உயர்கல்வி கிடைப்பது உலகளாவிய முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்கிறது. அவர்களின் தலைமைத்துவம் அனைவரையும் உள்ளடக்கிய தன்மையை ஊக்குவிக்கிறது; அவர்களின் சிந்தனைகள் ஆக்கபூர்வமான மாற்றத்தைத் தூண்டுகின்றன. எனவே, கடந்த 12 ஆண்டுகளாக, ஒரு முழுமையான அணுகுமுறையுடன் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன...



உயர் கல்வியில் பெண்களின் மொத்த பதிவு விகிதம் (ஜிஇஆர்)

22.9% 2014-

30.2% 2022-



பிஎச்டி படிப்புகளில் பெண் ஆராய்ச்சியாளர்கள்

64,724

முதல் பெண் ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு.

- பதிவில் 135.6% என்ற ஒரு அசாதாரண அதிகரிப்பு (2014–15 முதல் 2022–23 வரை)

ஏஐசிடிஇ

35,998

பெண்கள் 2024–25–ம் ஆண்டில், ஏஐசிடிஇ பிரகதி கல்வி உதவித்தொகை திட்டத்தில் பயனடைந்தனர்.

முதுநிலை படிப்புகளுக்கான தேசியக் கல்வி உதவித்தொகை

- 2023–24–ல் மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு திட்டம்
- 30% இடங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.



பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

- பிரதமரின் திறன் மேம்பாட்டு திட்டத்தின் (பிஎம்கேவிஒய்) கீழ், 7.2 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் இது வரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

45% இந்தியா முழுவதும் பயிற்சி பெற்ற மொத்த விண்ணப்பதாரர்களில் பெண்கள் ஒரு முக்கியப் பங்காகத் திகழ்கின்றனர்.

விஞ்ஞான் ஜோதி திட்டம்

300 கிராமங்கள் விஞ்ஞான் ஜோதி திட்டத்தின் கீழ், 80,000–க்கும் அதிகமான பெண்கள் உதவி பெறுகின்றனர்.

இந்த மாற்றத்திற்கு ஒரு முக்கிய உந்துசக்தியாக அமைந்தது, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான உறுதியான அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளே ஆகும். இம்முயற்சிகள், பெண்கள் மற்றும் சிறுமிகளைத் தாழ்ந்தவர்களாகக் கருதும், பல தசாப்தங்களாக நிலவி வந்த மனநிலையில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

பெண்களின் ஆற்றலை மையப் புள்ளியில் நிறுத்தும் ஒரு முழுமையான அணுகுமுறையால் உந்தப்பட்ட மத்திய அரசின் அயராத முயற்சிகளின் விளைவாகவே–இன்று கடமைப் பாதையில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பை முன்னின்று நடத்துவதாகட்டும், அதிநவீன 'ரஃபேல்' போர் விமானங்களை இயக்குவதாகட்டும், போர்க்களத்தின் முன்னணிப் படைகளில் நின்று எதிரிகளை எதிர்கொள்வதாகட்டும், விளையாட்டுத் துறையில் நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாகட்டும், அல்லது சுயவேலைவாய்ப்பு வாய்ப்புகளைப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை ஆண்களுக்கு இணையான நிலையில் வலுப்படுத்துவதாகட்டும்–பெண்கள் ஆண்களுடன் தோளோடு தோள் நின்று பயணிப்பது மட்டுமின்றி, அவர்களை வெகுவாக முந்திச் சென்று நாட்டின் பெருமையாகத் திகழ்கின்றனர். தங்களின் அசாதாரணத் திறன்களின் வாயிலாக, சமமான வாய்ப்புகள் வழங்கப்பட்டால், அவர்களால் ஒரு வீட்டை மட்டுமல்லாமல், ஒரு வளமான மற்றும் புகழ்பெற்ற தேசத்தையும் கட்டியெழுப்ப முடியும் என்பதைப் பெண்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளனர்.

தொழிலாளர் பங்கேற்பில் பாலின சமத்துவத்தை அடைவதன் மூலம், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 27 சதவீதம் அதிகரிக்கக்கூடும் என்று சர்வதேச செலாவணி நிதியம் வெளியீட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், திறமையான 50 சதவீதப் பெண்கள், தொழிலாளர் தொகுப்பில் இணைந்தால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 1.5 சதவீதம் உயர்ந்து, ஆண்டொன்றுக்கு 9 சதவீதத்தை எட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'புதிய இந்தியாவில்', பெண்களைத் தொழிலாளர் தொகுப்பில் ஒருங்கிணைக்க வேண்டிய அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, பெண்களுக்கு சம

வேளாண் துறையில் 'மகளிர் சக்தி'

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தியா போன்ற ஒரு நாட்டில், கிராமப்புறப் பொருளாதாரத்தின் பெரும்பகுதி பெண்களின் அர்ப்பணிப்புமிக்க உழைப்பு, திறன்கள் மற்றும் தொழிலாளர்களைச் சார்ந்துள்ளது. விதைத்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல், கால்நடை வளர்ப்பு, விதை பாதுகாப்பு, உணவுப் பதப்படுத்துதல் போன்ற பல்வேறு வேளாண்மை சார்ந்த பணிகளில், பெண்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். எனவே, தொழில்நுட்பப் பயிற்சிகள் வாயிலாக, பெண்களைக் கொண்ட ஒரு சிறப்புப் பிரிவினர் அதிகாரம் பெற்று வருவதுடன், அவர்களுக்கு வருவாய் ஈட்டுவதற்கான புதிய வாய்ப்புகளும் உருவாகி வருகின்றன.



ஏராளமான வாய்ப்புகள்

- வயல்களில் பயிர் சாகுபடி செய்வதாக இருந்தாலும் அல்லது கால்நடை வளர்ப்பாக இருந்தாலும், தற்போதைய சூழலில், நமது கிராமப்புறப் பெண்களுக்குப் போதிய அளவுக்கு வாய்ப்புகள் நிறைந்துள்ளன.
- கிராமப்புறங்களில் தற்போது, உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளிப்பதற்குப் பயன்படும் நவீன முறைகளுக்கு, 'நமோ ட்ரோன் சகோதரிகள்' முன்னின்று வழிகாட்டுகின்றனர்.
- இயற்கை வேளாண் நடைமுறைகள் குறித்து, விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க, 70,000 'விவசாயப் பெண் தோழிகள்' தயாராக உள்ளனர்.

வேளாண் துறையில் 'பெண்களின் வலிமை'

11.61 லட்சம்

'வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை என்ற திட்டத்தின் கீழ், பிப்ரவரி 26 நிலவரப்படி, 11.61 லட்சத்திற்கும் அதிகமான பெண் விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

₹2,377 கோடி

'வேளாண் உள்கட்டமைப்பு நிதியத்தின்' கீழ், 2025 பிப்ரவரி 28 நிலவரப்படி, பெண்கள் தலைமையிலான 8,190 திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், ரூ. 2,377 கோடி வழங்கப்பட்டுள்ளது.

விவசாயி உற்பத்தியாளர் அமைப்புத் திட்டம்

- இத்திட்டத்தின் கீழ்,'10,000 விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகளை, (பிப்ரவரி 2026-க்குள்) உருவாக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது. ஒவ்வொரு விவசாயி உற்பத்தியாளர் அமைப்பின் இயக்குநர்கள் குழுவில், குறைந்தது ஒரு பெண் உறுப்பினராவது கட்டாயம் இடம்பெற வேண்டும்.
- 1,175 விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகளில், 100% பங்குதாரர்களாகப் பெண்களே உள்ளனர். அதேவேளையில், 1,084 விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகளில், 50% முதல் 99% வரை பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

₹1.01+ லட்சம் கோடி

'பிரதமரின் விவசாயிகள் கௌரவிப்பு நிதித் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து, இன்றுவரை, இத்திட்டத்தின் பயனாளிகளான பெண்களுக்கு ரூ. 1.01 லட்சம் கோடிக்கும் கூடுதலாக நிதியுதவி விநியோகிக்கப்பட்டுள்ளது.

1,094

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 1,094 ட்ரோன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 500 ட்ரோன்கள், 'நமோ ட்ரோன் சகோதரிகள்' என்ற முன்முயற்சியின் கீழ் வழங்கப்பட்டவையாகும்.



15,000

'நமோ ட்ரோன் சகோதரிகள்' திட்டத்தின் கீழ், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, 15,000 ட்ரோன்கள் வழங்கப்பட உள்ளன.

வாய்ப்புகளும், பாதுகாப்பான சூழலும், கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், உறுதியான நிலைப்பாட்டுடன், மத்திய அரசு, தொடர்ந்து புதிய திட்டங்களைத் தொடங்கி வருகிறது. அர்ப்பணிப்பும், விடாமுயற்சியும், மனஉறுதியுடன் இணையும் போதும், கருணையும், அனைவரையும் உள்ளடக்கிய மனப்பான்மையும், மனிதகுலம் முழுவதையும் அரவணைக்கும் போதும், ஒரு புதிய சகாப்தம் பிறக்கிறது. ஒரு புதிய விடியல் புலர்கிறது. "அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம், அனைவரின் நம்பிக்கை, அனைவரின் முயற்சி" என்ற ஒருங்கிணைந்த செயல்பாடுகளின் இந்த உணர்வுதான் இன்று, புதிய இந்தியாவின் அமிர்த காலத்தில் எழுச்சியுடன் முன்னேற்றப் பாதையில் செல்ல உதவுகிறது.


இத்தகைய மிகச் சரியான காரணத்தால்தான், தற்போது, இந்தியாவின் விண்வெளித் துறையில் பணியாற்றும் விஞ்ஞானிகளில், நான்கில் ஒரு பங்கு விஞ்ஞானிகள், பெண்களாக உள்ளனர். சந்திரயான், ககன்யான், செவ்வாய்க் கோள் பயணம் போன்ற முன்னோடித் திட்டங்களின் வெற்றிக்குப் பின்னால், பெண் விஞ்ஞானிகளின் திறமையும், கடின உழைப்பும், அமைந்துள்ளன. சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில், அதிக சதவீதப் பெண் விமானிகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக, இந்தியா திகழ்கிறது. மேலும், இந்திய விமானப்படையில், பெண் விமானிகள் தற்போது போர் விமானங்களை இயக்கி வருகின்றனர். முப்படைப் பிரிவுகள் அனைத்திலும், செயல்பாட்டுப் பணிகளிலும், போர்முனைகளிலும், பெண் அதிகாரிகள் அதிக எண்ணிக்கையில், பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். கடந்த 10 ஆண்டுகளில், இந்தியாவின் முப்படைகளில் உள்ள பெண் அதிகாரிகளின் எண்ணிக்கை 3,000 என்பதிலிருந்து 11,000 ஆக, ஏறக்குறைய நான்கு மடங்கு உயர்ந்துள்ளது. தற்போது, போர் விமானிகள், லெப்டினன்ட் ஜெனரல்கள், படைப்பிரிவுத் தளபதிகள் போன்ற முக்கியத் தலைமைப் பொறுப்புகளில், பெண்கள் நாட்டுக்காக சேவைசெய்கின்றனர். சைனிக் பள்ளிகள் மற்றும் தேசியப் பாதுகாப்பு அகாடமியில், பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டதன் மூலம், ஒரு மாற்றத்திற்கான அலையை உருவாக்கி, பல்வேறு இளம் பெண்களுக்குப் பாதுகாப்புத் துறையில் இடம் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத் துறையில் தனிச்சிறப்பு

இந்தியாவின் மகள்கள், வரலாற்றிலேயே முதல்முறையாக, மகளிர் உலகக் கோப்பையை வென்றபோது, உறுதியான வெற்றியாளர்களைக் கௌரவிக்கும் வகையில் பிரதமர் மோடி அந்தச் சாதனையை இனிப்புகள் வழங்கி கொண்டாடினார். 'புதிய இந்தியா', அனைத்துத் துறைகளிலும் முன்னின்று வழிநடத்த 'மகளிர் சக்தி'–க்கு வலு சேர்த்து வருகிறது என்பதற்கும், இந்தியாவின் விளையாட்டு வீராங்கனைகள், நாட்டின் விளையாட்டுத் துறை வரலாற்றில், ஒரு புதிய அத்தியாயத்தை எழுதி வருகின்றனர் என்பதற்கும், இது ஒரு சிறந்த சான்றாகத் திகழ்கிறது...



ஒலிம்பிக் போட்டிகளில் விளையாட்டு வீராங்கனைகளின் செயல்பாடுகள்



- 2008–ல் 25–ஆக இருந்த பெண் வீராங்கனை பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை 2012–ல் 23–ஆகக் குறைந்தது.
- பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில், 47 பெண்கள் பங்கேற்றனர்.

கேலோ இந்தியா



'கேலோ இந்தியா – பெண்களுக்கான விளையாட்டு' என்ற திட்டத்தின் கீழ், இதுவரை, ரூ. 9.5 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ், 21 விளையாட்டுப் பிரிவுகளில், 575 போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.
- பிப்ரவரி 2024 நிலவரப்படி, 60,000–க்கும் அதிகமான விளையாட்டு வீராங்கனைகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

ஐசிசி மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட், 2025, போட்டியில், கோப்பையை வென்று, இந்திய அணி வரலாற்றுச் சாதனை படைத்தது.

தடகள விளையாட்டு வீராங்கனைகள் வென்ற பதக்கங்கள்

23



2022 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், ஒட்டுமொத்தமாக இந்தியா வென்ற 61 பதக்கங்களில், 23 பதக்கங்களை, நமது வீராங்கனைகள் வென்றுள்ளனர்.

- 2023 ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில், மொத்தமாக இந்தியா வென்ற 111 பதக்கங்களில், 40 பதக்கங்களை வென்று விளையாட்டு வீராங்கனைகள் சாதனை படைத்தனர்.
- பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா வென்ற 6 பதக்கங்களில், 2 பதக்கங்களையும், பாராலிம்பிக் போட்டிகளில், இந்தியா வென்றுள்ள 29 பதக்கங்களில், 11 பதக்கங்களைக் கைப்பற்றி பெண்கள் சிறப்பாக ஜொலித்தனர்.

படைக்கப்பட்ட வரலாறு

- பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டியில், வரலாற்றிலேயே, இரண்டு தங்கப் பதக்கங்களை வென்ற, முதல் இந்தியப் பெண் என்ற பெருமையை, அவனி லெகாரா பெற்றார்.
- 2025–ல், பார்வையற்றோருக்கான முதலாவது மகளிர் டி20 உலகக் கோப்பையை வென்று, இந்திய மகளிர் கிரிக்கெட் அணி வரலாறுச் சாதனை படைத்தது.
- பாட்மிண்டன் வீராங்கனை பி.வி. சிந்து, 2020 டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்தார்.
- 2024 பாரிஸ் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில், இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்று வரலாறு படைத்த, இந்தியாவின் முதலாவது துப்பாக்கிச் சுடும் வீராங்கனை என்ற பெருமையை மனு பாக்கர் பெற்றார்.

பெண்கள் அதிகாரம்

ஓர் உறுதிமொழியாக உருவெடுக்கும்போது 'மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டம்', இந்தியாவின் வளர்ச்சியில் மகளிர் சக்தியின் பங்களிப்பை வரையறை செய்கிறது. 2047–ஐ நோக்கிச் செல்லும் 'அமிர்த காலத்தில்', ஒரு 'வளர்ச்சியடைந்த இந்தியாவை' உருவாக்குவதில், இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகத் திகழும். இது மகளிரின் அதிகாரத்திற்கு, ஒரு புதிய பாதையை வழங்கத் தயாராக உள்ளது. 'புதிய இந்தியாவை'க் கட்டமைப்பதில், பெண்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க தலைமைத்துவத்திற்கு, இது அங்கீகாரம் அளிப்பதுடன், உலக அளவில், பெண்களுக்கு உத்வேகம் அளிப்பதாக அமையும். 140 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டில், 50 சதவீதமாக உள்ள பெண்களுக்கு – 'மகளிர் சக்தி'–க்கு, இது உண்மையான உணர்வில் ஒரு கௌரவமாக அமைகிறது. "பெண்கள் தலைமையிலான வளர்ச்சி" என்ற கருத்தாக்கத்தை உலக அரங்கில் பிரதமர் நரேந்திர மோடி முன்வைத்தார். இந்தியா தலைமையிலான 'ஜி20 உச்சி மாநாட்டின்போது, பெண்கள் நமது 'தாய்மை சக்தி' மற்றும் மகள்கள், நாட்டின் கொள்கைகளில் பங்கேற்பது மட்டுமின்றி, அவற்றை வகுக்கும் நடைமுறையில், தங்களுக்குரிய நியாயமான இடத்தைப் பெற்றுக் கொள்ளவும் வல்லவர்கள் என்பதை, இந்தியா உலகிற்கு நிரூபித்துக் காட்டியது. இதற்குக் காரணம் என்னவென்றால், தற்போதைய மத்திய அரசைப் பொறுத்தவரை, பெண்களுக்கு அதிகாரம் என்பது, வெறும் அரசியல் விவகாரம் மட்டுமின்றி, அது ஒரு புனிதமான உறுதிமொழியுமாகும். இந்த அர்ப்பணிப்பு மிக்க உணர்வுக்கு ஒரு சிறந்த உதாரணம், பிரதமர் மோடி குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராகப் பணியாற்றிய காலத்திலிருந்தே தொடங்குகிறது. அப்போது அவர், தனது முழு ஊதியத்தையும், குஜராத் மாநில அரசுச் செயலகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் மகள்களின் கல்விக்கு உதவ நன்கொடையாக அளித்தார்

மேலும், தனக்கு அன்பளிப்பாகக் கிடைத்த பல்வேறு பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுப் பொருட்களை, ஏலத்தின் வாயிலாக விற்பனை செய்து அதன் மூலம் கிடைத்த வருவாயை, அவர் நன்கொடையாக அளித்தார். அந்த நிதி, இளம் பெண்களின் கல்விக்காக, முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டது. 140 கோடி (1.4

பெண்களுக்கான முன்னெடுப்பு... பெண் தொழில்முனைவோருக்கு, எளிதான சந்தை வாய்ப்புக்களை வழங்குதல்

- 'வுமேனியா' என்பது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை மையமாகக் கொண்ட பெண்களுக்கான முன்முயற்சியாகும். பெண்கள் தலைமையிலான குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், நிறுவனச் சரிபார்ப்பு மற்றும் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு டிஜிட்டல் நடைமுறையின் மூலம், இந்தத் தளத்தில் இணைத்துக் கொள்ளப்படுகின்றன.
- இது பெண் தொழில்முனைவோரும், சுயஉதவிக் குழுக்களும், தங்களது தயாரிப்புகளை, 'அரசு மின்னணுச் சந்தைக்கான இணையதளம் வாயிலாக, அரசு கொள்முதல் முகவர்களுக்கு, நேரடியாக விற்பனை செய்ய உதவுகிறது.
- கைவினைப்பொருட்கள், கைத்தறி ஆடைகள், சணல் பொருட்கள், தேங்காய் நார் பொருட்கள், வீடு மற்றும் அலுவலக அலங்காரப் பொருட்கள் போன்ற குறிப்பிட்ட வகைகளின் கீழ், பட்டியலிடப்பட்டுள்ள தயாரிப்புகள் அனைத்தும், இந்த இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்த முன்முயற்சி, பெண் தொழில்முனைவோருக்கு, சந்தையில் மேம்பட்ட அங்கீகாரத்தையும், வெளிப்படையான வர்த்தகத் தொடர்புகளையும் உறுதி செய்வதன் மூலம், இடைத்தரகர்களைச் சார்ந்திருக்கும் நிலையை வெகுவாகக் குறைக்கிறது.
- 2025–26 நிதியாண்டில், 2,10,000–க்கும் அதிகமான பெண் குறுந்தொழில்முனைவோர் 'அரசின் மின்னணு சந்தைக்கான' இணையதளத்தில் பதிவு செய்து, மொத்தம் 13.7 லட்சம் (1.37 மில்லியன்) கொள்முதல் ஆணைகளைப் பெற்றுள்ளனர்.



பில்லியன்) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவராக இருப்பதையும், சமூக வலைதளங்களில், கோடிக்கணக்கான நபர்கள் பின்தொடரும் ஆளுமை மிக்கத் தலைவராகத் திகழ்வதையும், பின்னர் அத்தகைய தனிப்பட்ட சமூக வலைதளக் கணக்குகளை, ஒரு நாள் முழுவதும், ஏழு பெண்களிடம் ஒப்படைப்பதையும், சற்று கற்பனை செய்து பாருங்கள். அது எத்தகையதொரு அனுபவமாக இருக்கும்? ஆம், 2019–ம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் வலைத்தளத்தின் கட்டுப்பாட்டை, ஏழு பெண்களிடம் ஒப்படைத்தார். 2025–ம் ஆண்டிலும், அவர் இதேபோன்ற சிறப்பான முன்னெடுப்பை மீண்டும் மேற்கொண்டார். இந்தச் சிறப்புமிக்க தினத்தில், தனது சமூக வலைதளப் பக்கங்களை மீண்டும் ஒருமுறை 'மகளிர் சக்தி'யின் உணர்வுகளுக்கு அர்ப்பணித்தார். சொல்லுக்கும், செயலுக்கும் இடையே நிலவும் இணக்கத்தை மிகச் சரியாக வெளிப்படுத்தும், இந்தச் சிறப்பான செயல்பாடுதான், அடிப்படையில் 'புதிய இந்தியா'வின் மையப்புள்ளியில், பெண்களுக்குச் சம உரிமைகளையும், வாய்ப்புகளையும் பெற்றுத் தந்துகொண்டிருக்கிறது.

சந்தேகத்திற்கு இடமின்றி, நாட்டில் உள்ள பெண்களின் முன்னேற்றத்திற்கு வலு சேர்ப்பதற்கான நடவடிக்கைகள், இன்றைய இந்தியாவின் உயர் முன்னுரிமையாகத் திகழ்கிறது. இதன் விளைவாக, இந்தியாவில் உள்ள பெண்களின் ஆற்றலும், திறமையும், தற்போது நாடு முழுவதும் உள்ள அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு போற்றப்படுகிறது. இந்தியாவின் விரிவடைந்து வரும் பொருளாதார வளர்ச்சியின் முதன்மைப் பயனாளிகளாகப் பெண்கள் திகழ்வது மட்டுமின்றி, பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகரிப்பதில், பெண்கள் மிக முக்கியப் பங்காற்றி, அளப்பரிய பங்களிப்புகளையும் வழங்கி வருகின்றனர். புத்தொழில் தொடங்குவது முதல், விண்வெளித் துறை வரை, மகள்கள் எங்கும் தங்களின் முத்திரையைப் பதித்து வருகின்றனர். பெண்கள் விளையாட்டுத் துறையில் ஆதிக்கம் செலுத்துவதுடன், முப்படைகளிலும், தங்களின் அபாரத் திறனை வெளிப்படுத்தி பிரகாசிக்கின்றனர். பெண்கள் தற்போது நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில், ஆண்களுக்கு இணையாகப் பெருமையுடன் பங்கேற்கின்றனர். 2047–க்குள் இந்தியா ஒரு வளர்ச்சியடைந்த நாடாக உருவாக அதிவேகமாக முன்னேறுவதும், மக்களின் முழுத்திறனும், தேசிய நலனுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்படுவதும் இன்றியமையாததாகும். இந்த இலக்கை எட்டுவதற்கு, நமது மகள்களைப் பெரிய அளவிலான கனவுகள் காண ஊக்குவிப்பது மட்டுமின்றி, அதனை நனவாக்கும் ஒவ்வொரு செயலிலும், அவர்களுக்கு உறுதுணையாக நின்று ஆதரவளிப்பதும் அவசியமாகும். அச்சமும், பாகுபாடும் அற்ற ஒரு சூழலில், பெண்கள் நாட்டைக் கட்டமைக்கும் பணியில், தங்கள் முழுமையான பங்களிப்பை வழங்க முடியும்.

'அமிர்த கால'த்தின் போது, மத்திய அரசு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முன்முயற்சியின் மூலம், தனது உறுதியான நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியுள்ளது. புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் மசோதாவையே 'மகளிர் சக்திக்கு' அர்ப்பணிக்கும் விதமாக அறிமுகம் செய்ததுடன், இந்தச் சட்ட நடவடிக்கையைச் செயல்வடிவம் பெறும் நிதர்சனமாக மாற்றவும் உறுதியளித்துள்ளது. இந்தியாவின் முதன்மை சேவகர், ஒரு உண்மையான கர்மயோகி மற்றும் அர்ப்பணிப்புமிக்க செயல்பாடு ஆகிய பண்புகளைக் கொண்ட நரேந்திர மோடி தலைமையின் கீழ், ஜனநாயகப் பயணத்தில், ஒரு புதிய அத்தியாயத்தை எழுத, நாடு உறுதியுடன் நிற்கிறது. ஏனெனில், இதுவே இந்தியாவின் சாத்திரங்கள் போதிக்கும் நெறியாகவும், இந்தியக்



பெண்களுக்கான இட ஒதுக்கீடு

உங்கள் அனைத்துக் கேள்விகளுக்குமான பதில்கள்

மத்திய அரசு மக்களவையில் 2026 ஏப்ரல் 16 அன்று எந்தெந்த மசோதாக்களை அறிமுகம் செய்தது?

மத்திய அரசு மக்களவையில், 2026 ஏப்ரல் 16 அன்று, மூன்று முக்கிய மசோதாக்களை அறிமுகம் செய்தது:

- அரசியல் சட்ட (131–வது திருத்த) மசோதா, 2026
- தொகுதி மறுவரையறை மசோதா, 2026
- யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா, 2026

கே இந்த மூன்று மசோதாக்களையும் மத்திய அரசு இந்தக் குறிப்பிட்ட தருணத்தில் அறிமுகம் செய்தது ஏன்?

ப 2026–க்குப் பின் நடைபெறும் மக்கள் தொகை கணக்கெடுப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும், தொகுதி மறுவரையறைப் பணிகளின் அடிப்படையில், பெண்களுக்கான இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட வேண்டும் என்று பெண்கள் இடஒதுக்கீட்டுச் சட்டம் வலியுறுத்துகிறது. மத்திய அரசு 2026–ம் ஆண்டில் நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட இருந்த தொகுதி மறுவரையறைப் பணிகளுக்காகவும் காத்திருந்திருந்தால், 2029–ம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், பெண்கள் 33 சதவீத இட ஒதுக்கீட்டுப் பலனைப் பெற்றிருக்க முடியாது. எனவே, நாட்டின் மக்கள் தொகையில் பாதியளவு உள்ள பெண்களுக்கு, இந்த உரிமைகளை முடிந்தவரை விரைவாக வழங்கும் வகையில், 2026–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட இருந்த தொகுதி மறுவரையறைப் பணியிலிருந்து, இந்தச் செயல்முறையைப் பிரித்தெடுத்து செயல்பட வேண்டியது அவசியமாகக் கருதப்பட்டது.

கே பெண்கள் இடஒதுக்கீட்டுச் சட்டத்துடன் இணைத்து, தொகுதி மறுவரையறை குறித்த மசோதாவையும் அறிமுகம் செய்தது ஏன்? தொகுதிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்படும் என்று மத்திய அரசு ஏன் முன்மொழிந்தது?

ப தொகுதி மறுவரையறை என்பது, ஒரு தொகுதியின் எல்லைகளை மாற்றியமைப்பதைக் குறிக்கிறது. பெண்கள் இடஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்கு, தொகுதி மறுவரையறை மிகவும் அவசியமாகும். 1976–ம் ஆண்டில், மக்களவையில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை 550–ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1971–ம் ஆண்டில், இந்தியாவின் மக்கள் தொகை, 54 கோடியாக இருந்தது. தற்போது, நாட்டின் மக்கள் தொகை 140 கோடியை எட்டியுள்ளது. எனவே, மக்களவையில் உள்ள இடங்களின் எண்ணிக்கையை 850–ஆக உயர்த்துவது, மிக முக்கியமானதாகும். இது நாடாளுமன்றத்தில், போதுமான பிரதிநிதித்துவம் இருப்பதை உறுதி செய்யும்.

கே இந்த மூன்று மசோதாக்களும், அவையில் நிறைவேற்றப்பட்டிருந்தால், நாடு எத்தகைய நன்மைகளைப் பெற்றிருக்கும்?

ப இந்த மூன்று மசோதாக்களும் மக்களவையில் நிறைவேற்றப்பட்டிருந்தால், குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பின், அவை சட்டங்களாகியிருக்கும். இதன் விளைவாக, நாட்டில் உள்ள பெண்கள் 33 சதவீத இடஒதுக்கீட்டுப் பலனை 2029–ம் ஆண்டில் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலிலேயே பெற்றிருக்க முடியும். இதன் மூலம், அவர்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த உரிமை நனவாகியிருக்கும்.

கே தொகுதி மறுவரையறை ஆணையச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், மத்திய அரசு அரசியல் ஆதாயம் தேட முயன்றதா? குறிப்பிட்ட சில மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், மத்திய அரசு இந்த மசோதாவை அறிமுகம் செய்தது ஏன்? தமிழ்நாடு அல்லது மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேர்தல்கள் மீது, ஏதேனும் தாக்கத்தை இது ஏற்படுத்துமா?

ப மத்திய அரசு தொகுதி மறுவரையறை ஆணையச் சட்டத்தில் எவ்விதத் திருத்தங்களையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டத்தை, அதன் அசல் வடிவத்திலேயே தக்க வைத்துக் கொண்டது. தொகுதி மறுவரையறை ஆணையத்தின் பரிந்துரைகள், நாடாளுமன்றத்தின் ஒப்புதலையும், குடியரசுத் தலைவரின் சம்மதத்தையும் பெற்ற பின்னரே, நடைமுறைக்கு வந்திருக்கும். 2029–ம் ஆண்டு வரையிலான அனைத்துத் தேர்தல்களும், தற்போது நடைமுறையில் உள்ள கட்டமைப்பு மற்றும் எல்லைகளின் அடிப்படையிலேயே நடத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளதால், தமிழ்நாடு அல்லது மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில், தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேர்தல்கள் மீது, இந்த நடைமுறை எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்காது.

கே மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை, 850-ஆக உயர்த்துவதற்கான முன்மொழிவின் பின்னணியில் இருந்த, முதன்மையான காரணங்களும், நியாயங்களும் என்னென்ன?

ப இந்த முன்மொழிவு, மக்கள் தொகை விகிதாச்சார முறையில், தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் கொள்கையின் அடிப்படையில் அமைந்திருந்தது. 50 சதவீத அளவில் சீரான அதிகரிப்பு, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம், தற்போதைய நிலையிலேயே தொடர்ந்து இருப்பதை உறுதி செய்திருக்கும். இந்தக் கொள்கையின் அடிப்படையில், மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை, தற்போதைய 543 என்ற எண்ணிக்கையிலிருந்து 815-ஆக உயர்ந்திருக்கும். இதன் விளைவாக, மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கைக்கு, நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்சவரம்பு 550-லிருந்து 850-ஆக உயர்த்தப்பட்டது.



கே புதிய தொகுதி மறுவரையறை முன்மொழிவு, மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு, ஏதேனும் பாதக விளைவுகளை ஏற்படுத்தியிருக்குமா?


ப இல்லை. புதிய தொகுதி மறுவரையறை முன்மொழிவு, மக்கள்தொகை வளர்ச்சியை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு, எவ்வித பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தியிருக்காது. அனைத்து மாநிலங்களுக்கும், தொகுதிகளின் எண்ணிக்கையில், விகிதாச்சார அடிப்படையில், அதிகரிப்பதற்கான (50%) ஏற்பாடு அதில் இருந்தது. இதன் காரணமாக, அவற்றின் பிரதிநிதித்துவ சதவீதத்தில், குறைவதற்கு மாறாக, ஒவ்வொரு மாநிலத்தின் பிரதிநிதித்துவத்தில் எவ்வித மாற்றமும் இல்லாது இருந்திருக்கும் அல்லது சற்று அதிகரித்திருக்கும்.


கே புதிய தொகுதி மறுவரையறை முன்மொழிவு, ஷெட்யூல்டு வகுப்பினர் (எஸ்சி) மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியின (எஸ்டி) வகுப்பினருக்கானப் பிரதிநிதித்துவம் மற்றும் உரிமைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருக்குமா?


ப இந்திய அரசியலமைப்புச் சட்டம், குறிப்பிட்ட கால இடைவெளிகளில், தொகுதி மறுவரையறை செய்வதற்கான வழிமுறையை, வழங்குகிறது. இந்த நடைமுறையின் மூலமாகவே, ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் உள்ளிட்ட சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கான தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டு அதிகரிக்கப்படுகின்றன. இந்த மூன்று மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டிருந்தால், 850 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவையில், ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 131-லிருந்து, 205-ஆக உயர்ந்திருக்கும். இது ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியின மக்களின் பிரதிநிதித்துவம் மற்றும் உரிமைகளில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாமல், மாறாக, அவற்றை அதிகரிக்கும் விளைவையே ஏற்படுத்தியிருக்கும்.

கே புதிய தொகுதி மறுவரையறை முன்மொழிவு, தென் இந்திய அல்லது சிறிய மாநிலங்களுக்குப் பாதகமாக அமைந்திருக்குமா?

ப இல்லை. அனைத்து மாநிலங்களுக்கும், தொகுதிகளின் எண்ணிக்கையில், சீரான 50 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருக்கும். தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தில், எவ்விதக் குறைவும் ஏற்பட்டிருக்காது. கீழே உள்ள அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளபடி, தென் மாநிலங்கள், தற்போது மக்களவையில் 23.76 சதவீத இடங்களைப் பெற்றுள்ளன. இந்த விகிதம் 23.87 சதவீதமாக அதிகரித்திருக்கும். உதாரணமாக, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கையும், இதே விகிதத்தில் அதிகரித்திருக்கும். இதன் மூலம், அம்மாநிலத்திற்கு, எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமல் இருப்பது, உறுதி செய்யப்பட்டிருக்கும்.









கே எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்தும், முஸ்லிம் பெண்களுக்கு தனி ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டப் பிரிவு, பெண்கள் இடஒதுக்கீட்டு மசோதாவில் ஏன் சேர்க்கப்படவில்லை?

ப இந்திய அரசியல் சட்டத்தில், மதத்தின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க வகைசெய்யப்படவில்லை. அரசியல் சட்டத்தில், இடஒதுக்கீட்டுக் கொள்கைகள், சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நிலையின் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டவை.

கே 2024 பொதுத் தேர்தலில், பெண்களுக்கான இடஒதுக்கீட்டை 2029 வரை ஒத்திவைப்பதற்குப் பதிலாக, மத்திய அரசு ஏன் உடனடியாக அமல்படுத்தவில்லை? மேலும், அது 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஏன் செயல்படுத்தப்படவில்லை?



ப இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு, எல்லை நிர்ணயம் ஒரு முன்நிபந்தனையாகும். எல்லை நிர்ணயம் என்பது, விரிவான ஆலோசனையை உள்ளடக்கிய, ஒரு விரிவான நடைமுறையாகும். எல்லை நிர்ணய செயல்பாடுகளை நிறைவு செய்வதற்குப் பொதுவாக இரண்டு ஆண்டுகள் தேவைப்படும். எனவே, பெண்கள் இடஒதுக்கீட்டுச் சட்டத்தை அமல்படுத்த வழி ஏற்படுத்தும் வகையில், எல்லை நிர்ணய மசோதாவுடன், இந்த மூன்று மசோதாக்களும் அறிமுகம் செய்யப்பட்டன.

கே 2024 பொதுத் தேர்தலில், பெண்கள் இடஒதுக்கீடு அமல்படுத்தப்படாது என்று இருக்கும் போது, 2023–ம் ஆண்டில், பெண்கள் இடஒதுக்கீட்டு மசோதா ஏன் அறிமுகம் செய்யப்பட்டது?

ப 2023–ல், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், மத்திய அரசு, பெண்கள் இடஒதுக்கீட்டு மசோதாவை அறிமுகம் செய்தது. இம்மசோதா புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாநிலங்களவையின் ஒப்புதலையும் பெற்றது. இம்மசோதா அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் ஆதரவைப் பெற்றது. இதன் மூலம், பெண்கள் இடஒதுக்கீட்டு மசோதா என்பது, நாடாளுமன்றச் சட்டமாக உருவெடுத்தது.

கே சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை ஒத்திவைக்கும் நோக்குடன் மட்டுமே, மத்திய அரசு இந்த அரசியல் சட்டத் திருத்த மசோதாவை அறிமுகம் செய்ததா?

ப சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கான காலவரையறைக்கு உட்பட்ட நடைமுறையை மத்திய அரசு, மூன்று மாதங்களுக்கு முன்பே தொடங்கி விட்டது. எனவே, அதனை ஒத்தி வைப்பது பற்றிய கேள்விக்கே இடமில்லை. தற்போதைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைமுறையின்படி, முதலில் வீடுகள் குறித்த விவரங்கள் கணக்கெடுக்கப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து, தனிநபர்கள் குறித்த விவரங்கள் கணக்கெடுக்கப்படும் போது, சாதி தொடர்பான தகவல்களும் விரிவாகப் பதிவு செய்யப்படும்.

கே ஜம்மு–காஷ்மீர், தில்லி, புதுச்சேரி போன்ற யூனியன் பிரதேசங்களுக்கும், மகளிர் இடஒதுக்கீட்டை விரிவுபடுத்தும் வகையில் தனியாக ஒரு யூனியன் பிரதேசங்கள் மசோதா' அறிமுகம் செய்யப்பட்டது ஏன்?

ப ஜம்மு–காஷ்மீர், தில்லி, புதுச்சேரி ஆகிய யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றங்கள், தனித்துவமான யூனியன் பிரதேச சட்டங்களின்' கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. இந்தச் சட்டமன்ற அமைப்புகளுக்குள், முறையே 38, 23 மற்றும் 10 தொகுதிகளை மகளிருக்காக ஒதுக்கீடு செய்வதற்கு, இந்தத் தொழில்நுட்ப ரீதியான சட்டத் திருத்தம் அவசியமானதாகக் கருதப்புட்டது. இம்முயற்சிக்காகவே, தனியாக ஒரு யூனியன் பிரதேசங்கள் மசோதா அறிமுகம் செய்யப்பட்டது.



பிரதமர் நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை

"நாட்டின் ஒவ்வொரு பெண்ணுக்கும் நான் உறுதியளிக்கிறேன்

பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதில் உள்ள ஒவ்வொரு தடையையும் நாங்கள் அகற்றுவோம்."

'பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும்' சட்டத்திருத்தம் என்பது, யாரிடமிருந்தும், எதையும் பறித்துக் கொள்வதற்கானது அல்ல. மாறாக, நாட்டில் உள்ள பெண்களுக்குச் சேரவேண்டிய நியாயமான உரிமையை, அவர்களுக்கு வழங்குவதற்கான ஒரு மகத்தான முயற்சியாகும். இது காலத்தின் கட்டாயம் மட்டுமின்றி, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்தில், நாட்டைப் புதிய உச்சத்திற்குக் கொண்டு செல்லும், பெண் தலைமைத்துவத்திற்கு அமைக்கப்பட்ட, ஒரு வலுவான அடித்தளம் ஆகும். இது ஒரு அரசியல் சார்ந்த நடைமுறை அல்ல. மாறாக, தேசிய நலன் கருதி எடுக்கப்பட்ட முடிவாகும். ஆனால், மக்களவையில், போதிய பெரும்பான்மை இல்லாத காரணத்தால், இந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது. தேசியக் கொள்கைகளை, அரசியல் காழ்ப்புணர்ச்சி மறைத்துவிட்டதைக் கண்டு மனம் வருந்திய பிரதமர் நரேந்திர மோடி, 2026 ஏப்ரல் 18 அன்று, நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அப்போது, நாடு மற்றும் நாட்டில் உள்ள பெண்கள் முன்னிலையில், தமது ஆழ்ந்த வேதனையை அவர் வெளிப்படுத்தினார். பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதில் உள்ள ஒவ்வொரு தடையையும் அகற்றுவோம் என்றும் அவர் உறுதியளித்தார். நாட்டு மக்களிடம் அவர் ஆற்றிய உரையின் முக்கியப் பகுதிகளை, இங்கே படியுங்கள்.

கட்சிகளின் நலனைவிட, தேச நலனே மேலானது:

எங்களைப் பொறுத்தவரை, தேச நலனே முதன்மையானது. ஆனால், சிலருக்குக் கட்சியின் நலனே முக்கியமானதாக இருக்கும் போது, கட்சியின் நலன் தேச நலனைவிடப் பெரிதாகிவிடும் போது, அதன் விளைவுகளை மகளிர் சக்தியும், தேசிய நலனும் தாங்கிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த முறையும், அதுதான் நிகழ்ந்திருக்கிறது. காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி போன்ற கட்சிகளின் சுயநல அரசியல், நாட்டின் மகளிர் சக்திக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அவமதிப்பைப் பெண்கள் ஒருபோதும் மறப்பதில்லை:

பெண்களின் நலனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த முன்மொழிவு அவையில் தோற்கடிக்கப்பட்ட போது, காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி போன்ற வாரிசு அரசியல் கட்சிகள் மேசைகளைத் தட்டி ஆரவாரம் செய்தன. அவர்கள் செய்தது, வெறும் ஆரவாரம் அல்ல, பெண்களின் சுயமரியாதைக்கும், கண்ணியத்திற்கும் தரப்பட்ட பலத்த அடியாகும். பெண்கள் மற்ற எதையும் மறந்துவிடுவார்கள். ஆனால், தங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பை, அவர்கள் ஒருபோதும் மறப்பதில்லை. எனவே, நாடாளுமன்றத்தில் காங்கிரஸும், அதன் கூட்டணிக் கட்சிகளும் வெளிப்படுத்திய இத்தகைய செயல்களால் ஏற்பட்ட வடு, நாட்டின் ஒவ்வொரு பெண்ணின் இதயத்திலும், என்றென்றும் நீடித்திருக்கும்.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களை எதிர்க்கட்சிகள் அவமதித்துவிட்டன:

நாடாளுமன்றத்தில் 'பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் சட்டத் திருத்தத்தை எதிர்த்த அந்தக் கட்சிகளிடம், நான் ஒன்றை மிகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். இவர்கள் மகளிர் சக்தியை மிகச் சாதாரணமாகவும், அலட்சியமாகவும் கருதுகிறார்கள். 21–ம் நூற்றாண்டின் பெண்கள், நாட்டின் ஒவ்வொரு நிகழ்வையும் கூர்ந்து கவனித்து வருகிறார்கள் என்பதையும், எதிர்த்தரப்பினரின் உள்நோக்கங்களை உணர்ந்துள்ளார்கள் என்பதையும், உண்மையை முழுமையாகப் புரிந்துகொண்டுள்ளார்கள் என்பதையும் அவர்கள் மறந்துவிடுகிறார்கள். எனவே, பெண்களுக்கான இடஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்ததன் மூலம், எதிர்க்கட்சிகள் இழைத்த பாவம், நிச்சயமாக அவர்களுக்குத் தண்டனையைப் பெற்றுத்தரும். இக்கட்சிகள் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் உணர்வுகளையும் அவமதித்துள்ளன. எனவே, மக்களின் தண்டனையிலிருந்தும், இவர்களால் தப்பிவிட முடியாது.

பெற்றுக்கொள்வதற்காக இல்லாமல், வழங்குவதற்கான ஒரு மசோதா:

பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதா என்பது, யாரிடமிருந்தும் எதையும் பறித்துக் கொள்வதற்கானது அல்ல. மாறாக, அது அனைவருக்கும், ஏதோ ஒன்றை வழங்குவதற்கானது. அதனை வழங்குவதற்காகவே கொண்டு வரப்பட்ட, ஒரு சட்டத் திருத்தமாகும். கடந்த 40 ஆண்டுகளாக, நிலுவையில் இருந்து வந்த உரிமையை, 2029–ம் ஆண்டு மக்களவைத் தேர்தல் முதல், பெண்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும். பெண்கள் இடஒதுக்கீட்டுச் சட்டத் திருத்த மசோதா என்பது, ஒரு பிரம்மாண்டமான முயற்சியாகும். 21–ம்



நூற்றாண்டு, இந்தியப் பெண்களுக்குப் புதிய வாய்ப்புகளை வழங்குவதற்கும், அவர்கள் புதிய உச்சங்களை எட்டி சாதனை படைப்பதற்கும், அவர்களின் பாதையில் குறுக்கிடும் தடைகளை அகற்றுவதற்கும், அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மகாயாகம் (பெரும் வேள்வி) ஆகும்.

பெண்கள் இடஒதுக்கீட்டுச் சட்டத் திருத்த மசோதா, காலத்தின் கட்டாயமாகும்:

பெண்கள் இடஒதுக்கீட்டுச் சட்டத் திருத்த மசோதா என்பது, வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என, நாட்டின் ஒவ்வொரு மாநிலத்தின் வலிமையையும், சமஅளவில் அதிகரிப்பதற்கான ஒரு முயற்சியாகும். நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு மாநிலத்தின் குரலுக்கும், கூடுதல் வலு சேர்ப்பதற்கான ஒரு முயற்சியாகவும் இது அமைந்துள்ளது. மாநிலம் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ, மக்கள்தொகை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்த போதிலும், அனைவரின் வலிமையையும், சம விகிதத்தில் அதிகரிப்பதே இதன் முயற்சியாக இருந்தது. ஆனால், இத்தகைய நேர்மையான முயற்சி, நாடாளுமன்றத்தில், காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளால் கருச்சிதைவு செய்யப்பட்டுள்ளது. காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, திமுக ஆகிய கட்சிகள் இந்த குற்றத்தைச் செய்த குற்றவாளிகள். இவர்கள் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான குற்றவாளிகள். நாட்டின் பெண் சக்திக்கு எதிரான குற்றவாளிகள் ஆவர்.

இழந்த ஓர் அரிய வாய்ப்பு:

பெண்களுக்கு உறுதுணையாக நிற்கத் தவறுதல்: தனிப்பட்ட முறையில், பல தசாப்தங்களாக செய்து வரும் தவறுகளை, காங்கிரஸ் கட்சி திருத்திக்கொள்ளும் என்று நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். காங்கிரஸ், தனது தவறுகளுக்காக வருந்தும் என்றும்

எதிர்பார்த்திருந்தேன். ஆனால், வரலாற்றைப் படைப்பதற்கும், பெண்களுக்கு ஆதரவாக நிற்பதற்கும், கிடைத்த ஓர் அரிய வாய்ப்பை, காங்கிரஸ் இழந்து விட்டது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில், காங்கிரஸ் ஏற்கனவே தனது செல்வாக்கை இழந்துவிட்டது. பிராந்தியக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, ஒரு ஒட்டுண்ணியைப் போல, அக்கட்சி தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், பிராந்தியக் கட்சிகள் வலுவடைவதைக்கூட, காங்கிரஸ் விரும்புவதில்லை. எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்க்கச் செய்வதன் மூலம், பல பிராந்தியக் கட்சிகளின் எதிர்காலத்தை இருளில் தள்ளுவதற்கு, காங்கிரஸ் அரசியல் ரீதியாகச் சதி செய்துள்ளது.

குடும்ப ஆதிக்கக் கட்சிகளிடையேயான அச்சம்:

பெண்கள் இடஒதுக்கீடு சட்டத்தை எதிர்ப்பதற்கு, இந்தக் குடும்ப ஆதிக்கக் கட்சிகளிடையே உள்ள அச்சமே முக்கிய காரணமாகும். பெண்களுக்கு அதிகாரம் அளித்தால், இந்தக் குடும்ப ஆதிக்கக் கட்சிகளின் தலைமைப் பொறுப்புக்கு ஆபத்து ஏற்படும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். தங்கள் குடும்பத்திற்கு வெளியே உள்ள பெண்கள் முன்னேறுவதை, அவர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். இந்தக் குடும்ப ஆதிக்கக் கட்சிகள், ஒருவித பாதுகாப்பற்ற உணர்வைக் கொண்டுள்ளன. தொகுதி மறுவரையறைக்குப் பின், பெண்களுக்குக் கூடுதல் இடங்கள் கிடைக்கும் என்பதாலும், பெண்களின் அந்தஸ்து உயரும் என்பதாலும், இவர்கள் பெண்கள் இடஒதுக்கீடு சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்தத் தவறுக்காக நாட்டின் பெண் சக்தி, காங்கிரஸையும், அதன் கூட்டணிக் கட்சிகளையும் ஒருபோதும் மன்னிக்காது.

தொகுதி மறுவரையறை குறித்துப் பரப்பப்படும் தவறான தகவல்கள்:

தொகுதி மறுவரையறை குறித்து, காங்கிரஸும், அதன் கூட்டணிக் கட்சிகளும் தொடர்ந்து, இடைவிடாமல் தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றன. இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பிளவை ஏற்படுத்துவதற்கு அவர்கள் விரும்புகின்றனர். ஏனெனில், "பிரித்தாளும் சூழ்ச்சி" எனும் அரசியல் தந்திரத்தை, ஆங்கிலேயர்களிடமிருந்து காங்கிரஸ் மரபுவழியாகப் பெற்றுள்ளது. இன்றும் அதே பாதையில் தான் காங்கிரஸ் பயணித்துக் கொண்டிருக்கிறது. நாட்டில் பிளவுகளை உருவாக்கும் உணர்வுகளுக்கு, காங்கிரஸ் எப்போதும் ஆதரவு அளித்து வருகிறது. அதனால்தான், தொகுதி மறுவரையறை, சில மாநிலங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற உண்மைக்குப் புறம்பானத் தகவல்கள் பரப்பப்பட்டது! ஆனால், எந்தவொரு மாநிலத்தின் பங்கேற்பு விகிதமும் மாறாது என்றும், எவருடைய பிரதிநிதித்துவமும் குறைக்கப்படாது என்றும், மத்திய அரசு முதல் நாளிலிருந்தே தெளிவாக அறிவித்துள்ளது. அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கப்படும் தொகுதிகளின் எண்ணிக்கை சம விகிதத்தில் அதிகரிக்கும் என்பதே உண்மையாகும்.

எதிர்மறை அரசியல்: பெண்கள் இடஒதுக்கீட்டை எதிர்ப்பதன் மூலம், காங்கிரஸ் மீண்டும் ஒரு விஷயத்தை நிரூபித்துள்ளது. காங்கிரஸ் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கட்சியாகும். 21–ம் நூற்றாண்டில், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கத் தேவையான முடிவுகள் அல்லது சீர்திருத்தங்கள் என ஏதுவாக இருந்தபோதும், நாடு எத்தகைய முடிவுகளை எடுத்தாலும், காங்கிரஸ் அவை அனைத்தையும் எதிர்க்கிறது, நிராகரிக்கிறது அல்லது முட்டுக்கட்டை போடுகிறது. இதுவே காங்கிரஸ் கட்சியின் வரலாறு மற்றும் அக்கட்சியின் எதிர்மறை அரசியலாகும்.

அனைத்து சீர்திருத்த நடவடிக்கைகளையும் எதிர்ப்பதே, எதிர்க்கட்சிகளின் ஒரே கொள்கையாகும்:

ஜன்தன்–ஆதார்–மொபைல் ஆகிய மூன்றையும் இணைக்கும் திட்டத்தை எதிர்த்த அதே காங்கிரஸ் கட்சிதான், டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளை, ஜிஎஸ்டி போன்றவற்றையும் எதிர்த்தது. பொதுப் பிரிவில் உள்ள ஏழை மக்களுக்கு இடஒதுக்கீடு அளிப்பது, முத்தலாக் முறைக்கு எதிரான சட்டம், அரசியல் சட்டப்பிரிவு 370 நீக்கம் போன்ற சீர்திருத்த நடவடிக்கைகளையும், காங்கிரஸ் எதிர்த்தது. பொது சிவில் சட்டம் அவசியம் என்று நமது அரசியலமைப்பும், நீதிமன்றங்களும் கூறியுள்ளன. ஆனால், அதற்கும் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு தெரிவிக்கிறது.

சீர்திருத்தம் என்ற பேச்சு எழுந்தவுடன், காங்கிரஸ் எதிர்ப்புப் பதாகைகளை ஏந்தியவாறு வருகிறது. நாட்டை வலுப்படுத்தும் எந்தவொரு பணியாக இருந்தாலும், அதற்குத் தடைகளை ஏற்படுத்துவதிலேயே, காங்கிரஸ் தனது முழு வலிமையையும் செலவிடுகிறது. ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்திற்கு காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவிக்கிறது. நாட்டிற்குள் ஊடுருவியவர்களை வெளியேற்றுவதற்கும், வாக்காளர் பட்டியலைச் சீர்செய்யும் பணி, வக்ஃப் வாரியத்தில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள், அகதிகளுக்குப் பாதுகாப்பளிக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் போன்ற சீர்திருத்த நடவடிக்கைகளையும் காங்கிரஸ் எதிர்க்கிறது. உண்மைக்குப் புறம்பான தகவல்களும், வதந்திகளைப் பரப்புவதும், நாட்டில் பெரும் பரபரப்பை உருவாக்குகிறது. மாவோயிசம், நக்சலைட் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர, அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, காங்கிரஸ் முட்டுக்கட்டை போடுகிறது. காங்கிரஸ் ஒரே ஒரு பாணியையே தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது: எப்போதெல்லாம் சீர்திருத்தம் கொண்டு வரப்படுகிறதோ, அப்போதெல்லாம், உண்மைக்குப் புறம்பானத் தகவல்களைத் தெரிவித்து, குழப்பத்தை ஏற்படுத்துவதையே, அதன் வழக்கமாக கொண்டுள்ளது. வரலாறே இதற்குச் சாட்சியாக உள்ளது. காங்கிரஸ் எப்போதும் இத்தகைய எதிர்மறையான பாதையையே தேர்ந்தெடுத்து வந்துள்ளது.

'காலதாமதம், திசைதிருப்புதல், முடக்குதல்' என்பதே அவர்களின் மனநிலையாக இருக்கிறது:

நாட்டிற்குத் தேவையான எந்தவொரு முடிவாக இருந்தாலும், அதைக் காங்கிரஸ் இருட்டடிப்பு செய்கிறது. காங்கிரசின் இந்த மனப்பான்மை காரணமாகவே, இந்தியா தனக்கு உரித்தான வளர்ச்சியின் உச்சத்தை எட்ட முடியாமல் போனது. நாடு சுதந்திரம் பெற்ற காலகட்டத்தில், நம்முடன் சேர்த்து வேறு பல நாடுகளும் சுதந்திரம் பெற்றன. அந்த நாடுகளில், பெரும்பாலானவை நம்மை விட வெகு தொலைவு முன்னேறிச் சென்றுவிட்டன. அதற்குக் காரணம், காங்கிரஸ் ஒவ்வொரு சீர்திருத்த நடவடிக்கைகளுக்கும் தொடர்ந்து தடை ஏற்படுத்திக்கொண்டே இருந்ததுதான். காலம் தாழ்த்துவது, திசை திருப்புவது, முட்டுக்கட்டை போடுவது போன்றவையே காங்கிரசின் கொள்கையாக இருந்துள்ளது. இதுவே காங்கிரசின் பணியாகவும், கலாச்சாரமாகவும் விளங்கியது. அண்டை நாடுகளுடனான எல்லைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதையும், பாகிஸ்தான் நாட்டுடனான நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதையும், காங்கிரஸ் காலம் தாழ்த்தியது. ஓபிசி இடஒதுக்கீடு குறித்து முடிவெடுப்பதையும், ராணுவ வீரர்களுக்கான ஒரு பதவி ஒரே ஓய்வூதியம் திட்டத்தை அமல்படுத்துவதையும், காங்கிரஸ் கட்சி 40 ஆண்டுகளாகத் தாமதப்படுத்தியது.

பெண்களுக்கான இடஒதுக்கீடு குறித்த உறுதிமொழியை நாங்கள் நிறைவேற்றுவோம்:

பெண்களுக்கான இடஒதுக்கீட்டை எதிர்த்து வரும் கட்சிகளால், நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும், பெண்களின் பங்கேற்பு அதிகரிப்பதை ஒருபோதும் தடுத்து நிறுத்த முடியாது. இது காலத்தின் கேள்வியாக மட்டுமே உள்ளது. பெண்களுக்கு வலு சேர்ப்பதற்கான எங்களின் நிலைப்பாடு சற்றும் குறையாமல் உறுதியுடன் உள்ளது. அவையில் நேற்று எங்களிடம் போதிய எண்ணிக்கை இல்லை. ஆனால், அதற்காக நாங்கள் தோல்வியடைந்துவிட்டோம் என்று அர்த்தமல்ல. எங்களின் அகவலிமை வெல்ல முடியாதது. எங்களின் முயற்சி இத்துடன் நிற்காது. எங்களின் முயற்சி ஒருபோதும் இடைநிற்காது. இனிவரும் காலங்களில், எங்களுக்கு இன்னமும் பல வாய்ப்புகள் காத்திருக்கின்றன. மக்கள்தொகையில் சரிபாதி இருக்கும் பெண்களின் கனவுகளுக்காகவும், நாட்டின் எதிர்காலத்திற்காகவும், இந்த உறுதியை நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவோம்.



100 சதவீத 'பெண் சக்தி'யின் ஆசி

இன்று, மசோதாவை நிறைவேற்றுவதற்குத் தேவையான 66 சதவீத வாக்குகளை நாம் பெறவில்லை என்றாலும், நாட்டின் 100 சதவீத பெண் சக்தியின் ஆசி, நமக்குக் கிடைத்துள்ளது என்பதை நான் அறிவேன். பெண்களுக்கான இடஒதுக்கீடு வழங்குவதில் உள்ள ஒவ்வொரு தடையையும் நாம் அகற்றுவோம் என்பதே, நாட்டில் உள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும், நான் அளிக்கும் உறுதிமொழியாகும். நமது துணிச்சல் உயர்வானது, நமது குறிக்கோள் வலிமையானது, நமது தீர்மானம் உறுதியானது.

பிரதமரின் முழு உரையையும் காண இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.

2026 கரீஃப் பருவத்திற்கான உர மானியம்

ஜெய்ப்பூர் மெட்ரோ ரயில் சேவை விரிவாக்கப் பணிகளுக்கு ஒப்புதல்

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 2026 கரீஃப் பருவ பயிர் சாகுபடிக்குத் தேவையான பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கான 'ஊட்டச்சத்து சார்ந்த மானிய' விகிதங்கள் குறித்த முன்மொழிவுக்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. விவசாயிகளுக்கு உரங்கள் மலிவு விலையில் கிடைப்பதற்கும், வேளாண் துறைக்கு வலு சேர்க்கும் வகையிலும், இந்த முடிவு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக அமைகிறது. மேலும், ஜெய்ப்பூர் மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கும், ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது அந்நகரின், போக்குவரத்து மேலாண்மை மற்றும் சுற்றுலாத் துறைக்கு, புதிய உத்வேகத்தை அளிப்பதுடன், வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தக வாய்ப்புகளையும் அதிகரிக்கிறது. அதுமட்டுமின்றி, 'பிரதமரின் கிராம சாலைத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை மார்ச் 2028 வரை நீட்டிப்பது உள்ளிட்ட, பல்வேறு முக்கிய முன்மொழிவுகளுக்கும், ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.



> "உலக அளவில் நிலவி வரும் சவால்களுக்கு இடையே, நமது விவசாய சகோதர, சகோதரிகளின் நலனுக்கு எப்போதும், மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. அந்த வகையில், 2026 கரீஃப் பருவத்திற்கான, ஊட்டச்சத்து சார்ந்த மானியங்களை அதிகரிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, முந்தைய ஆண்டுகளைப் போலவே தொடர்ந்து, மலிவு விலையில் உரங்கள் கிடைப்பது உறுதி செய்யப்படும்."
> – நரேந்திர மோடி, பிரதமர்

முடிவு: 2026–ம் ஆண்டு கரீஃப் பருவத்திற்கான பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கான ஊட்டச்சத்து சார்ந்த மானிய விகிதங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

தாக்கம்: விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய, மலிவான மற்றும் நியாயமான விலையில், உரங்கள் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

- டிஏபி மற்றும் என்பிகேஎஸ் தர வகைகளை உள்ளடக்கிய பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்கள், விவசாயிகளுக்குத் தொடர்ந்து நியாயமான விலையில் கிடைக்கும்.
- 2026–ம் ஆண்டு கரீஃப் பருவத்திற்கான உத்தேச பட்ஜெட் தேவை ரூ. 41,533.81 கோடியாக இருக்கும். இது 2025–ம் ஆண்டு கரீஃப் பருவத்திற்கான பட்ஜெட் தேவையை விட ரூ 4,317 கோடி அதிகமாகும்.

முடிவு: ஜெய்ப்பூர் மெட்ரோ ரயில் சேவையின் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம், மொத்தம் ரூ. 13,037.66 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம், ஜெய்ப்பூர் நகரை மாற்றியமைக்கும் வகையில், 41 கிமீ நீளமுள்ள வடக்கு–தெற்கு பகுதிக்கான வழித்தடமாகும்.

தாக்கம்: இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டிற்கு வருவதன் மூலம், மெட்ரோ ரயில் சேவையைப் பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, ஜெய்ப்பூரில், பொதுப் போக்குவரத்தின் பங்களிப்பை கணிசமான அளவு உயர்த்துவதுடன், தனியார் வாகனங்களைச் சார்ந்திருக்கும் நிலையையும் குறைக்கும்.

- இத்திட்டம் போக்குவரத்து நெரிசல், வாகனப் புகையால் ஏற்படும் மாசு ஆகியவற்றைக் குறைக்க உதவுவதுடன், அப்பகுதியில் வசிக்கும் மக்கள், பணிபுரிவோர், சுற்றுலாப் பயணிகள் ஆகியோரின் பயணத்தை எளிதாக்கும். மேலும், ஒரு நவீன, எதிர்காலத்திற்குத் தயாராக உள்ள நகரமாக ஜெய்ப்பூரின் நிலையையும், இத்திட்டம் வலுப்படுத்தும், வளர்ச்சியடைந்த இந்தியா, வளர்ச்சியடைந்த ராஜஸ்தான் ஆகிய தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் வகையில், மேற்கொள்ளப்படும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும்.

- பிரஹலாத் புரா முதல் தோடி மோட் வரை நீண்டுள்ள இந்த வழித்தடத்தில், மொத்தம் 36 ரயில் நிலையங்கள் அமையவுள்ளன.
- தற்போது, ஜெய்ப்பூர் முதல் கட்ட மெட்ரோ ரயில் சேவை, நாளொன்றுக்குச் சராசரியாக, 60,000 பயணிகளைக் கையாள்கிறது.

முடிவு: எச்பிசில் ராஜஸ்தான் சுத்திகரிப்பு நிறுவனத்தின் திட்டச் செலவை ரூ. 43,129 கோடியிலிருந்து ரூ. 79,459 கோடியாகத் திருத்தியமைப்பதற்கும், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (எச்பிசிஎல்) நிறுவனத்தின் மூலம் கூடுதலாக, ரூ. 8,962 கோடி பங்கு முதலீடு செய்வதற்கும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தாக்கம்: நாட்டின் அதிகரித்து வரும் எரிசக்தித் தேவைகள், பெட்ரோ ரசாயனப் பொருட்களுக்கானத் தேவைகள் மற்றும் சிறப்புப் பொருட்கள் உற்பத்தியைக் கருத்தில் கொண்டால், எச்பிசிஎல் ராஜஸ்தான் சுத்திகரிப்பு நிறுவனத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். இதன் மூலம், நாட்டின் இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நிலை குறைவதுடன், அந்நியச் செலாவணியைச் சேமிக்க வழிவகுக்கும். மேலும், இத்திட்டம் பின்தங்கிய பகுதியில் தொழில்மயமாக்கல் நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பதுடன், உள்ளூரிலேயே கிடைக்கும் மங்களா கச்சா எண்ணெயைப் பயன்படுத்தவும், எண்ணெய் சுத்திகரிப்பு மையமாக, இந்தியாவை முன்னிலுத்தவும் உதவிடும்.

- இத்திட்டத்தைச் செயல்படுத்தும் காலகட்டத்தில், சுத்திகரிப்பு நிலைய அலகுகளின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த பல்வேறு தரப்பினரால் பணியமர்த்தப்பட்ட, 25,000 தொழிலாளர்களுக்கு, எச்பிசிஎல் ராஜஸ்தான் சுத்திகரிப்பு நிலைய நிறுவனம் வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.



முடிவு: அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் காம்லே, கிரா தாடி, குருங் குமே ஆகிய மாவட்டங்களில் கமலா நீர்மின் திட்டத்தை அமைப்பதற்காக ரூ. 26,069.50 கோடி முதலீடு செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

தாக்கம்: நிறுவப்பட்ட 1,720 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுடன், இத்திட்டம் 6,870 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், அருணாச்சலப் பிரதேசத்தின் மின் விநியோக நிலையை வலுப்படுத்துவதுடன், அதிகபட்ச மின் தேவை மேலாண்மைக்குத் துணை நிற்கும். தேசிய மின் தொகுப்பைச் சமநிலைப்படுத்துவதற்குப் பங்களிப்பதுடன், பிரம்மபுத்திரா பள்ளத்தாக்குப் பகுதியில், வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் உதவிகரமாக இருக்கும். இத்திட்டத்தை நிறைவு செய்வதற்கான உத்தேச கால அளவு 96 மாதங்களாகும்.

- இத்திட்டம் அருணாச்சலப் பிரதேசத்தின் காம்லே, கிரா தாடி, குருங் குமே ஆகிய மாவட்டங்களில், உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்க உதவிடும். இதில், 196 கிலோமீட்டர் நீளத்திற்கான சாலைகள் மற்றும் பாலங்களை அமைக்கும் பணிகளும் அடங்கும்.
- மருத்துவமனைகள், பள்ளிகள், சந்தைகள் போன்ற அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படுவதன் மூலம், இம்மாவட்டங்கள் பயனடையும்.
- இழப்பீடு, வேலைவாய்ப்புகள், சமூகப் பொறுப்புணர்வுச் செயல்பாடுகள் ஆகியவற்றின் வாயிலாக, உள்ளூர் மக்களும் பெரிதும் பயனடைவார்கள்.

முடிவு: அருணாச்சலப் பிரதேசத்தின் அஞ்சாவ் மாவட்டத்தில், 1,200 மெகாவாட் திறன் கொண்ட கலை–II நீர்மின் திட்டத்தை அமைப்பது தொடர்பான முதலீட்டு முன்மொழிவுக்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல்.

தாக்கம்: இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் 4,852.95 மில்லியன் அலகுகள், மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. லோஹித் ஆற்றுப் படுகையில் அமையும் முதலாவது நீர்மின் திட்டமான இது, மாநிலத்தில் மின் விநியோகத்தை வலுப்படுத்துவதுடன், அதிகபட்ச மின்சாரம் தேவைப்படும் தருணங்களைச் சமாளிப்பதற்கும், தேசிய மின் தொகுப்பைச் சமநிலைப்படுத்துவதற்கும், பெரிதும் உதவும்.

- இத்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை ரூ. 14,105.83 கோடியாகும். இத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக மதிப்பிடப்பட்ட காலஅவகாசம் 78 மாதங்களாகும்.
- இம்மாநிலத்தின் நாம்சாய் மற்றும் அஞ்சாவ் மாவட்டங்களில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள், கணிசமான அளவில் மேம்படும். இத்திட்டத்தின் கீழ், 29 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலைகளும், பாலங்களும் அமைக்கப்படவுள்ளன.
- உள்ளூர் மக்களும் பல்வேறு வகையான இழப்பீடுகள், வேலைவாய்ப்புகள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு சார்ந்த செயல்பாடுகள் மூலம் பயனடைவர்.

அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.

முடிவு: மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப் படியையும் ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலை நிவாரணத்தையும் உயர்த்த ஒப்புதல்.

தாக்கம்: இது 2026 ஜனவரி 1 முதல் அமல்படுத்தப்படுகிறது. இதில் தற்போதுள்ள அடிப்படை ஊதியம் / ஓய்வூதியத்தின் 58 சதவீத விகிதத்தில் இருந்து இரண்டு சதவீதம் உயர்த்தப்படும். அகவிலைப்படி, அகவிலை நிவாரணம் ஆகிய இரண்டிலும் ஏற்படும் உயர்வால், அரசுக்கு ஆண்டுக்கு, மொத்த நிதிச் சுமை 6,791.24 கோடி ரூபாயாக இருக்கும். இதனால் சுமார் 50.46 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும், 68.27 லட்சம் ஓய்வூதியதாரர்களும் பயனடைவார்கள்.

முடிவு: பாரத் கடல்சார் காப்பீட்டுத் தொகுப்பு அமைப்பதற்கான முன்மொழிவுக்கு ஒப்புதல்.

தாக்கம்: 12,980 கோடி ரூபாய் மதிப்பில் தொடர்ச்சியான முறையில் கடல்சார் காப்பீட்டுப் பாதுகாப்பை எளிதாக்குவதற்காக இந்த உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உள்நாட்டுக் காப்பீட்டுத் தொகுப்பு, உலகளாவிய சிக்கல்கள், புவிசார் அரசியல் நிலைத்தன்மையின்மை ஆகியவற்றால் எழும் பிரச்சனைகளின்போது பயன்படும். இந்தியக் கப்பல்கள் வெளிநாட்டுக் காப்பீட்டு நிறுவனங்களைச் சார்ந்திருக்கும் நிலையை இது குறைக்கிறது. இந்தத் தொகுப்பு, கப்பலின் வெளிப்புற கட்டுமானம், அதன் எந்திரங்கள், சரக்குகள், ஆகியவற்றுக்குப் பாதுகாப்பையும் இழப்பீட்டையும் வழங்கும். போர் அபாயங்கள் உள்ளிட்ட அனைத்துக் கடல்சார் அபாயங்களையும் இது உள்ளடக்கியது. மேலும், நிலையற்ற தன்மை கொண்ட கடல்சார் வழித்தடங்களில் சென்றாலும் கூட, எந்தவொரு சர்வதேச எல்லையிலிருந்தும் இந்தியத் துறைமுகங்களுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் அல்லது இந்தியத் துறைமுகங்களில் இருந்து சரக்குகளைக் கொண்டுசெல்லும் கப்பல்களுக்கு இது பாதுகாப்பை விரிவுபடுத்துகிறது.

முடிவு: உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள 15 மாவட்டங்களை உள்ளடக்கிய இரண்டு பல்நோக்கு ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தாக்கம்: இதன் விளைவாக இந்திய ரயில்வேயின் தற்போதைய கட்டமைப்பு உத்தேசமாக 601 கிலோமீட்டர் அதிகரிக்கும். இந்தத் திட்டங்களுக்கு மதிப்பிடப்பட்ட செலவு 24,815 கோடி ரூபாய் ஆகும். இவற்றை 2030–31–ம் ஆண்டுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது இந்திய ரயில்வேயின் செயல்பாட்டுத் திறனையும் சேவையில் நம்பகத்தன்மையையும் மேம்படுத்தும். விரிவான பிராந்திய மேம்பாட்டின் மூலம் அப்பகுதி மக்களிடையே தன்னம்பிக்கையை வளர்ப்பதும், அதன் மூலம் அவர்களுக்கான வேலைவாய்ப்பு, சுயதொழில் வாய்ப்பு ஆகியவற்றை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும். இந்தத் திட்டங்கள் மக்கள், பொருட்கள், சேவைகள் ஆகியவற்றுக்கான தடையற்ற போக்குவரத்தை உறுதி செய்யும்.





முடிவு: பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை, 2025 மார்ச் மாதத்தைத் தாண்டி, 2028 மார்ச் வரை நீட்டிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தாக்கம்: பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் மூன்றாம் கட்டத்துக்கான கால அவகாச நீட்டிப்பு, கிராமப்புறச் சாலைகளில் திட்டமிடப்பட்ட மேம்பாட்டுப் பணிகளை நிறைவு செய்வதற்கு வழிவகுக்கும். இது வேளாண், வேளாண் அல்லாத பொருட்களுக்கான சந்தை அணுகலை எளிதாக்கி, அதன் மூலம் கிராமப்புறப் பொருளாதாரத்தையும் வர்த்தகத்தையும் மேம்படுத்தும். மேலும், போக்குவரத்துக்கான நேரமும் செலவும் குறைவதால் கிராமப்புற வருவாய் மேம்படும். மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து இணைப்பு வசதிகள், கல்வி நிறுவனங்கள், சுகாதார மையங்களுக்கான அணுகலை மேம்படுத்தும். இத்திட்டத்தின் தொடர்ச்சியான செயலாக்கம் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மேலும், அமைச்சரவை பின்வரும் அம்சங்களுக்கு ஒப்புதல் அளித்தது:

- சமவெளிப் பகுதிகளில் சாலைகள், பாலங்கள் அமைப்பதற்கும், மலைப்பகுதிகளில் மீதமுள்ள சாலை கட்டுமானப் பணிகளை முடிப்பதற்குமான காலக்கெடு, மார்ச் 2028 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

- மலைப் பகுதிகளில் நிலவும் சவாலான புவியியல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, இப்பகுதிகளில் பாலங்களில் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கான காலக்கெடு மார்ச் 2029 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

- 2025 மார்ச் 31–க்கு முன்னர் அனுமதிக்கப்பட்டு, இதுவரை நிதி ஒதுக்கீடு இறுதி செய்யப்படாத அனைத்துப் பணிகளும், தற்போது ஒப்பந்தப்புள்ளிகளையும் ஒதுக்கீட்டு நடைமுறையையும் தொடர அனுமதிக்கப்படுகின்றன.

- முன்னர் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் 961 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 161 புதிய நீண்ட தூரப் பாலங்கள் கட்டுவதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக, மொத்த நிதி ஒதுக்கீடு, முதலில் ஒதுக்கப்பட்ட 80,250 கோடி ரூபாயிலிருந்து 83,977 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.

சமூகப் பாதுகாப்புக்கான காப்பீடும் ஓய்வூதியங்களும்

பிரதமரின் சுரக்ஷ பீமா ஆயுள் காப்பீட்டுத் திட்டம், பிரதமரின் ஜீவன் ஜோதி விபத்துக் காப்பீட்டுத் திட்டம், அடல் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின் 11 ஆண்டுகள்

குடும்பங்கள் பாதுகாக்கப்படுகின்றன எதிர்காலம் உறுதிசெய்யப்படுகிறது

கனவுகளை நனவாக்குவது முதல் கண்ணியத்தை மீட்டெடுப்பது வரை, அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம் என்ற உணர்வை உள்ளடக்கிய 'அனைவருக்குமான பாதுகாப்பு' என்பது தற்போதைய அரசின் முன்னுரிமையாக உள்ளது. இந்த நோக்கத்துடன், 2015 மே 9 அன்று, பிரதமர் நரேந்திர மோடி, பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் (பிஎம்எஸ்பிஒய்), பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் (பிஎம்ஜேஜேபிஒய்), அடல் ஓய்வூதியத் திட்டம் (ஏபிஒய்) ஆகிய திட்டங்களைத் தொடங்கி வைத்தார். இத்திட்டங்கள் தற்போது 11 ஆண்டுகளை நிறைவு செய்கின்றன. இந்த மூன்று பொதுக் காப்பீட்டுப் பாதுகாப்புத் திட்டங்கள் இதுவரை 92 கோடிக்கும் அதிகமான பதிவுகளைப் பெற்றுள்ளன என்ற உண்மையிலிருந்தே இவற்றின் பரந்த வீச்சை அறியலாம்.

2014 வரை, இந்திய மக்கள்தொகையில் ஏறக்குறைய 80 முதல் 90 சதவீதம் பேர் எந்தவிதமான காப்பீட்டு வசதியையோ அல்லது ஓய்வூதியத்திற்கான வாய்ப்பையோ பெற்றிருக்கவில்லை. எளிமையாகச் சொல்வதானால், 100 கோடிக்கும் அதிகமான மக்கள் காப்பீடு அல்லது ஓய்வூதியப் பாதுகாப்பு இன்றி தவித்தனர். இந்தப் பின்னணியில், 2015 மே 09 அன்று – மேற்கு வங்கத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி ஏழைகளுக்கும் தேவை உள்ளவர்களுக்கும் ஒரே நேரத்தில் இரண்டு காப்பீட்டு திட்டங்களையும் ஒரு ஓய்வூதியத் திட்டத்தையும் அறிமுகம் செய்வதன் மூலம் அரசுக்கு உள்ள ஆழ்ந்த கடமை உணர்வு வெளிப்படுவதாகக் கூறினார். அப்போது கருத்துத் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி ஏழைகள் வெறும் இலவசங்களை விரும்புவதில்லை என்றும், அவர்கள் அதிகாரம் பெறுவதையே விரும்புகிறார்கள் என்றும் கூறினார்.

பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

57.11 கோடி பேர் இணைந்துள்ளனர்

அமெரிக்காவின் மக்கள்தொகையை விட இது அதிகம்

பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்


26.31 கோடி பேர் இணைந்துள்ளனர்

பாகிஸ்தானின் மக்கள் தொகையை விட இது அதிகம்

அடல் ஓய்வூதியத் திட்டம்

8.71 கோடி பேர் இணைந்துள்ளனர்

ஜெர்மனி மக்கள் தொகையை விட இது அதிகம்



பிரதமரின் சுரக்ஷ பீமா ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

ஒரு வருட விபத்துக் காப்பீடு வெறும் 20 ரூபாய்க்கு

மத்தியப் பிரதேசத்தின் ஹர்தா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 27 வயதான ஜோதி நிஹால், தனது கணவர் முரளிதர் நிபாலை ஒரு திடீர் விபத்தில் இழந்தார். முரளிதர் அந்தக் குடும்பத்தின் ஒரே வருமானம் ஈட்டும் உறுப்பினராக இருந்தார். ஜோதியைத் தவிர, அந்தக் குடும்பத்தில் இரண்டு சிறு குழந்தைகளும் இருந்தனர். இந்த இக்கட்டான நேரத்தில், முரளிதர் முன்னரே எடுத்திருந்த ஒரு சிறிய முடிவு அக்குடும்பத்திற்குப் பெரிய ஆறுதல் அளித்தது. அது, பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தில் (பிஎம்எஸ்பிஒய்) 12 ரூபாய் (தற்போது 20 ரூபாய்) என்ற பெயரளவிலான கட்டணத்தைச் செலுத்திப் பதிவு செய்ததுதான். இந்தத் திட்டம், அரசால் செயல்படுத்தப்படும் ஒரு வருடாந்தர தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டமாகும். முரளிதர் காலமானபோது, அவரது மனைவி ஜோதிக்கு இந்தத் திட்டத்தின் மூலம் 2 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தால் (பிஎம்எஸ்பிஒய்) பயன் பெற்ற, இதுபோன்ற எண்ணற்றவர்களின் கதைகள் உள்ளன. இத்திட்டத்தின் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில், 12 ரூபாய்க்கு ஒரு சிறு துணியைக் கூட வாங்க முடியாது என்று ஒரு திரைப்படத்தில் வந்த வசனத்தைச் சுட்டிக் காட்டினார். ஆனாலும் சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவடைந்த பிரிவினருக்குக் கண்கூடான பலன்களைத் தரும் ஒரு காப்பீட்டுத் திட்டத்தை அரசு 12 ரூபாய்க்கு அறிமுகப்படுத்தியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.



பிஎம்எஸ்பிஒய் பற்றி மேலும்


- பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் என்பது ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கக்கூடிய ஒரு வருடாந்தர தனிநபர் காப்பீட்டுத் திட்டமாகும்.
- இந்தத் திட்டம், விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கோ அல்லது நிரந்தர முழு ஊனத்திற்கோ 2 லட்சம் ரூபாயும், நிரந்தர பகுதி அளவு ஊனத்திற்கு 1 லட்சம் ரூபாயும் காப்பீட்டுப் பலன்களை வழங்குகிறது.
- ஆண்டு பிரீமியம் 20 ரூபாய்.
- இந்தத் திட்டத்தின் பலன்கள் 18 முதல் 70 வயதுக்குட்பட்ட நபர்களுக்குக் கிடைக்கிறது.
- இந்தத் திட்டத்தில் பயன் பெற விரும்பும் விண்ணப்பதாரர் வங்கிக் கணக்கு வைத்திருக்க வேண்டும்.



குறிப்பு: பிஎம்எஸ்பிஒய் பயனாளிகள்

50% பெண்கள்

72% மக்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள்



பிரதமரின் ஜீவன் ஜோதி விபத்துக் காப்பீட்டுத் திட்டம்


விபத்துக் காப்பீட்டுத் திட்டப் பலன்கள் ஆண்டுக்கு வெறும் 436 ரூபாய், அதாவது ஒரு நாளைக்கு 1.20 ரூபாய் செலவில் கிடைக்கிறது

ராதாவின் கணவர் ஒரு தினக்கூலித் தொழிலாளி. அவர் திடீரென இறந்துவிட்டார். ராதாவிடம் சேமிப்பு இல்லை. நிலம் இல்லை. அவருக்கு நிதியுதவி செய்ய யாரும் இல்லை. பின்னர், அவருடைய கணவர் இறந்த சில நாட்களுக்குப் பின், ஒரு காப்பீட்டுப் பிரதிநிதி அவரைச் சந்தித்து, அவரது கணவர் பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் (பிஎம்ஜேஜேபிஒய்) கீழ் பதிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார். இதில் காப்பீட்டுக்கான இழப்பீட்டுத் தொகையாகப் பெறப்பட்ட 2 லட்சம் ரூபாய் நிதியுதவி, ராதா மீண்டும் தன் சொந்தக் காலில் நின்று, தன் வாழ்க்கையை புதிதாகத் தொடங்குவதற்கான நம்பிக்கையை அளித்தது. இந்தக் காப்பீட்டுத் திட்டம் 2015 மே 9 அன்று தொடங்கப்பட்டது. மக்கள் தொகையில் சுமார் 20 சதவீதம் பேர் மட்டுமே ஏதேனும் ஒரு வகையான காப்பீட்டு வசதியைக் கொண்டிருந்த நேரத்தில், 2015–ம் ஆண்டு மத்திய பட்ஜெட்டின் போது இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி, பொதுவாக இதுபோன்ற காப்பீட்டுத் திட்டங்களுக்கு மருத்துவப் பரிசோதனை தேவைப்படும் என்றும், யார் காப்பீட்டுக்குத் தகுதியானவர், யார் தகுதியற்றவர் என்பதைக் காப்பீட்டு நிறுவனமே தீர்மானிக்கும் என்றும் கூறினார். இருப்பினும், இந்தத் திட்டத்தின் கீழ், ஒருவர் ஒரு படிவத்தை நிரப்பினாலே போதும், உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலும், இந்தக் காப்பீட்டுத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவர் கூறினார்.



பிஎம்ஜேஜேபிஒய் பற்றி மேலும் தகவல்கள்


- இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் சேருவதற்கான தகுதி, வயது 18 முதல் 50 வயது வரை.
- வங்கிக் கிளைகள், தபால் நிலையங்கள் அல்லது இணையதளத்தில் பதிவு வசதிகள் உள்ளன.
- ஆண்டு பிரீமியம் 436 ரூபாய் ஆகும்.
- காப்பீட்டுக் காலத்தில், காரணம் எதுவாக இருப்பினும், மரணம் ஏற்பட்டால், 2 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும்.
- இதில் இணைவதற்கு, வங்கி அல்லது அஞ்சல் அலுவலகத்தில் கணக்கு வைத்திருப்பதும், அந்தக் கணக்கில் தானாகப் பற்று செய்யப்படும் வசதிக்கு அங்கீகாரம் அளிப்பதும் கட்டாயமாகும்.



குறிப்பு: பிஎம்ஜேஜேபிஒய் பயனாளிகள்

53% பெண்கள்

74% மக்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள்



குறிப்பு: புள்ளிவிவரங்கள் எண்ணிக்கை கோடிகளில் தரப்பட்டுள்ளன; 2025–26–ம் நிதியாண்டுக்கான தரவுகள் 2026 ஜனவரி 31 நிலவரப்படியானவை.

ஏழைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டால், அவர்கள் வறுமைக்கு எதிராக தாங்களாகவே போராட்டத்தை நடத்த முழுமையாகத் தயாராகிவிடுவார்கள் என்று பிரதமர் கூறினார். இப்போது, இந்த அதிகாரமளித்தல் திட்டங்களான பிரதாமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் 57 கோடிக்கும் அதிகமான மக்களையும், பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் 26 கோடிக்கும் அதிகமான மக்களையும், அடல் ஓய்வூதியத் திட்டம் 8.71 கோடிக்கும் அதிகமான மக்களையும் சென்றடைந்து, அதன் மூலம் அவர்கள் பயனடைகின்றனர். இந்த இரண்டு காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் மட்டும், 21,500 கோடி ரூபாய்க்கும் அதிகமான உரிமை கோரல்கள் பெறப்பட்டுத் தீர்வு காணப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. சுமார் 11 லட்சம் (1.1 மில்லியன்) குடும்பங்களுக்கு இந்தத் தொகை


அடல் ஓய்வூதியத் திட்டம்

60 வயதை அடைந்த பிறகு 1,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை ஓய்வூதியம் பெறலாம்

2014–க்கு முன், நாட்டின் மக்கள் தொகையில் 10 முதல் 15 சதவீதம் பேருக்கு மட்டுமே ஓய்வூதிய வசதி கிடைத்தது. இதனைக் கருத்தில் கொண்டு, 2015 மே 9 அன்று, நீண்ட காலப் பலன்களை வழங்கும் அடல் ஓய்வூதியத் திட்டத்தைத் (பென்ஷன் யோஜனா) அரசு தொடங்கியது. இத்திட்டத்தின் தொடக்க விழாவில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, இது இளைஞர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், அவர்கள் 60 வயதை எட்டும்போது, ஆதரவிற்காக வேறு யாரையும் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதை இது உறுதி செய்யும் என்றும் கூறினார். அண்மையில், அடல் ஓய்வூதியத் திட்டத்தை 2030–31–ம் ஆண்டு வரை தொடர்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.



கடந்த 5 ஆண்டுகளில் அடல் ஓய்வூதியத் திட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 3 மடங்கு அதிகரித்துள்ளது.



48.76% பயனாளிகள் பெண்கள். 2026 ஜனவரி 31–ம் தேதி நிலவரப்படி, 4.25 கோடி பெண்கள் இந்தத் திட்டத்தில் பதிவு செய்துள்ளனர்.

அடல் ஓய்வூதியத் திட்டம் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

- அரசு உத்தரவாதம் வழங்கும் முதலாவது ஓய்வூதியத் திட்டம் இதுவாகும்.
- உங்கள் பங்களிப்புகள் குறைவாக இருந்தால், அந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்கிறது.
- இந்தத் திட்டம், நிர்ணயிக்கப்பட்ட இலக்கு சார்ந்த நபர்களைச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக, 2022 அக்டோபர் 1 முதல் வருமான வரி செலுத்துவோர் இதில் பதிவு செய்வதற்குத் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
- இது மாதந்தோறும் 1,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரையிலான ஓய்வூதியத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது.
- ஓய்வூதியதாரர் இறந்தவுடன், அதே ஓய்வூதியத் தொகை அவரது வாழ்க்கைத் துணைக்குக் கிடைக்கும்.
- கணவன், மனைவி இருவரின் மறைவைத் தொடர்ந்து, திரட்டப்பட்ட ஓய்வூதிய நிதி திருப்பி வழங்கப்படும்.
- வயது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஓய்வூதியத் தொகை ஆகியவற்றைப் பொறுத்து, தற்போதைய மாதாந்தரப் பங்களிப்புகள் 42 ரூபாய் முதல் 1,454 ரூபாய் வரை மாறுபடும்.



“எங்கள் அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவை அனைவருக்கும் காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்குதல், மிகவும் குறைந்த செலவில் அவற்றை வழங்குதல் என்பதாகும்.”

–நரேந்திர மோடி, பிரதமர்

வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காப்பீட்டுத் திட்டங்களையும், ஓய்வூதியத் திட்டங்களையும் தொடங்கி வைத்தபோது, இந்தப் பாதுகாப்பு அம்சம் அமைப்பு ரீதியாக, ஏழைகளுக்காகவும் சாதாரண மக்களுக்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்ற தமது உறுதியான கருத்தைப் பிரதமர் நரேந்திர மோடி வெளிப்படுத்தினார். அரசின் இந்த முன்முயற்சி, சமூகத்தின் செழிப்பு மிக்க பிரிவினர் ஏழைகளுக்குச் சேவை செய்வதில் பங்களிப்பதற்கு இது ஊக்கசக்தியாக செயல்படக்கூடும் என்று அவர் குறிப்பிட்டார். அசைக்க முடியாத உறுதியுடன் அரசு செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களின் பலன்களை அனைவரும் பயன்படுத்திக்கொள்ளுமாறும், இத்திட்டங்களை உண்மையான பொது நல இயக்கமாக மாற்றுவதற்கு உதவுமாறும் மக்களை அரசு வலியுறுத்துகிறது.



முன்னேற்றம், இயற்கை, கலாச்சாரம் ஆகியவற்றின் வழித்தடம் தில்லி–டேராடூன் விரைவுச்சாலை

வலுவான போக்குவரத்து இணைப்பு வசதிகளும் மேம்பட்ட உள்கட்டமைப்பும் வர்த்தகத்தை அதிகரிப்பது மட்டுமின்றி, பயணத்தையும் எளிதாக்குகின்றன. இது நேர சேமிப்பு, எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்தல், மாசுபாட்டை குறைத்தல் ஆகியவற்றுக்கு வழிவகுக்கிறது. 2026 ஏப்ரல் 14 அன்று, பிரதமர் நரேந்திர மோடி, முன்னேற்றம், இயற்கை, கலாச்சாரம் ஆகியவற்றின் கலவையைப் பிரதிபலிக்கும் தில்லி–டேராடூன் பொருளாதார வழித்தடத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் தில்லி, உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட் மக்களுக்குப் பயனளிக்கும். உத்தராகண்ட் மாநிலம் உருவாக்கப்பட்டதன் 26–வது ஆண்டில், தில்லி–டேராடூன் விரைவுச்சாலையைத் திறந்து வைத்ததன் மூலம் ஒரு முக்கிய மைல்கல் எட்டப்பட்டுள்ளது.

டேராடூன்–தில்லி விரைவுச்சாலை என்பது பொருளாதார வழித்தடம் மட்டுமல்ல. அது பயணத்தை வேகமாகவும் மலிவாகவும் மாற்றும். இது பெட்ரோல், டீசல் மீதான செலவினங்களைக் குறைத்து, பயணிகள் கட்டணத்தையும், சரக்குக் கட்டணங்களையும் குறைக்கும். மேலும், சுற்றுலாவை மேம்படுத்துவதோடு, வேலைவாய்ப்புகளையும் அதிகரிக்கும். அதே நேரத்தில், தேவபூமி என்று அழைக்கப்படும் உத்தராகண்டை தூய்மையாகவும் புனிதமாகவும் வைத்திருப்பது அவசியமாகும். இங்குள்ள அழகான புனித யாத்திரைத் தலங்களை பிளாஸ்டிக் பொருட்களிலிருந்தும் பிற கழிவுகளிலிருந்தும் பாதுகாப்பது சுற்றுலாப் பயணிகள், உள்ளூர் மக்கள் இருவரின் பொறுப்பாகும். அப்போதுதான் நமது புனிதத் தலங்களின் தூய்மையையும் அழகையும் நம்மால் பாதுகாக்க முடியும்.

மாநிலம் தனது இருபத்து ஆறாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் உத்தராகண்டின் பயணத்தை எடுத்துரைத்த பிரதமர், இந்த நூற்றாண்டின் மூன்றாவது பத்தாம் ஆண்டு உத்தராகண்டின் பத்து ஆண்டுகளாக இருக்கும் என்று தாம் முன்பு கூறியதை நினைவுகூர்ந்தார். தற்போதைய அரசின் கொள்கைகளாலும் மக்களின் கடின உழைப்பின் மூலமும், இந்தப் புதிய மாநிலம் தனது வளர்ச்சிக்குப் புதிய பரிமாணங்களைச் சேர்த்து வருகிறது என்று பிரதமர் குறிப்பிட்டார். இந்த விரைவுச்சாலை உத்தராகண்டின் வளர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதிப்பட தெரிவித்தார். ஒரு தேசத்தின் எதிர்காலம் அதன் சாலைகள், நெடுஞ்சாலைகள், விரைவுச்சாலைகள், வான்வழிகள், ரயில் பாதைகள், நீர்வழிகள் ஆகியவற்றில் எழுதப்பட்டுள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டார். நாட்டில் உள்கட்டமைப்பு மேம்பாடு முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் நடைபெற்று வருவதை அவர் சுட்டிக் காட்டினார்.

> **குளிர்கால சார் தாம் யாத்திரையில் பங்கேற்போரின் எண்ணிக்கை 2024–ல் 80,000–ஆக இருந்த நிலையில், 2025–ல் 150,000–ஐத் தாண்டியுள்ளது.**

உள்கட்டமைப்பு செலவினங்கள் 2014–ம் ஆண்டுக்கு முன் ஆண்டுக்கு 2 லட்சம் கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த நிலையில், தற்போது ஆறு மடங்குக்கும் மேலாக

திட்டத்தின் சிறப்பம்சங்கள்

12,000+கோடி

213 கிலோமீட்டர் நீளமுள்ள, ஆறு வழித்தடங்களைக் கொண்ட, கட்டுப்படுத்தப்பட்ட தில்லி–டேராடூன் பொருளாதார வழித்தடத்தை மேம்படுத்துவதற்காக 12,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளது.

2.5 டேராடூனைச் சென்றடைய இப்போது இரண்டரை மணி நேரமே ஆகும்; முன்பு இதற்கு ஆறு மணி நேரம் ஆனது.

- இந்த வழித்தடத்தில் விலங்குகள் கடக்கும் எட்டு இடங்கள், யானைகள் செல்ல 200 மீட்டர் நீளமுள்ள இரண்டு சுரங்கப்பாதைகள், காளி கோயிலுக்கு அருகே 370 மீட்டர் நீளமுள்ள ஒரு சுரங்கப்பாதை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.
- தடையற்ற, அதிவேக போக்குவரத்து இணைப்பை உறுதி செய்வதற்காக, 10 பரிமாற்றச் சந்திப்புகள், மூன்று ரயில்வே மேம்பாலங்கள், நான்கு முக்கியப் பாலங்கள், 12 சாலையோரப் பொது வசதிகள் ஆகியவை கட்டப்பட்டுள்ளன.



பிரதமர் பங்கேற்ற நிகழ்ச்சியை முழுமையாகக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

முன்னாள் ராணுவத்தினருக்கான நலத்திட்டங்கள்

₹1.25 'ஒரு பதவி, ஒரு ஓய்வூதியம்' திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 1.25 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

36% முன்னாள் ராணுவத்தினருக்கான சுகாதாரத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 36% அதிகரிக்கப்பட்டுள்ளது.

70 70 வயதைக் கடந்த முன்னாள் ராணுவ வீரர்களுக்கு, மருந்துகளை வீட்டிற்கே கொண்டு சென்று வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கான கல்வி மானியம் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

- மகள்களுக்கான திருமண உதவித்தொகை 50,000 ரூபாயிலிருந்து 1,00,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.



“நமது மலைகள்... இந்த வனப் பகுதிகள்... இவை எல்லாம் தேவபூமியின் பொக்கிஷங்கள்... இவை உண்மையாகவே புனிதமான இடங்கள். அத்தகைய இடங்களைத் தூய்மையாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பது நம் அனைவரின் கடமையாகும். பிளாஸ்டிக் புட்டிகள், குப்பைக் குவியல்கள் ஆகியவை தேவபூமியின் புனிதத்தன்மையைக் கெடுக்கின்றன. எனவே, புனித யாத்திரைத் தலங்கள் உள்ள இந்த தேவபூமியின் பல்வேறு பகுதிகளைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.”

அதிகரித்து ஆண்டுக்கு 12 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது. உத்தராகண்டில் மட்டும் தற்போது 2.25 லட்சம் கோடிக்கும் அதிக மதிப்பிலான உள்கட்டமைப்புத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்று திரு நரேந்திர மோடி கூறினார்.

தில்லி–மேற்கு உத்தரப் பிரதேசம்–உத்தராகண்ட் பிராந்தியத்தில் அண்மைக்கால முன்னேற்றங்களைப் பட்டியலிட்ட பிரதமர், தில்லி மெட்ரோவின் விரிவாக்கம், மீரட்டில் மெட்ரோ சேவைகள் தொடக்கம், தில்லி–மீரட் நமோ பாரத் ரயில் தொடக்கம், நொய்டா சர்வதேச விமான நிலையம், எம்ஆர்ஓ எனப்படும் பராமரிப்பு, பழுதுபார்ப்பு வசதியின் தொடக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டார். விவசாயிகள், கால் நடைகள் வளர்ப்போர் ஆகியோரின் விளைபொருட்கள் அதிக அளவில் வேகமாக பரந்த சந்தைகளைச் சென்றடைவதால், அவர்களும் பயனடைவார்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

காசியாபாத், பாக்பத், பரௌத், ஷாம்லி, சஹரான்பூர் ஆகிய ஊர்களின் வழியாகச் செல்லும் இந்த வழித்தடம், உத்தரப் பிரதேசத்தில் உள்ள இந்த நகரங்களுக்கும் புத்துயிர் அளிக்கும் என்று அவர் குறிப்பிட்டார். இது சாலை மட்டுமல்ல; இது இப்பகுதி முழுவதும் வர்த்தகம், தொழில், கிடங்கு, சரக்குப் போக்குவரத்து ஆகியவற்றுக்குப் புதிய வழிகளைத் திறக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். டேராடூன், ஹரித்வார், ரிஷிகேஷ், முசோரி, சார் தாம் வழித்தடம் ஆகிய அனைத்துமே இதன் மூலம் எளிதில் அணுகக்கூடியதாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். குளிர்கால சுற்றுலா, குளிர்கால விளையாட்டுகள், இலக்கு சார்ந்த திருமணங்கள் ஆகியவற்றுக்கு ஒரு முதன்மை மையமாக உத்தராகண்ட் வளர்ந்து வருகிறது என்று அவர் மேலும் கூறினார். சுற்றுலா வளரும்போது, உணவகங்கள், தாபாக்கள், வாடகை கார்கள், தங்குமிடங்கள் என அனைத்தும் பயனடையும் எனவும் ஒட்டுமொத்த உள்ளூர் பொருளாதாரமும் ஊக்கமடையும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மே 1–ம் தேதியை ஒட்டிய சிறப்புப் பக்கம்:
தொழிலாளர் தினம்

உழைப்பே வெல்லும்

வாய்மையே வெல்லும் (சத்தியமேவ ஜெயதே) என்பதைப் போலவே, உழைப்பே வெற்றி தரும் (ஷ்ரமேவ் ஜெயதே) என்ற கருத்தும் தேசத்தின் வளர்ச்சிக்கு சமமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. உழைப்பே வெற்றி தரும் என்ற உணர்வோடு, மத்திய அரசு தொழிலாளர்களின் நலனுக்காக உறுதியான அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. தொழிலாளர் வர்க்கத்தின் செழிப்பை உறுதி செய்வதற்காக, நான்கு விரிவான தொழிலாளர் சட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் சமூகப் பாதுகாப்பு வழங்குவது உட்பட பல வலுவான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. மே 1–ம் தேதி சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, தொழிலாளர்களை மேம்படுத்துவதற்கான தற்போதைய முயற்சிகளை எடுத்துரைக்கும் ஒரு சிறப்புக் கட்டுரை இங்கே...



தொழிலாளர்களின் வெற்றிக்கும் தொழில்துறைகளின் வெற்றிக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது. ஒன்று இல்லாமல் மற்றொன்று உண்மையாக செழித்து வளர முடியாது. தொழில்துறைகள் வளரும்போது, அவை தொழிலாளர்களுக்கு நிலையான வேலை வாய்ப்புகள், நியாயமான ஊதியம், சமூகப் பாதுகாப்புப் பலன்கள் ஆகியவற்றை உருவாக்குகின்றன. இதன் பலனாக, ஊக்கமும் பாதுகாப்பும் கொண்ட தொழிலாளர் படை, உற்பத்தித்திறனையும் புத்தாக்கத்தையும் ஊக்குவிக்கிறது. அதன் மூலம் தொழில்துறையின் நீண்டகால நிலைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது. அமைப்புசார்ந்த, அமைப்புசாராத என இரு துறைகளிலும் உள்ள தொழிலாளர்கள் தங்கள் உழைப்பிற்கான மரியாதையையும் சம உரிமைகளையும் பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என மத்திய அரசு உறுதியாகத் தீர்மானித்துள்ளது. விஸ்வநாத் தாம் திறப்பு விழாவின் போது தொழிலாளர்கள் மீது மலர்களைத் தூவுதல், பிரயாக்ராஜ் கும்பமேளாவில் தூய்மைப் பணியாளர்களின் பாதங்களைக் கழுவுதல், புதிய நாடாளுமன்றக் கட்டடத்திற்குள் தொழிலாளர்களுக்கென ஒரு பிரத்யேகக் காட்சிக்கூடத்தை நிறுவுதல் போன்ற மனமார்ந்த செயல்களால் இந்த உறுதிப்பாடு மேலும் வலுவாக அதிகரிக்கிறது. இவை அனைத்தும் நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் உழைப்பே வெல்லும் (ஷ்ரமேவ் ஜெயதே) என்ற கருத்தாக்கத்தின் சக்தியைக் கௌரவிக்கும் விதமாக அமைகின்றன.

அரசு நான்கு தொழிலாளர் சட்டங்களைச் செயல்படுத்துகிறது

ஏற்கெனவே உள்ள 29 மத்திய தொழிலாளர் சட்டங்களின் தொடர்புடைய விதிகளை வெற்றிகரமாக ஒருங்கிணைத்து, எளிமைப்படுத்தி, முறைப்படுத்திய பின்னர், மத்திய அரசு நான்கு விரிவான தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. அவை, ஊதியச் சட்டத் தொகுப்பு – 2019, தொழில்துறை உறவுகள் சட்டத் தொகுப்பு – 2020, சமூகப் பாதுகாப்புச் சட்டத் தொகுப்பு – 2020, தொழில் பாதுகாப்பு, சுகாதாரம், பணி நிலைமைகள் சட்டத் தொகுப்பு – 2020 ஆகியவை. இந்தச் சட்டத் தொகுப்புகள் 2025 நவம்பர் 21 முதல் அமலுக்கு வந்துள்ளன. தொழிலாளர் விதிமுறைகளை நவீனமயமாக்குவதன் மூலமும், தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதன் மூலமும், மாறிவரும் பணி உலகிற்கு ஏற்ப தொழிலாளர் சூழலமைப்பை சீரமைப்பதன் மூலமும், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை, எதிர்காலத்திற்குத் தயாரான தொழிலாளர் சக்திக்கும், வலுவான, தொழில்துறைக்கு உகந்த சூழலுக்கும் அடித்தளமிடுகிறது. நாட்டில் பல தொழிலாளர் சட்டங்கள் சுதந்திரத்திற்கு முந்தைய காலத்திலும், சுதந்திரத்திற்குப் பிந்தைய தொடக்க காலத்திலும் (1930–1950) இயற்றப்பட்டவை. அந்தக் காலகட்டத்தில், பொருளாதாரமும் தொழிலாளர் சந்தையும் தற்போதைய காலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தன.

இ–ஷ்ரம் தளம் (போர்டல்) : ஒரு முழுமையான தீர்வு

2021 ஆகஸ்ட் 26 அன்று, தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு அமைச்சகம், ஆதார் மூலம் சரிபார்க்கப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்களின் தேசிய தரவுத்தளத்தை உருவாக்கும் நோக்கில் இ–ஷ்ரம் வலைதளத்தைத் தொடங்கியது. 2024 அக்டோபர் 21 அன்று, பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும், நலத்திட்டங்களையும் ஒரே இணையதளத்தில் ஒருங்கிணைக்கும் இ–ஷ்ரம் என்ற ஒரே தள தீர்வு தொடங்கப்பட்டது. இப்போதுவரை, 14 சமூகநலத் திட்டங்கள் இந்தத் தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இ–ஷ்ரம் அட்டைதாரர்கள் எளிதாகத் திட்டப் பலன்களை அணுகுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைக் கட்டிய தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்

2023 மே 28 அன்று, புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வில், பிரதமர் நரேந்திர மோடி அதன் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் குழுவைச் சந்தித்தார். இந்த நாடாளுமன்றக் கட்டடத்தின் கட்டுமானம் சுமார் 60,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியது. பிரதமர் நரேத்திர மோடி பேசுகையில், இந்த கட்டடத்தைக் கட்டிய தொழிலாளர்களின் உழைப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு டிஜிட்டல் காட்சிக்கூடம் நாடாளுமன்றத்திற்குள் அமைக்கப்பட்டிருப்பது தமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றார். ஒருவேளை இது உலகில் இத்தகைய முதல் முயற்சியாக இருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றக் கட்டுமானத்தில் அவர்களின் பங்களிப்பு இப்போது அழியாததாக மாறியுள்ளது.



"நமது தொழிலாளர்கள் அர்ப்பணிப்புடன் உழைக்கும் பணியாளர்கள் (ஷ்ரம்யோகி). நமது பல பிரச்சனைகள் தொழிலாளர்களால் தீர்க்கப்படுகின்றன. நமது பல தேவைகள் தொழிலாளர்களால் பூர்த்தி செய்யப்படுகின்றன. எனவே, அவர்களைப் பற்றிய நமது கண்ணோட்டத்தை மாற்றி, அவர்கள் மீதான நமது அணுகுமுறையை மாற்றும் வரை, சமூகத்தில் அவர்களுக்கு உரிய கண்ணியத்தை நம்மால் வழங்க முடியாது."

–நரேந்திர மோடி, பிரதமர்

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைக் கட்டிய தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்

விஸ்வநாதர் கோயிலில் தொழிலாளர்கள் மீது மலர் தூவப்பட்டது.

2021, டிசம்பர் 13– ல் வாரணாசியில் காசி விஸ்வநாதர் கோயில் வளாகத் திறப்பு விழாவின் போது, பிரதமர் மோடி கட்டுமானத் தொழிலாளர்கள் மீது மலர் தூவினார். அவர்களுடன் உணவு அருந்தினார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் மோடி, "இந்த அற்புதமான வளாகத்தைக் கட்டுவதற்காகத் தங்களின் வியர்வையை சிந்திய ஒவ்வொரு தொழிலாளரையும் நான் பாராட்டுகிறேன். கொவிட்– 19 பெருந்தொற்றின் போது கூட இப்பணி தடைபடக் கூடாது என்பதை அவர்கள் உறுதி செய்தனர். இந்தத் தொழிலாளர்களை சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறும் வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது" என்று தெரிவித்தார்.



தொழிலாளர்களுக்குப் பாராட்டு

2026, பிப்ரவரி 13– ல் சேவா தீர்த், கடமை மாளிகை 1, 2 ஆகியவற்றின் திறப்பு விழாவின் போது பிரதமர் மோடி, தொழிலாளர்களுக்குத் தமது பாராட்டுகளைத் தெரிவித்தார். "இக்கட்டடங்களின் கட்டுமானத்தில் தொடர்புடைய அனைத்துப் பொறியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்".





கும்பமேளாவில் பாதம் கழுவுதல்.

2019– ல் கும்பமேளாவில் சேவையாற்றிய தூய்மைப் பணியாளர்களுக்கு தமது மரியாதையை வெளிப்படுத்திய பிரதமர் நரேந்திர மோடி, தூய்மைப் பணியாளர்களையும், தன்னார்வலர்களையும் கௌரவித்தார். மேலும், ஐந்து தூய்மைப் பணியாளர்களின் பாதங்களைக் கழுவினார். அவர்களுடன் பிரதமர் தனிப்பட்ட முறையிலும் உரையாடினார்.

கட்டுமானப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுடன் பிரதமர் மோடி உரையாடினார்.

2021, செப்டம்பர் 26 மாலையில், பிரதமர் நரேந்திர மோடி புதிய நாடாளுமன்றக் கட்டடத்தின் கட்டுமானப் பணி நடக்கும் இடத்தைப் பார்வையிட்டார். அங்கு நடைபெற்று வரும் பணி, முன்னேற்றம் ஆகியவற்றை அவர் ஆய்வு செய்து, திட்டமிட்டபடி பணிகளை நிறைவு செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தினார். இந்தக் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுடன் அவர் உரையாடி, அவர்களின் நலன் குறித்தும் விசாரித்தார். கட்டுமானப் பணிகளில் தொடர்புடைய அனைவரும் கொவிட்–19 தடுப்பூசி செலுத்திக் கொண்டதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தினார். அனைத்துத் தொழிலாளர்களுக்கும் மாதந்தோறும் உடல்நலப் பரிசோதனைகளுக்கு ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார். மேலும், கட்டுமானப் பணி நிறைவடைந்தவுடன், இத்திட்டத்தில் பங்களித்த அனைத்துத் தொழிலாளர்களையும் கௌரவிக்கும் வகையில் அந்த இடத்தில் டிஜிட்டல் அருங்காட்சியகம் அமைக்கப்பட வேண்டும்; அந்த அருங்காட்சியகத்தில் அவர்களின் பெயர்கள், சொந்த ஊர், புகைப்படங்கள் மற்றும் தனிப்பட்ட விவரங்கள் இடம்பெற வேண்டும். இதன்மூலம் கட்டுமான முயற்சியில் ஈடுபட்ட அவர்களின் பங்களிப்புகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும் என்று கூறிய அவர் இம்முயற்சியில் பங்கேற்றதை அங்கீகரிக்கும் வகையில் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.





தொழிலாளர்கள் 125 நாட்கள் வேலைவாய்ப்பு உத்தரவாதத்தைப் பெற்றனர்.

வளர்ச்சியடைந்த இந்தியா– ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இயக்கம் சட்டம் 2025 தற்போதைய உத்தரவாதக் கட்டமைப்பை வலுப்படுத்தி விரிவுபடுத்துகிறது. இச்சட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஊரகப் பகுதி வீடுகளுக்கும் ஒரு நிதியாண்டில் குறைந்தபட்சம் 125 நாட்கள் கூலியுடன் வேலைவாய்ப்புக்கு சட்டபூர்வ உத்தரவாதம் வழங்கப்படுகிறது. இது 100 நாட்கள் என்ற முந்தைய வரம்பிலிருந்து அதிகமாகும். இந்த முன்முயற்சி ஊரக வருவாய்க்கு ஊக்கமளித்து, வாழ்வாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தும். இச்சட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் வேலை வழங்கப்படாவிட்டால், வேலையின்மைப் படியை வழங்க வலுவான சட்டபூர்வ அம்சத்தைக் கொண்டுள்ளது; இந்தப் படிக்கான விகிதம், அறிவிக்கப்பட்ட கூலி விகிதங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும். இச்சட்டம் வீடுகளின் வருவாய் நிலைத்தன்மையை வலுப்படுத்தி, அதன்மூலம் ஊரகப்பகுதி குடும்பங்களுக்கான உணவு பாதுகாப்பையும், நுகர்வு நிலைத்தன்மையையும் உறுதிசெய்கிறது.

புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள்.

திறன் மேம்பாடு, நிதி உதவி, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றில் வாய்ப்புகளுக்கான அணுகலை அளிப்பதன் மூலம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேலைவாய்ப்புத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு அதிகாரமளித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அதன்மூலம் அவர்களின் எதிர்காலத்திற்கு சிறந்த பாதுகாப்பை உறுதி செய்வது இந்த நடவடிக்கையின் நோக்கமாகும். அவற்றில் சில திட்டங்கள்:

பிரதமரின் சாலையோர வியாபாரிகள் தற்சார்பு நிதி.

2020 ஜூன் 1– ல் தொடங்கப்பட்ட இத்திட்டம், எந்தப் பிணையும் இல்லாமல் சாலையோர வியாபாரிகளுக்கு மூலதனக் கடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த முன்முயற்சி கொவிட்– 19 பெருந்தொற்றுக் காலத்தில் பெருமளவு பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தங்களின் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கு உதவி செய்ய அறிமுகம் செய்யப்பட்டது.

ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் மக்கள் ஆரோக்கியத் திட்டம்.

பிரதமர் நரேந்திர மோடி 2018, செப்டம்பர் 23– ல் ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் மக்கள் ஆரோக்கியத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்தியாவில் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் அனைவருக்கும் சுகாதாரப் பாதுகாப்பை அளிப்பது இதன் நோக்கமாகும்.

பிரதமரின் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம்.

2019 பிப்ரவரி 15– ல், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட இத்திட்டம் 60 வயதுடைய புலம்பெயர் தொழிலாளர்கள் உட்பட அமைப்புசாரா துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச, உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரதமரின் ஏழைகளுக்கான உணவுப் பாதுகாப்புத் திட்டம்.

பிரதமரின் ஏழைகளுக்கான உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான அரசின் உறுதிப்பாடு 2024, ஜனவரி 1 முதல் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் புலம்பெயர் தொழிலாளர்கள் உட்பட வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பத்தினருக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கப்படுகின்றன.

தொழிலாளர் தினத்தின் மகத்துவம்

உலக அளவில் கடினமாக உழைக்கின்ற, அர்ப்பணிப்புமிக்க தனிநபர்களை கௌரவப்படுத்தவும், தொழிலாளர்களின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஆண்டுதோறும் மே 1 தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. தொழிலாளர் தினம் என்பது வெறும் விடுமுறை தினம் அல்ல; இது உழைக்கும் சமூகத்தினரின் பங்களிப்புகளுக்கு மரியாதை செலுத்துவதற்கான அர்ப்பணிப்புமிக்க நாளாகும். இந்நாளைக் கடைப்பிடிப்பதன் மூலம், அவர்களின் போராட்டத்தை நினைவுகூர்வதுடன் பொதுமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அவர்களின் உரிமைகள் தொடர்பாக நாம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம்.








மக்களவை 93% அளவிற்கு செயல்பட்டது, மாநிலங்களவை 110%

நாடாளுமன்றச் சிறப்பு அமர்வின் இறுதி நாளான ஏப்ரல் 18 அன்று மக்களவையும் மாநிலங்களவையும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன. மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா பட்ஜெட் அமர்வு நிறைவடைவதாக அறிவித்து மக்களவை நடவடிக்கைகளை ஒத்திவைத்தார். அதன் பிறகு குடியரசு துணைத்தலைவர் சி பி ராதாகிருஷ்ணன் மேலவை நடவடிக்கைகளை ஒத்திவைத்தார். பட்ஜெட் அமர்வின் போது, இரு அவைகளிலும் பல்வேறு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, மாநிலங்களவையில் 110%, மக்களவையில் 93 % அளவிற்கு அவை நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக நடைபெற்றன.

18–வது மக்களவையின் 7– வது அமர்வு காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

2026, ஜனவரி 28– ல் தொடங்கிய மக்களவையின் ஏழாவது அமர்வின் போது, சுமார் 151 மணி 42 நிமிடங்களுடன் மொத்தம் 31 அமர்வுகள் நடைபெற்றன. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு 2026 ஜனவரி 28–ல் இரு அவைகளின் உறுப்பினர்களிடையே உரையாற்றினார். 2026–2027–ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் 2026, பிப்ரவரி 1– ல் அவையில் தாக்கல் செய்தார். 2026– 2027– ம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட் குறித்த விவாதம் 63 உறுப்பினர்கள் பங்கேற்புடன் சுமார் 13 மணி நேரம் நடைபெற்றது. 2026, பிப்ரவரி 11– ல் நிதி அமைச்சர் விவாதத்திற்கு பதிலளித்தார். 2026 மார்ச் 25– ல் நிதி மசோதா அவையில் தாக்கல் செய்யப்பட்டது.


- அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மக்களவையின் இந்த அமர்வு சுமார் 93 சதவீதம் நடைபெற்றது. இந்த அமர்வின்போது, 12 அரசு மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டன, மொத்தம் 9 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.
- 2026 ஏப்ரல் 16, ஏப்ரல் 17 ஆகிய தேதிகளில் அரசியல் சட்ட (131–வது) திருத்த மசோதா, 2026, யூனியன் பிரதேசங்கள் சட்டம் (திருத்த) மசோதா, 2026, தொகுதி மறுவரையறை மசோதா, 2026 ஆகியவை குறித்து அவையில் விவாதங்கள் நடைபெற்றன. இந்த விவாதம் 21 மணி 27 நிமிடம் நடைபெற்றது. இதில் 131 உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.
- 2026, மார்ச் 23– ல் மேற்கு ஆசியாவில் நிலவும் மோதல் குறித்தும், இந்தியா எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளித்தார்.
- 2026, மார்ச் 30–ல் விதி 193–ன் கீழ், "நாட்டில் இடதுசாரி தீவிரவாதத்தை அகற்றுவதற்கான முயற்சிகள்" தொடர்பாக குறுகிய கால விவாதம் நடைபெற்றது.





மாநிலங்களவையின் 270– வது அமர்வுடன் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நிறைவடைந்தது

மாநிலங்களவையின் 270– வது அமர்வு நிறைவுடன் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரும் முடிவுக்கு வந்தது. இந்தக் கூட்டத்தொடர் பட்ஜெட் ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல், கொள்கைகளுக்கு அங்கீகாரம் அளித்தல், முன்னுரிமைகள் ஆகியவை மூலம் இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனின் வாழ்க்கையிலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கூட்டத்தொடர் குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் நான்கு நாள் நீண்ட விவாதத்துடன் தொடங்கியது. இதில் 79 உறுப்பினர்கள் பங்கேற்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய முக்கியப் பிரச்சனைகளை, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பிரதமரின் பதிலுரை தெளிவுபடுத்தியது.

- நான்கு நாட்கள் நடைபெற்ற இந்த விவாதத்தில் மொத்தம் 97 உறுப்பினர்கள் பங்கேற்றனர். மேலும், அரசின் இரண்டு முக்கிய அமைச்சகங்களின் செயல்பாடு குறித்தும் அவையில் விரிவான விவாதங்கள் நடைபெற்றன.
- இந்தியா– அமெரிக்கா இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சரின் அறிக்கை, மேற்கு ஆசியாவில் நிலவும் சூழல் குறித்து வெளியுறவு அமைச்சரின் கவலை தொடர்பாக அவை தாமாக முன்வந்து விவாதித்தது.
- மேற்கு ஆசியாவில் நிலவும் மோதல் குறித்தும் இந்தியா எதிர்கொள்ளும் சவால்கள், குறிப்பாக நாட்டின் எரிசக்தித் தேவைகள், குறித்தும் பிரதமர் மோடி விளக்கினார்.
- இந்த அமர்வின்போது, 50 உறுப்பினர்கள் தனிநபர் மசோதாக்களை அறிமுகம் செய்தனர்.
- அவை நவடிக்கைகள் மொத்தம் 157 மணி 40 நிமிடம் நடைபெற்று 109.87% செயல்பாடு என்ற ஆரோக்கியமான நிலையை அடைந்தது.







நம்பிக்கை அடிப்படையிலான முறையை வலுப்படுத்துகின்ற ஒரு மசோதா

ஜன் விஸ்வாஸ் (விதிகள் திருத்தம்) மசோதா 2026 மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. இது 23 அமைச்சகங்களின் 79 மத்திய சட்டங்களில் இடம்பெற்றுள்ள 784 விதிகளை திருத்தியுள்ளது. இந்த சட்டத்தின் மூலம், 717 விதிகள் குற்றவியல் நடவடிக்கையில் இருந்து நீக்கப்பட்டு எளிதாக வர்த்தகம் செய்வதற்கும் எஞ்சிய 67 விதிகள் திருத்தப்பட்டதன் மூலம் எளிதான வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முன்முயற்சி சரிவிகித மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான ஒழுங்குமுறைச் சூழலையும் ஏற்படுத்தும். இது சிறிய குற்றங்களை குற்றமற்றதாக்கி, தனிநபர்கள் மற்றும் வர்த்தகர்களின் சுமையை குறைக்கும் வகையில் தற்போதைய சட்ட விதிகளை முறைப்படுத்தியுள்ளது.

மசோதாவின் 4 முக்கிய அம்சங்கள்

நான்கு முக்கிய அம்சங்களின் அடிப்படையில், சட்ட விதிமுறைகளைப் பின்பற்றுவதை ஊக்குவிப்பதோடு குடிமக்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் அன்றாட சட்டத் தொடர்புகளை எளிமையாக்கி, தடையற்றதாக மாற்றும் ஓர் ஒழுங்குமுறைச் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் இம்மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

- அபராதம் விதிப்பதற்கு முன் எச்சரிக்கை.
- விகிதாச்சார அபராதங்கள்.
- விரைவான, நியாயமான தீர்ப்பு.
- அபராதம் மாறக்கூடிய கட்டமைப்பு.



சிறிய மற்றும் நடைமுறை சார்ந்த மீறல்களுக்கு இனி தண்டனைகள் கிடையாது.

ஜன் விஸ்வாஸ் (விதிமுறைகள் திருத்தம்) மசோதா, 2026 குற்றவியல் விதிமுறைகளை நீக்கி மாற்றியமைத்து அதிக விவேகமுடையதாகவும், குடிமக்களுக்கு உகந்ததாகவும் அதன்மூலம் தேவையற்றச் சட்டச் சிக்கல்களிலிருந்து மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது

- 317 விதிமுறைகளில் அபராதம் சிவில் அபராதமாக மாற்றப்பட்டுள்ளது.
- 158 விதிமுறைகளில் அபராதம் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது.
- 113 விதிமுறைகளில் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் சிவில் அபராதமாக மாற்றப்பட்டுள்ளது.
- 63 விதிமுறைகளில் முதல்முறை தவறுக்கு எச்சரிக்கை/ அறிவிக்கை வெளியிடுவது இடம்பெற்றுள்ளது.
- 17 விதிமுறைகளில் சிறைத்தண்டனைக் காலம் குறைக்கப்பட்டுள்ளது.
- 17 விதிமுறைகளில் கூட்டு குற்றங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.
- 29 விதிமுறைகளில் சிறைத்தண்டனை நீக்கப்பட்டது.
- 2 விதிமுறைகளில் சிறைத்தண்டனை சிவில் அபராதமாகக் மாற்றப்பட்டது.
- 1 விதிமுறையில் சிறைத் தண்டனையின் தன்மை முறைப்படுத்தப்பட்டது.
- 6 விதிமுறைகளில் குற்றங்களின் நோக்கம் வரையறுக்கப்பட்டது.

மக்களவையில் சில முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன

பட்ஜெட் கூட்டத்தொடரின்போது, மக்களவையில் 12 அரசு மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டு, 9 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன நிறைவேற்றப்பட்ட சில முக்கியத்துவம் வாய்ந்த மசோதாக்கள் பின்வருமாறு:

- தொழிலுறவு சட்டத் தொகுப்பு (திருத்த) மசோதா, 2026
- மூன்றாம் பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்த மசோதா, 2026
- நிதி மசோதா, 2026
- திவால் மற்றும் நொடித்துப்போதல் சட்டத் தொகுப்பு (திருத்த) மசோதா, 2026
- ஆந்திரப் பிரதேசம் மறுசீரமைப்பு (திருத்த) மசோதா, 2026
- ஜன் விஸ்வாஸ் (விதிமுறைகள் திருத்த) மசோதா, 2026
- மத்திய ஆயுதக் காவல் படைகள் மசோதா

மாநிலங்களவைத் துணைத் தலைவராக ஹரிவன்ஷ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தக் கூட்டத் தொடரின்போது, மாநிலங்களவைத் துணைத் தலைவராக ஹரிவன்ஷ் மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏப்ரல் 17 அன்று மாநிலங்களவையில் உரையாற்றிய பிரதமர் மோடி, மாநிலங்களவை துணைத்தலைவராகத் தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஹரிவன்ஷுக்குத் தமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை பற்றி குறிப்பிட்ட பிரதமர் மோடி, இது ஹரிவன்ஷ் மீதான அவையின் ஆழமான நம்பிக்கை, அவையில் அவரது மதிப்புமிக்க அனுபவம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாகக் கூறினார். அவரது அனுபவம், அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறை, கண்ணியமிக்க பணி முறை ஆகியவற்றால் தொடர்ந்து மூன்றாவது முறையாக அவரை மாநிலங்களவைத் தேர்ந்தெடுத்துள்ளது.

சிஏபிஎஃப் (பொது நிர்வாகம்) மசோதா, 2026– ஐ குரல் வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

மத்திய ஆயுதக் காவல் படைகள் (பொது நிர்வாகம்) மசோதா, 2026 மக்களவையில் ஏப்ரல் 2–ல் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது. இம்மசோதா மாநிலங்களவையில் ஏற்கனவே நிறைவேறியிருந்தது. சிஏபிஎஃப் தலைமை இயக்குநர் நிலையில் 50 சதவீதப் பணிகளை அயல்பணி மூலமும், கூடுதல் தலைமை இயக்குநர் நிலையில் 67 சதவீதப் பணிகளை அயல்பணி மூலமும் நிரப்ப இம்மசோதா வகைசெய்கிறது. மேலும், சிறப்புத் தலைமை இயக்குநர் மற்றும் தலைமை இயக்குநர் நிலையிலான அனைத்துப் பணிகளும் பிரத்யேகமாக அயல்பணி மூலம் நிரப்பப்படும். மத்திய ஆயுதக் காவல் படையினரில் குரூப் ஏ பொதுப்பணி அதிகாரிகள் மற்றும் இதர அதிகாரிகள் பணியாளர் சேர்ப்பு மற்றும் சேவை நிபந்தனைகளை நிர்வகிக்கும் பொது விதிமுறைகளை ஒழுங்குபடுத்துவது இம்மசோதாவின் நோக்கமாகும்.

கர்நாடகா: தத்துவம், தொழில்நுட்பம் ஆகிய இரண்டிலும் வளமை

தத்துவம், தொழில்நுட்பம் ஆகிய இரண்டிலும் கர்நாடகாவின் அடையாளம் உலக அளவில் அறியப்படுகிறது. ஆழ்ந்த தத்துவ நுண்ணறிவும், தொழில்நுட்ப வலிமையும் இங்கே இணைந்துள்ளன. இந்த வளமான பாரம்பரியத்தில், கர்நாடகாவின் ஆதிசுஞ்சனகிரி மஹாசமஸ்தான மடம் நமது மகத்துவமிக்க ஆன்மீகப் பாரம்பரியங்களின் வாழும் அடையாளமாகத் திகழ்கிறது. இதன் சமூக சேவைகள் உண்மையில் உத்வேகம் அளிக்கின்றன. ஏப்ரல் 15–ல், பிரதமர் நரேந்திர மோடி கர்நாடகாவின் மாண்டியாவில் இந்த மடத்தில் அமைந்துள்ள குரு பைரவைக்யா கோயிலைத் திறந்து வைத்தார். இதற்கு முன்பாக, ஜுவாலா பீடத்தில் திரண்டிருந்தவர்களிடையே அவர் உரையாற்றி, காலபைரவர் கோயிலில் தரிசனம் செய்தார்...

> ஒருவர் தன் குருவை கௌரவிக்கும் வகையில் குரு பைரவைக்யா கோயிலைக் கட்டுவது வெறும் கட்டமைப்பை உருவாக்குவது மட்டுமின்றி, ஆழ்ந்த உணர்வுகளுக்கு ஓர் உறுதியான வடிவத்தை அளிப்பதுமாகும். எதிர்வரும் காலங்களில் சேவை, ஆன்மீகப் பயிற்சி மற்றும் உத்வேகத்திற்கான ஒரு துடிப்புமிக்க மையமாக இது உருவாக உள்ளது.
>
> நரேந்திர மோடி, பிரதமர்



இந்தியா ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலைத்து வாழும் நாகரிகமாகும். பாரம்பரியங்கள் தொடர்ந்து பரிணமித்து பல காலம் செழித்து வளர்ச்சியடைந்ததற்கு உலகில் சில உதாரணங்களே உள்ளன. ஒருவர் ஆதிசுஞ்சனகிரி மஹாசமஸ்தான மடத்தைக் காணும்போது இந்தத் தொடர்ச்சியான நிலையைக் காண முடியும். பல்வேறு காலங்களில், சமூகத்தில் சிறந்த ஆளுமைகள் உருவாகியுள்ளனர். அவர்களின் செல்வாக்கு வெறுமனே ஆன்மீக வழிகாட்டுதலை அளிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. ஜெகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ டாக்டர் பாலகங்காதரானந்தா மஹாஸ்வாமிஜி ஒரு தெய்வீக ஒளியாக இருந்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் வளர்ச்சியடைந்த கர்நாடகாவுக்கான பிரதமர் மோடியின் ஒன்பது தீர்மானங்கள்.

1. நீர் பாதுகாப்பு: நீர் சேமிப்புக்கு முன்னுரிமையும் சிறந்த மேலாண்மையும்.
2. மரக்கன்று நடுதல்: பூமியைப் பாதுகாப்பதற்காக 'தாயின் பெயரில் ஒரு மரக்கன்று' இயக்கத்தில் பங்கேற்றல்.
3. தூய்மை: பொது இடங்கள், மதத் தலங்கள், கிராமங்கள் மற்றும் நகரங்களில் தூய்மையைப் பராமரித்தல்.
4. சுதேசி: இந்தியப் பொருட்களைப் பயன்படுத்துதல்; 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவு அளித்தல்' என்ற மந்திரத்தைக் கடைப்பிடித்தல்.
5. உள்ளூர் சுற்றுலா: இந்தியாவிற்குள் சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, மேம்படுத்துதல்.
6. இயற்கை வேளாண்மை: மண் வளத்திற்காக ரசாயனம் இல்லாத வேளாண்மையைக் கடைப்பிடித்தல்.
7. ஊட்டச்சத்து உள்ளவற்றை உண்ணுதல்: தினை, ராகி உள்ளிட்ட ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை ஊக்கப்படுத்துதல். உடல்பருமன் சவால்களை எதிர்கொள்ள, உங்களின் உணவில் 10% அளவிற்கு எண்ணெய் பயன்பாட்டைக் குறைத்தல்.
8. விளையாட்டுகள் மற்றும் உடல்தகுதி: அவற்றைத் தங்களின் அன்றாட வாழ்வில் ஒருங்கிணைத்தல்.
9. சமூக சேவை: தேவையுடையோருக்கு சேவைசெய்து சமூகத்தை வலுப்படுத்தி, ஒருவரின் வாழ்க்கைக்கு ஆழ்ந்த உணர்வின் நோக்கத்தைச் சேர்த்தல்.

தேசியப் பறவையான மயிலுடன் பிரதமர் மோடியின் பந்தம்.

ஜெகத்குரு டாக்டர் பாலகங்காதரானந்தா மஹாஸ்வாமியின் கருணை மனிதர்களுக்கு மட்டுமின்றி வாழும் அனைத்துப் படைப்புகளுக்குமானது. அவர் மயில்களைப் பாதுகாக்க சமூக இயக்கத்தை முன்னின்று வழிநடத்தினார். நமது தேசியப் பறவையான மயில், பகவான் சுப்ரமணியரின் தெய்வீக வாகனமாக உள்ளது. மேலும், தமது அலுவலகக் குடியிருப்பு பெரும் எண்ணிக்கையிலான மயில்களுக்கு இல்லமாக இருப்பதாகவும், அவற்றில் பலவற்றுடன் தாம் நெருங்கிய நட்பை ஏற்படுத்திக் கொண்டதாகவும் அவர் பகிர்ந்து கொண்டார். மயில் ஒரு பண்பான, அழகானப் பறவை ஆகும்.

பிரதமரின் முழுமையான நிகழ்ச்சியைக் காண இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



பாகிஸ்தான் ராணுவத்தினரின் இதயங்களில் அச்சத்தை ஏற்படுத்தி அவர்களைத் தப்பி ஓடச் செய்தது

1971 இந்தியா– பாகிஸ்தான் போரின் போது, மேஜர் ஹோஷியார் சிங் வெளிப்படுத்திய இணையற்ற துணிச்சல் எதிரிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. அனைத்துப் பகுதிகளில் இருந்தும் வந்த இடர்ப்பாடுகளுக்கு இடையேயும் கடும் துப்பாக்கிச் சூடு மற்றும் டாங்கிகளின் சப்தத்திற்கு இடையேயும் அவர் தனது பொறுப்பைக் கைவிடவில்லை. பலத்த காயங்கள் ஏற்பட்ட போதிலும் அவர் தனது படைப் பிரிவினரின் மனஉறுதியைத் தொடர்ந்து ஊக்கப்படுத்தினார். அவரது துணிச்சல் எதிரியைத் தப்பி ஓடச்செய்தது. எதிரியை நசுக்கி தோல்வியடையச் செய்ததற்காக பரம்வீர் சக்ரா விருது பெற்ற கதாநாயகரான மேஜர் ஹோஷியார் சிங், தாய் மண்ணிற்கு சேவைசெய்ய இளைஞர்களுக்குத் தொடர்ந்து உத்வேகம் அளிப்பார்.

பிறப்பு: மே 5, 1937 | இறப்பு: டிசம்பர் 6, 1998.

துணிச்சலான மனிதர்கள் ஒரு முறைதான் இறக்கிறார்கள். நீங்கள் அவசியம் போரிட வேண்டும்; நீங்கள் அவசியம் வெற்றியடைய வேண்டும். பசந்தரில் முன்னணிப் படைகளை நிறுத்தியிருந்த மேஜர் ஹோஷியார் சிங் கூறிய இந்த வார்த்தைகள் எதிரிகளை மண்ணைக் கவ்வச் செய்ய நமது வீரர்களை தூண்டியது. ஹரியானாவில் 1937, மே 5 அன்று பிறந்த ஹோஷியார் சிங் சிறுவயதில் இருந்தே ஒழுக்கத்துடனும் அதிக மனஉறுதியுடனும் இருந்தார். அவர் படிப்பில் சிறந்து விளங்கியதுடன், விளையாட்டுகளிலும் தடகளப் போட்டிகளிலும் சிறப்பிடம் பெற்றார். 1957–ல் ஹோஷியார் சிங் ஜாட் ரெஜிமன்ட்டில் இணைந்தார், பின்னர் அவர் 3–வது கிரெனடியர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

1971 இந்தோ– பாகிஸ்தான் போரின் போது, இரு கரைகளிலும் அதிக அளவில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த பசந்தர் ஆற்றின் மீது ஒரு பாலம் கட்டும் பணி 3–வது கிரெனடியர் பட்டாலியனுக்கு ஒதுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரது படைப்பிரிவினர் பாலத்தைக் கடந்து ஜர்பாலின் ராணுவக் கோட்டையைக் கைப்பற்றுமாறு உத்தரவிடப்பட்டது. 1971, டிசம்பர் 15–ல் மேஜர் ஹோஷியார் சிங், எதிரியின் கடுமையான துப்பாக்கிச் சண்டையிலும் மனம் தளராமல் கிரெனடியர் படைப்பிரிவை வழிநடத்தி எதிரிகளை எதிர்கொண்டார். கடும் போராட்டத்திற்குப் பின் இலக்குகளை அடைவதில் அவர் வெற்றி கண்டார். டிசம்பர் 16–ல் எதிரிகள் மூன்று எதிர் தாக்குதல்களைத் தொடங்கினார்கள். கடும் பீரங்கித் தாக்குதல்களுக்கிடையே, களத்தில் உறுதியாக நின்று எதிரியைப் பின்னுக்குத் தள்ளுமாறு அவர் தனது படைப்பிரிவை தொடர்ந்து ஊக்கப்படுத்தினார். அவரது துணிச்சலாலும் தலைமைத்துவத்தாலும் உத்வேகம் பெற்ற அவரது படைப்பிரிவு ஒவ்வொரு தாக்குதலையும் முறியடித்து, எதிரிக்கு கடும் இழப்புகளை ஏற்படுத்தியது. டிசம்பர் 17–ல் இம்முறை கனரக பீரங்கி உதவியுடன் எதிரிகள் மற்றொரு தாக்குதலைத் தொடங்கினார்கள். எதிரிகள் வீசிய எறிகுண்டால் படுகாயம் அடைந்தாலும் தனது பாதுகாப்பைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு பகுதியாகச் சென்று படைப்பிரிவுகளின் மன உறுதியை உயர்த்தினார். எதிரியின் குண்டு ஒன்று ஒருவரைக் காயப்படுத்திய பின் அவர் ஒரு நடுத்தர ரக எந்திரத் துப்பாக்கியைப் பயன்படுத்தினார். அவர் ஆயுதத்தின் கட்டுப்பாட்டை எடுத்துக் கொண்டு எதிரிக்குப் பெரிய இழப்புகளை ஏற்படுத்தினார். அவர் எதிரியின் தாக்குதலை முற்றிலுமாக முறியடித்து, அவர்களைப் பின்வாங்கச் செய்தார்.

எதிரிகளில் கமாண்டிங் அதிகாரி உள்பட 85 வீரர்கள் உயிரிழந்து பெரும் சேதத்துடன் தப்பி ஓடினார்கள். மேஜர் ஹோஷியார் சிங் பலத்த காயமடைந்தாலும், சண்டை நிறுத்தம் அமலுக்கு வரும்வரை அந்த இடத்தை விட்டு புறப்பட மறுத்து விட்டார். இந்திய ராணுவத்தின் உயர்ந்த பாரம்பரியங்களில் அவருடைய வீரம், அசைக்க முடியாத மன உறுதி மற்றும் அச்சமற்ற தலைமைத்துவத்திற்காக அவருக்குப் பரம் வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது. அவர் 1998, டிசம்பர் 6 அன்று காலமானார். 2023, ஜனவரி 23 அன்று பிரதமர் நரேந்திர மோடி அந்தமான் நிகோபரின் பெயரிடப்படாத 21 பெரிய தீவுகளுக்குப் பரம் வீர் சக்ரா விருது பெற்ற 21 பேரின் பெயரைச் சூட்டினார். அவற்றில் ஒரு தீவு பரம் வீர் சக்ரா விருது பெற்ற மேஜர் ஹோஷியர் சிங்கிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.



Narendra Modi
@narendramodi

हमारी नारी शक्ति सशक्त भारत की पहचान है। देश की माताएं-बहनें और बेटियां अपनी अटूट संकल्पशक्ति, निष्ठा और सेवाभाव से आज हर क्षेत्र में भारतवर्ष का गौरव बढ़ा रही हैं।


देव्या यया ततमिदं जगदात्मशक्त्या
निश्शेषदेवगणशक्तिसमूहमूर्त्या ।

तामम्बिकामखिलदेवमहर्षिपूज्यां भक्त्या नताः स्म विदधातु शुभानि सा नः ।।



Rajnath Singh
@rajnathsingh

भारतीय लोकतंत्र के इतिहास में आज का दिन अत्यंत दुर्भाग्यपूर्ण है। संसद के विशेष सत्र के दौरान, एनडीए सरकार द्वारा लोकसभा में 131वां संविधान संशोधन बिल, महिलाओं को एक-तिहाई आरक्षण देने के लिए लाया गया था। कांग्रेस के नेतृत्व वाले इंडी गठबंधन ने आज लोकसभा में इस बिल के विरोध में वोट करके अपना महिला विरोधी चरित्र दिखा दिया है।



Amit Shah
@AmitShah

इतिहास हजारों सालों तक योगदान और विघ्न को याद रखता है...

रामसेतु में गिलहरी का योगदान हो या
हवन में हड्डियाँ डालने वाली ताड़का का विघ्न हो।



Nitin Gadkari
@nitin_gadkari

भारतीय लोकतंत्र के इतिहास का दुर्भाग्यपूर्ण दिवस..

संसद के विशेष सत्र के दौरान आज महिलाओं को एक-तिहाई आरक्षण देने के लिए लोकसभा में लाए गए 131वें संविधान संशोधन विधेयक का पारित ना होना विपक्ष की महिला विरोधी मानसिकता को दर्शाता है।



Nirmala Sitharam...
@nsitharaman

This 👇 was stated clearly by the Home Minister on the floor of the Lok Sabha. With the Opposition pressing further on the issue, HM @AmitShah ji said he is willing to add this through an amendment, within an hour, (Speaker adjourning the House to enable the process). Even then, the Opposition were determined to oppose reservation for women. INDI Alliance's hypocrisy stands exposed.



Arjun Ram Meghwal
@arjunrammeghwal

नारी सम्मान को लेकर संसद में विपक्ष के निंदनीय रवैये से आज मातृशक्ति के सपने टूटे हैं और यह दिन भारतीय लोकतंत्र के लिए बेहद दुर्भाग्यपूर्ण है।

प्रधानमंत्री श्री नरेंद्र मोदी जी के नेतृत्व में प्रस्तुत 'नारी शक्ति वंदन अधिनियम'—जो महिलाओं के अधिकार और भागीदारी को मजबूत करता है—उसमें संशोधन बिल का विपक्ष ने समर्थन नहीं दिया।

PM: Special session to end decades of wait for women's reservation

Express News Service
New Delhi, April 13


Prime Minister Narendra Modi, Delhi Chief Minister Rekha Gupta and Union Minister Annpurna Devi during the Nari Shakti Vandan Sammelan in New Delhi. PTI

PRIME MINISTER Narendra Modi on Monday declared that Parliament is on the verge of "making history", as a special session prepares to discuss crucial amendments to the Women's Reservation Act, officially known as the Nari Shakti Vandan Adhiniyam.

Addressing the Nari Shakti Vandan Sammelan in Delhi, PM Modi said the upcoming session is set to conclude a "decades-long wait" for women's political representation. "The country will take one of the most important decisions of the 21st century. This decision is dedicated to nari shakti," he said.

"A new history that will make the visions of the past a reality, and will fulfil the resolutions of the future... an India... where social justice is not just a slogan, but a natural part of our work culture and decision-making process. From Vidhan Sabhas in the states to Parliament, decades of wait will end on (April) 16. IT IS," he said.

"The credit goes to the country's matrushakti (mother power), to all MPs, and to all political parties," Modi said. "Everybody who has been working on it for the past three decades...credit goes to all of them. This is with everybody's collaboration, and for everybody's benefit."

He recently reached out to five leaders across party lines to seek their support, emphasising that social justice in India is shifting from a "slogan" to a natural part of the "work culture".

The Nari Shakti Vandan Adhiniyam, which provides one-third reservation for women in the Lok Sabha and state Assemblies, was passed in 2023. However, the proposed amendments are essential to clear the path for their implementation, starting with the 2029 general elections.

PM Modi said that through the Nari Shakti Vandan Adhiniyam, he was seeking the blessings of the "mothers and sisters of the country". He congratulated the women of the country on entering a "new era".

"In a democratic system, the need for reservations for women was felt for decades. Everybody felt the need, and there were discussions. Four decades have passed in this deliberation... the efforts of all parties and many generations are involved. Every party has tried to take this idea forward in their own way," he said.

"Even in 2023, when the Nari Shakti Vandan Adhiniyam was introduced, every party unanimously supported it. In one voice, they stated that it should, under all circumstances, be implemented by 2029. Everyone agreed on this point. While the legislation has been passed, it has not yet been implemented. Opposition members specifically emphasised that it should be in effect by 2029," said Modi.

"In the next few days, we will be moving forward in this direction. Many MPs have given their suggestions in this regard. Some have also written to me. I am grateful to them for their suggestions. I am confident that the discussions in the House will be fruitful and will lead to a consensus," he said.

"Today, I am also grateful to the Election Commission. Their preparations for the delimitation process are also underway. I am confident that the Election Commission will complete the delimitation process in a timely manner," he said.

"Today, I am also grateful to the Election Commission. Their preparations for the delimitation process are also underway. I am confident that the Election Commission will complete the delimitation process in a timely manner," he said.

Millet use to reducing oil intake: PM's nine appeals in Karnataka

Express News Service
Bengaluru, April 15


Prime Minister Narendra Modi with Karnataka Chief Minister Siddaramaiah at the airport in Bengaluru on Wednesday. ANI

PRIME MINISTER Narendra Modi on Wednesday made nine appeals to the people, saying that collective action on these fronts would ensure the quick development of both Karnataka and the country.

PM Modi was speaking after inaugurating the Sri Guru Bhairavaikya Mandir at Mandya, a memorial dedicated to the late seer Sri Balagangadharanatha Swamiji of the Adichunchanagiri Mutt.

PM Modi noted that the mutt is guided by nine ideals focused on public welfare. Drawing a parallel, he outlined nine areas where citizens could work together.

"My first appeal is we all resolve to save water and manage it better. My second appeal is related to trees and nature. Under the 'One Tree in the Name of Mother' campaign, millions have planted trees in their mothers' names. Let us also plant trees in honour of our mother and resolve to protect Mother Earth," he said.

His third appeal concerned cleanliness.

PM's fourth appeal centered on swadeshi and self-reliance, urging people to adopt Indian-made products and support domestic industries. The fifth appeal was to explore the country and appreciate its beauty. "Let us know our country, travel within it and promote domestic tourism," he said.

In his sixth appeal, PM Modi urged farmers to adopt natural farming, followed by calls for healthy eating, with an emphasis on traditional foods. Referring to former PM H D Deve Gowda's efforts to popularise ragi mudde, a staple in old Mysuru, he said the region understood the importance of millets.

"The younger generation should also include millets in their diet," PM said.

The PM noted obesity has become a major challenge in the country. "Make an effort to reduce the amount of oil in your food by 10%," he said. His eighth appeal focused on yoga and fitness, while the ninth emphasised the spirit of service.

Oppn kills bill in LS, it's NDA govt's first legislative defeat

Bill On Women's Quota Falls Short Of 2/3rds Vote; 2 Linked Bills Shelved

Kumar.Rakesh@timesofindia.com

New Delhi: A united opposition on Friday spurned PM Narendra Modi's last-minute appeal for a "conscience vote" and home minister Amit Shah's offer to write into the women's reservation bill that Lok Sabha seats in all states will go up by 50% to inflict on govt its first legislative defeat in 12 years, with the proposed law failing to get the required two-thirds vote in the House.

Opposition parties — which had alleged that the bill promising women's quota fr-

FULL COVERAGE: P 22

HISTORIC OPPORTUNITY LOST: GOVT; NEFARIOUS BID: OPPN

"Oppn loses historic opportunity to honour women. We will not rest till we ensure the country's women get reservation in legislatures" —Kiren Rijiju | Parl affairs minister

"I would say to all the members of Parliament... Keeping in mind your mother, sister, daughter, wife at your home, listen to your conscience... women of the country will become even more empowered... democracy will become even more empowered" —PM Modi, in letter to MPs

"They (oppn) chose politics over progress. Their resistance (to the amendment bill) has exposed exactly whose interests they truly serve" —Devendra Fadnavis | Maharashtra CM

"The nefarious and mischievous attempt of the PM and HM to link their dangerous delimitation proposals to women's reservation (that had already been settled) has been decisively defeated in the Lok Sabha" —Jairam Ramesh | Cong

"BJP brought the delimitation bill while keeping women's reservation bill in the front. It is trying to increase the number of seats in Lok Sabha to nearly 850... It will break the country into pieces" —Mamata Banerjee | West Bengal CM

"Tamil Nadu defeats Delhi. On April 23, we will defeat Delhi's arrogance, together with slaves who support that arrogance" —MK Stalin | Tamil Nadu CM

DEFEATED | Constitution (131st Amendment) Bill, 2026, which proposes increasing Lok Sabha strength to 850 and enabling immediate delimitation for 33% women's quota using 2011 Census data

2023 QUOTA ACT IN FORCE | Women's Reservation Act, 2023 (Nari Shakti Vandan Adhiniyam (106th Constitutional Amendment)) for 33% quota for women, linked to first Census post-enactment and subsequent delimitation. **Notified in Gazette on April 16, 2026**

'India's lines of destiny': PM opens expressway, Doon now 3 hrs away

Kautilya.Singh
@timesofindia.com

Dehradun: PM Modi on Tuesday inaugurated the Rs 11,963-crore Delhi-Dehradun expressway, a 213km high-speed corridor, which govt says will cut travel time between the two cities from around six hours to 2.5-3 hours.

Before the opening, Modi offered prayers at Daat Kali temple on the outskirts of Dehradun, and later took part in a 12-km roadshow in the city. Addressing a rally at Dehradun's Mahendra Ground, he described transport infrastructure as central to national progress. "The lines of destiny for a nation are its roads, highways, railways, waterways and expressways," the PM said, adding that India was rapidly building such "lines of destiny" to accelerate development.

The project, stretching from Asharodi in Dehradun to Akshardham in Delhi, features a 12km elevated wildlife corridor between Asharodi and Ganeshpur.

▶Eco game changer, P 3

ASIA'S LONGEST WILDLIFE CORRIDOR

- 6-lane expressway goes via **Baghpat, Shamli and Saharanpur**
- 12km elevated wildlife corridor is Asia's longest. Eway has **6 animal & 2 elephant underpasses**, sound & light barriers
- 51km greenfield road built to **connect eway with Haridwar**


Photos: PTI
Video grab of PM reviewing the wildlife corridor on the expressway's elevated section in Saharanpur

Cabaret to global pop, Asha lived 'crossover' before it was buzzword

Mohua.Das@timesofindia.com

There are singers who belong to an era, and then there is Asha Bhosle, who treaded decades like passing trends she would dip into and then outdo.

A vocal sponge, Bhosle was soaking up the pop and jazz grooves long before the internet made it easy. "I used to watch Carmen Miranda a lot and try to imitate her style," she had said in an interview, "like I did later with Shirley Bassey."

Tucked into voluminous saris, the Asha tai who loved dishing out her signature 'Mon ki Dhi' and jaggery kheer was the same woman who watched Bill Haley's Rock Around the Clock three times just to nail the phrasing for 'Ennu Meenu Deeku'; who received a letter from the Vatican for her rendition of 'Ave Maria'; and became the first Indian singer to form a pop group overseas in Britain, the West India Company, in the 1980s.

At a time when playback voices in India were still nearly boxed — classical, romantic, devotional — Bhosle was slipping between them. Trained in Hindustani classical music, she said, "If you

HER SONGS WILL FOREVER ECHO IN PEOPLE'S LIVES: PM

"... One of the most iconic and versatile voices India has ever known. Her extraordinary musical journey enriched our cultural heritage... Her soulful melodies carried timeless brilliance... She will continue to inspire generations, and her songs will forever echo in people's lives" — PM Narendra Modi

"Asha Tai not only carved out a unique identity with her sweet voice but also enriched Indian music further through her melodies. Her extraordinary ability to adapt to every genre of music won over every heart... Through her voice, she will forever remain in our hearts" — Home minister Amit Shah

"The news of the demise of the great singer Asha Bhosle ji is extremely heartbreaking. Through her voice, her art will forever remain immortal among us" — LoP Rahul Gandhi

"As a playback singer, she lent her voice to thousands of films and music albums. The echo of her sweet melodies will resonate forever" — Defence minister Rajnath Singh

"...An era of playback singing comes to an end. An epitome of legendary versatility and grace, her unique style of singing was appreciated by millions across the globe" — Congress president Mallikarjun Kharge

"A legend whose voice defined eras, Asha Bhosle ji leaves behind an enduring musical legacy. Her contribution to Indian music will always be remembered with deep respect" — I&B minister Ashwini Vaishnaw

SUPER 11 Tracks

- Aaiye meherbaan | Howrah Bridge (1958)
- Aage bhi jaane na tu | Waqt (1965)
- Aaja aaja, main hoon pyar tera | Teesri Manzil (1966)
- Raat akeli hai | Jewel Thief (1967)
- Chura liya hai tumne jo dil ko | Yaadon Ki Baraat (1973)
- Dum maaro dum | Hare Rama Hare Krishna (1971)
- Chain se humko kabhi | Pran Jaye Par Vachan Na Jaye (1974)
- Phirse aaiyo badra bideshi | Namkeen (1982)
- In aankhon ki masti | Umrao Jaan (1981)
- Mera kuchh saamaan | Ijaazat (1987)

India, Austria to strengthen trade, security relations

Rezaul H Laskar
letters@hindustantimes.com

NEW DELHI: India and Austria on Thursday agreed on measures to strengthen cooperation in defence, counter-terrorism, trade and mobility of professionals, as Prime Minister Narendra Modi and Austrian Chancellor Christian Stocker emphasised that problems cannot be resolved through the conflicts in West Asia and Ukraine.

Stocker, the first Austrian chancellor to visit India in more than four decades, is accompanied by a 60-member business delegation, signalling Vienna's intention to ramp up trade and investment ties by building on the India-European Union (EU) free trade agreement that is


Prime Minister Narendra Modi, with Austrian Chancellor Christian Stocker in New Delhi on Thursday. RAJ K RAJ/HT PHOTO

a reliable partner and valued by

சாலைகள் கட்டமைப்பு மூலம் தேசக் கட்டுமானம்

இமயமலையின் பனிப்பாறைகள் முதல் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் வரை, சுட்டெரிக்கும் பாலைவனங்கள் முதல் அடைய இயலாத நிலப்பரப்புகள் வரை எல்லைச் சாலைகள் அமைப்பின் வீரத்தின் அழியாத முத்திரை எங்கும் தெளிவாகத் தெரிகிறது. எல்லைகளில் பணியமர்த்தப்பட்ட வீரர்களுக்கு எல்லைச் சாலைகள் அமைப்பால் அமைக்கப்படும் சாலைகள் மிகவும் உத்திசார்ந்த முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்; ஊரகப் பள்ளத்தாக்குகளில் வசிக்கும் கிராமத்தினருக்கு, அவர்கள் நம்பிக்கைப் பாலமாக திகழ்கின்றனர். 1960, மே 7–ல் உருவாக்கப்பட்ட எல்லைச் சாலைகள் அமைப்பு கடின உழைப்பு மூலம் எவற்றையும் அடைய இயலும் என்ற உத்வேகம் அளிக்கும் குறிக்கோள் மூலம் நீடித்திருக்கிறது

இந்தியாவின் எல்லைப் பகுதிகள் மற்றும் அண்டையில் உள்ள நட்பு நாடுகளில் எல்லைச் சாலைகள் அமைப்பின் கட்டுமானம்.

64,100 கிலோமீட்டர் தொலைவிலான சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

1,179 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

7 சுரங்கங்கள் மற்றும் 22 சிறிய விமானத்தளங்கள் கட்டப்பட்டுள்ளன.

- பூட்டான், மியான்மர், ஆப்கானிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தானில் உள்கட்டமைப்பு மேம்பாடு மூலம் பிராந்தியப் போக்குவரத்து மற்றும் உத்திசார் கூட்டாண்மைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

250

2024 மற்றும் 2025–ல் எல்லைச் சாலைகள் அமைப்பு மூலம் 250 உள்கட்டமைப்புத் திட்டங்கள் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.



தேசமே முதலில் என்பது நமது தீர்மானம். தேசம் அதன் எல்லைகளில் இருந்து தொடங்குகிறது. அதனால், எல்லை உள்கட்டமைப்பு மேம்பாடு நாட்டின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாக உள்ளது. எல்லைச் சாலைகள் அமைப்பு நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுரங்கக் கட்டுமானப் பணிகளை விரைவாக நிறைவு செய்கிறது.

–நரேந்திர மோடி, பிரதமர்

NEW INDIA SAMACHAR FORTNIGHTLY

RNI NO.: DELENG/2020/78811 MAY 1-15, 2026

RNI Registered No DELENG/2020/78811 (Publishing Date: April 20,2026 Pages: 58)

EDITOR IN CHIEF
Dhirendra Ojha
Principal Director General
Press Information Bureau, New Delhi

PUBLISHED:
Kanchan Prasad
Director General, on behalf of
Central Bureau Of Communication

PUBLISHED FROM:
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003